இவரது புத்தகங்கள் உலக அளவில் 100 மில்லியன் பிரதிகளுக்கும் மேல் விற்று சாதனை

பெரிதாககவே சிந்தியுங்கள்!

உங்கள் கனவுகள் மெய்ப்பட
நேராக சிந்தியுங்கள்!
அபார துணிச்சலுடன் இருங்கள்!

Think Big! NOW IN TAMIL

ரியோ ஒகாவா

சர்வதேச ஆன்மீகத் தலைவர்

JAICO

பெரிதாகவே சிந்தியுங்கள்!

உங்கள் கனவுகள் மெய்ப்பட
நேராக சிந்தியுங்கள்!
அபார துணிச்சலுடன் இருங்கள்!

Think Big! NOW IN TAMIL

ரியோ ஒகாவா

ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
மும்பை டில்லி பெங்களூரு புவனேஷ்வர் கொல்கத்தா
ஹைதராபாத் சென்னை அஹமதாபாத் லக்னோ போபால்

பதிப்பாளர்:
ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
A-2, ஜாஷ் சேம்பர்ஸ், 7அ சர் ஃபிரோஷா மேத்தா சாலை,
போர்ட், மும்பை - 400001
jaicopub@jaicobooks.com
www.jaicobooks.com

© Ryuho Okawa
Tamil translation © Happy Science
உரிமை பதிப்பகத்தாருக்கு.

THINK BIG!
பெரிதாகவே சிந்தியுங்கள்!
ISBN 978-81-8495-692-4

தமிழாக்கம்: எஸ். ராமன்

First Jaico Impression: 2015
Third Jaico Impression: 2016

இந்த நூலின் எந்த பகுதியையும் மறுபதிப்பு செய்வதோ, எந்த வடிவத்திலும் அனுப்புவதோ, மின்னணு இயந்திரம் அல்லது இயந்திரப்பயன்பாட்டு வகையில் நகலச்சு எடுத்தல், மறுஅச்சு செய்தல் உள்ளிட்ட எந்த முறையையும் பயன்படுத்துவதோ, தகவல்களைப் பாதுகாத்து வெளிக்கொணரும் முறைகளைக் கையாள்வதோ பதிப்பாளரின் எழுத்து மூலமான அனுமதியின்றி செய்யக்கூடாது.

பொருளடக்கம்

முன்னுரை

1 ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குதல்

1.1 அமெரிக்காவில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்

“மன்னியுங்கள்?” என்னும் வினாவுடனான எனது போராட்டங்கள்

எனது வாழ்க்கையை மாற்றிய “என்னால் முடியும்”

வால் ஸ்ட்ரீட் அதி திறமைசாலிகளின் போர்க்களம் என்பதை நான் புரிந்து கொண்டேன்

1.2 கனவு காணுங்கள், அது நனவாகும்வரை விடாப்பிடியாக இருங்கள்

மிகப்பெரிய இலக்கை தீர்மானியுங்கள். கூடவே சின்னஞ்சிறிய இலக்குகளையும் உருவாக்கிக் கொள்ளுங்கள்

கல்லூரி நாட்களில் பலவிதமான ஆர்வங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்

இளமையில் நாம் ஆழ்ந்து படிக்கும் புத்தகங்கள் நம்மிடம் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும்

கேடு நிறைந்த புத்தகங்களை தவிர்த்து விடுங்கள்

நமது சிந்தனைகள் நம் வாழ்க்கை மீதுபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்

மனதில் நாம் விதைக்கும் விதைகளே நமது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன

1.3 நேர்மறையாக சிந்தியுங்கள்

எதிர்மறை சிந்தனை உங்கள் மனதில் வேரோடிப் போக அனுமதிக்காதீர்கள்

ஒரு மூங்கிலைப்போல் உறுதியாக வளர்வேன் என்று நம்புங்கள்
1.4 நம்பிக்கை: அச்சத்துக்கு எதிரான அற்புத ஆயுதம்
அச்சம் வேணடாம், கடவுள் நம்முடன் இருக்கிறார்
முயற்சி முயற்சி, தொடர் முயற்சி
1.5 உங்கள் நாளின் 24 மணி நேரத்தை எப்படி பயன்படுத்துவது
சின்னஞ்சிறு நேரத்துளிகள் வெற்றிக்கு வழி வகுக்கும்
மூளைக்குள் வளர்ப்போம், ஆண்பெண் என்னும் இருவேறு பண்புகளையும்
பன்முகச் செயல்பாட்டில் உங்கள் பார்வை பதியட்டும், பல முனைகளிலும்
பன்முகச்செயல்பாடு சிரமம் தந்தால், விரைந்து முடிவு எடுக்கப் பழகுங்கள்
ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குங்கள்
2 வெற்றிக்காக திட்டமிடுங்கள், மிக நேர்த்தியாக
2.1 “நான் நன்றாக இருக்கிறேன்!”என்னும் மனக்கிளர்ச்சி
ஒரு உயர்நிலைப் பள்ளி அனுபவம்
ஒரு ஜப்பானியப் பிரதமரின் எதிர்பாராத ஜென் புதிர்
நாம் யார் என்பதை நமது நடத்தையே முடிவு செய்கிறது
2.2 எளிமையாக சிந்தியுங்கள்
அறிவும், அனுபவங்களும் அதிகப்படியாவது உங்கள் சிந்தனையை சிக்கலாக்கிவிடும்
மனதில் படியும் சிலந்தி வலைகளை அறுத்தெறியுங்கள்
உயர்ந்த மதிப்பீடுகளுக்காக சிறிய விஷயங்களை வெகு இலாவகமாக தியாகம் செய்யுங்கள்
அளவுக்கு அதிகமான தாழ்வு மனப்பான்மையும் சுயநலத்தின் ஒரு வடிவம்தான்
2.3 துணிச்சலாக இருங்கள், பிரச்சனைகளை எதிர்கொள்ளுங்கள்
பிரச்சனைகளை நேரடியாக அணுகுங்கள். அவற்றை உங்கள் வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொள்ளுங்கள்

துணிச்சலாக இருங்கள்

விளிம்புக்குள் தள்ளப்படும்போது அதிலிருந்தே நாம் முகிழ்த்தெழுகிறோம்

சுய ஊக்கம் கொள்ளுங்கள், உங்கள் சுய உறுதியைப் பயன்படுத்தி

பழக்கத்தின் வலிமையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

2.4 உங்களுக்கான சுய சக்தியை உருவாக்குங்கள்

பாசிட்டிவ் அலைக்கதிர் வீச்சுக்கு முயற்சியுங்கள்

இருண்மை தவிர்த்து, ஒளி மிக்கவராக இருங்கள்

சாக்குபோக்கு சொல்வதை நிறுத்துங்கள்

முணுமுணுப்பாளர்களுக்கு காதல் கனியாது

தொடர்ச்சியான சுய பரிசோதனை இன்றி எதுவுமே முழு நிறைவடையாது

3 பெரிதாகவே சிந்தியுங்கள்

3.1 நாம் சிந்திக்கும் வழி வலிமையானது

தமது சிந்தனை வலிமை மிக்கது என்பதை ஜப்பானியர் உணர வேண்டும்

நேர் சிந்தனை தத்துவத்தின் மூலம் நான் பெரிதாக நினைக்கத் தொடங்கினேன்

என்னைப் பற்றி நான் எடைபோடுவதற்கும், பிறர் என்னை எடைபோடுவதற்கும் இடையே உள்ள வேறுபாடு

ஜப்பானும் அமெரிக்காவும் உங்கள் திறமையை வெவ்வேறான விதத்தில் மதிப்பிடுகின்றன

3.2 உங்கள் சாதனைகளின் அளவு உங்கள் சிந்தனையின் வழியாகவே தீர்மானிக்கப்படுகிறது

பெரிய தரிசனம் கிடைப்பதுவரை எனக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை

நீங்கள் சிறிய அளவில் சிந்தித்தால் பெரிய அளவில் வெற்றி காண முடியாது

3.3 உயர்ந்த ஆசைகள் கொண்டிருங்கள் தொடர்ந்து பாடுபடுங்கள்

தேர்வுகளில் சாதனை புரிந்தோர் எதிர்மறையாக சிந்திப்பவர்களே

தோல்விக்கான சாத்தியம் அதிகமாய் இருந்தாலும் உங்கள் இலக்கு உயர்ந்ததாக இருக்கட்டும்

நீண்ட நாட்கள் நினைத்துக்கொண்டிருப்பவை இறுதியில் நிறைவேறி விடும்

3.4 இளைய தலைமுறைகளின் வலிமை வழியாக ஒரு வருங்கால செழிப்பை சிருஷ்டியுங்கள்

உங்கள் இருபதுகளில் நீங்கள் கற்றவை உங்களுக்கு சக்தியை கொடுக்கும்

ஜப்பான் ஒரு முக்கிய நாடாக மாறுவதற்கு நிறைய வெற்றிகரமானமக்களை அது உற்பத்தி செய்ய வேண்டும்

எதை தவிர்த்து விட்டீர்கள் என்று கேட்காதீர்கள் எதை சாதித்தீர்கள் என்று கேளுங்கள்

4 வெற்றிக்கு வழி

4.1 கஷ்டப்பட்டு படித்து உழைத்த சிறுவன்

சிறுவயதில் எனக்கு நம்பிக்கையூட்டிய ‘அழகற்ற வாத்துக் குஞ்சு’ கதை

மக்களால் மாற முடியும்

4.2 உங்கள் காலடியில் வைரங்கள் கிடக்கலாம்

ஒரு பேச்சாளர் பணக்காரர் ஆன கதை

நம் எல்லோரிடமும் ஒரு தெய்வீக வைரம் இருக்கிறது

4.3 நாம் எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பது போலவே ஆகிவிடுவோம்

நம் கனவுகள் ஏன் மெய்ப்படவில்லை என்பதற்கான காரணங்கள்

வெளித் தோற்றத்தாலும் செயல்களாலும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று காட்டுங்கள்

4.4 அறிவே சக்தி

மற்றவர்களுக்கு தெரிந்த அளவு புரிந்துகொள்ள இரண்டு மூன்று தடவை முயற்சி செய்யுங்கள்

நிறைய புத்தகங்கள் படிப்பதன் மூலம் தொடங்கினேன்

4.5 காலமே பணம், பணமே காலம் லம

ஒவ்வொருவருக்கும் ஒரு நாளில் ஒரே அளவு நேரமே உள்ளது

வெற்றி அடைய விடாமுயற்சி வேண்டும்

பணம் நேரத்தை மிச்சம் பிடிக்கும்

4.6 சிரமமான பிரச்சனைகளை சமாளிக்க அதன் சிறு பிரிவுகளை பயன்படுத்துங்கள்

எந்த பிரமாண்டமான கரடியும் மலையைவிட பெரிதல்ல

கைவிட்டு விடாதவர்களே வெற்றிக் கனியைப் பறிப்பர்

5 பெருக்குங்கள் உங்கள் துணிச்சலை, நூறு மடங்குக்கும் அதிகமாக

5.1 உங்கள் உள் அழைப்பை அடையாளம் காணுங்கள்

துணிவு: இளமையின் உற்சாகத் துளிகளில் ஒன்று

உங்கள் நோக்கத்தை நிறைவேற்றும் முடிவுகளை எடுப்பதே துணிச்சலின் முதல் கட்டம்

ஒளிமிகுந்த இளம் வாலிபம்

5.2 சவால்களை சந்தியுங்கள். தோல்விக்கு பயப்படாதீர்கள்

தோல்விகளும், பின்னடைவும் இல்லாத வாழ்க்கையை ஒருபோதும் விரும்பாதீர்கள்

நமது பயத்தை வெற்றி கொள்வது எப்படி?

5.3 திட்டமிடுங்கள் ஒரு புரொஃபஷனல் ஆக மாறுவதற்கு

நீங்கள் ஒரு புரொஃபஷனல் ஆக வேண்டுமா. வாரி வழங்குங்கள் உங்களிடம் இருப்பதை தினந்தோறும்

புரொஃபஷனல்கள் இடையூறுகளை இன்முகத்தோடு ஏற்றுக் கொள்தோடு அதை வெற்றியும் கொள்கிறார்கள்

மாபெரும் பொறுப்புகளை ஏற்க உறுதி கொள்ளுங்கள்

5.4 உங்கள் துணிச்சலை நூறு மடங்கு பெருக்கிக் கொள்ளுங்கள்

தீர்க்க தரிசனம் படைத்தவராய் இருங்கள், அது நிகழ்வதற்கான வழிகளைப் பாருங்கள்

சமயமும் அரசியலும் கட்டாயம் தேவை, மக்களின்

மகிழ்ச்சிக்கு

சமயத்தலைவர்களையும், அரசியலாளர்களையும்
மதித்தால் நாடு வளம் பெறும்

நம் இலக்கைக் குறித்த விழிப்புணர்வு நமது துணிச்சலை
நூறு மடங்காகப் பெருக்கும்

பின்னுரை

ஆசிரியர் குறிப்பு

ஹேப்பி சயின்ஸ்

தகவல் தொடர்பு விபரங்கள்

ஹேப்பி சயின்ஸ் பல்கலைக் கழகம்

ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டி

ஐஆர்ஹெச்

முன்னுரை

உங்களில் பலரும், உங்களுடைய இளமைக்காலத்தில் பல வகையான சோதனைகளை சந்தித்திருப்பீர்கள். அவற்றில் பலவும் உங்களை திக்கு முக்காடச் செய்யும் அளவுக்கு பெரிதானதாகவே உங்களுக்குத் தோன்றியிருக்கும். அது போலத்தான் தாழ்வு மன்ப்பான்மையும். இதனால் பாதிக்கப்படாத இளைஞர்களை விரல் விட்டு எண்ணி விடலாம். இவற்றுக்கு எதிரிடையாக, அதீத தன்னம்பிக்கையால் வாழ்வை பாழாக்கிக் கொண்டவர்களும் உண்டு.

மேலே கூறியவையெல்லாம் உங்களைப் பற்றியதாக உங்களுக்குத் தோன்றினால் இவற்றை உங்கள் எதிர்காலப் பாதையை கட்டமைக்கும் உங்கள் வாழ்க்கையின் உற்சாகமான கணங்கள் என்று அதைக் கொண்டாடுங்கள். அப்போதும் உங்கள் மனம், தாழ்வு மனப்பான்மை மற்றும் அதீத தன்னம்பிக்கை என்னும் இரண்டு உணர்ச்சிகளுக்கு இடையே அங்குமிங்குமாக ஊசலாடிக்கொண்டிருக்கலாம். என்றாலும் அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை.

இதுவே உங்களுக்கான எனது பரிசு: பெரிதாக சிந்தியுங்கள்: ‘டோக்கியோ ஸ்கை ட்ரீ’ நமது தலை நகரத்தின் தலைப்பாகைக் கட்டிடம். ஆனால் இதற்கு அடிப்படை ஒரு கட்டுமான வரைபடம்தான் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே உங்கள் கனவு நனவாக வேண்டுமானால், எதையும் பெரிதாகவே சிந்தியுங்கள்; அடிமேல் அடி வைத்து தொடர்ச்சியாக முன்னேறுங்கள். இந்த நேரத்தில் வாழ்க்கையின் உண்மை உங்கள் முகத்தில் அறைந்தாலும், அதை துணிச்சலுடன் எதிர்கொள்ளுங்கள். உங்கள் எதிர்காலக் கனவை நிறைவேற்றியே தீருவேன் என்று மன உறுதி கொள்ளுங்கள்.

ரியோ ஒகாவா
நிறுவனர் மற்றும் சி இ ஓ
ஹேப்பி சயின்ஸ் குழுமம்

1

ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குதல்

1.1

அமெரிக்காவில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதில் எனக்கு ஏற்பட்ட அனுபவங்கள்

“மன்னியுங்கள்?” என்னும் வினாவுடனான எனது போராட்டங்கள்

இந்த அத்தியாயம், பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது புதிதாக வேலையில் சேர்ந்திருக்கும் இளம் தலைமுறைகளுக்கானது. எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையிலும் மனிதர்களுக்கு கை கொடுக்கக் கூடிய, வெற்றிகரமான வாழ்க்கைக்கும், ஒளிமயமான எதிர்காலத் துக்கும் பயன்படத்தக்க மதிப்பு மிகுந்த கருத்துக்கள் சிலவற்றை உங்களுடன் இங்கே நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இவை வாழ்க்கைப் பாதையில் எனது நேரடியான கள அனுபவங்கள்.

எனது இளமைப் பருவத்தைப் பற்றி நினைக்கும்போதே, நியூயார்க் நகரத்தில் ஒரு பொது வாணிப நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்த அந்த சிரமமான நாட்களே என் நினைவுக்கு வருகின்றன. வெளிநாட்டில் வேலை செய்யும் கஷ்டங்களை விடவும், ஆங்கிலத்துடனான என்னுடைய போராட்டமே என்னை படுத்தி எடுத்தது. கம்பெனி என்னை ஜப்பானில் இருந்து நியுயார்க் நகரத்துக்கு மாற்ற முடிவு செய்தபோது, அந்த கம்பெனியில் நான் சேர்ந்து இரண்டு வருடங்களே ஆகியிருந்தது. ஜாகை மாற்றி நான் நியூயார்க் நகரத்துக்கு வந்தபோது, ஏற்கனவே அந்த பதவியில் இருந்தவர் அந்த வேலையைப் பற்றி எனக்கு சொல்லித் தருவதற்கு வெறும் ஐந்து நாட்கள்தான் ஒதுக்கியிருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக, அதுதான் என்னுடைய முதல் விமானப்பயணம். அதனால், ஜெட்லாக் எனப்படும் அவஸ்தையால் நான் பெரும் சிரமத்துக்கு

ஆளானேன். இரவும் பகலும் அப்படியே தலைகீழாக மாறிப்போனதால், ஒருவாரத்துக்கு என்னால் எதையுமே சரியாக சிந்திக்கவோ பேசவோ முடியவில்லை. வேலை விபரங்களைப் பற்றி அவர் எடுத்துச் சொன்னது எங்கோ கிணற்றுக்குள் இருந்து பேசியதுப் போலவே எனக்குத் தோன்றியது. அவர் ஜப்பானிய மொழியில்தான் பேசினாஎ. ஆனாலும் என்னால் ஒரு சில விஷயங்களையே புரிந்து கொள்ள முடிந்தது.

சில நாட்களிலேயே அந்த நபரும் காணாமல் போய்விட்டார். ஆனால் நான் அப்போதும் என்னுடைய தாய் மொழியில் விஷயங்களைப் புரிந்து கொள்வதில் தடுமாறிக் கொண்டுதான் இருந்தேன். தன்னுடைய விடுமுறையைச் செலவிட மேற்கு கடற்கரைக்கு போய்விட்ட அந்த நபர், அங்கிருந்து அப்படியே நேராக ஜப்பானுக்குப் போய்விட்டார். எனவே இப்போது என்னுடன் ஒரு பெரிய மேஜை, ஒரு நாற்காலி, ஒரு தொலைபேசி, ஒரு ஐபிஎம் தட்டச்சு இயந்திரம் மற்றும் ஸ்டீவ் ஜாப்ஸால் உருவாக்கப்பட்ட ஒரு ஆப்பிள் II கம்ப்யூட்டர் ஆகியவை மட்டும்தான். ஆப்பிள் கம்ப்யூட்டர் அப்போது ஜப்பானில் அத்தனை பரவலாக புழக்கத்தில் இல்லை. ஆனால் அமெரிக்காவிலோ அது வெகு பிரபலம். அமெரிக்காவில் பலரும் ஏற்கனவே பெர்சனல் கம்யூட்டர்களை பரவலாக பயன்படுத்த ஆரம்பித்திருந்தார்கள்.

இப்போதும் நான் ஜெட்லாக் மயக்கத்திலிருந்து விடுபட்டி ருக்கவில்லை. ஆனால் அலுவலகத்திலோ நாள்தோறும் கணக்கற்ற தொலைபேசி அழைப்புகள் நாளொன்றுக்கு 100 முதல் 150 தடவைகள் வரை தொலைபேசி அலறும். ஆனால் அதை விடவும் கொடுமை, அவை அனைத்துமே ஆங்கில அழைப்புகளாக இருப்பதுதான். இது என்ன முட்டாள்தனம்? அமெரிக்க அழைப்புகள் ஆங்கிலத்தில் தானே இருக்கும். அப்போது அந்த அலுவலகமே எனக்கொரு சித்திரவதை முகாம் போலத்தான் தோன்றியது. அந்த நாட்களை இப்போது திரும்பிப் பார்க்கும் போது, வெறுப்பு மண்டிய “மன்னியுங்கள்” என்னும் அந்த சொல்லின் நடுங்க வைக்கும் நினைவுகளே என் கண் முன்னால் தோன்றுகிறது. “மன்னியுங்கள்?” அல்லது “என்னை மன்னிக்குமாறு வேண்டுகிறேன்”- இவை தொலைபேசியில் அழைப்பவர்கள் என்னிடம் பல முறை உதிர்க்கும் சொற்கள். ஏனென்றால் அந்த அளவுக்கு என்னுடைய ஆங்கிலம் அவர்களை படுத்தி எடுத்திருக்கிறது. அதனால்தான் அவர்கள் என்னிடம் மீண்டும் மீண்டும் நான் அவர்களிடம் என்ன சொல்ல

வருகிறேன் என்று வினவுகிறார்கள். இப்படி மூன்று தடவைகள் என்னிடம் சொன்னாலே போதும்.... என்னுடைய ஆங்கிலத்தைப் பற்றிய தாழ்வு மனப்பான்மை எனக்குள் கிளை விட்டுப் படர்வதற்கு. இதன் மூலம் என்னுடைய ஆங்கிலம் அவர்கள் பேசுவதைப் போல அத்தனை இலாவகமாக இல்லை என்பது வெட்ட வெளிச்சமானது.

என்னை பலவீனப்படுத்தியது "மன்னியுங்கள் என்னும் அந்த ஒரு சொல் மட்டுமல்ல, 'அங்கே ஆங்கிலம் பேசத் தெரிந்தவர்கள் யாரேனும் இருக்கிறார்களா?" என்று என்னிடமே கேட்கும்போது உண்மையாகவே நான் உடைந்து போவேன். ஆனால் அவர்களையும் குறை கூற முடியாதுதான். என்னை விடவும் மிக நேர்த்தியாக ஆங்கிலம் பேசும் ஒருவரிடம் பேச அவர்கள் விரும்புவது நியாயமானதுதானே. உடனே நான் என்னைச் சுற்றிய சூழல் எப்படி இருக்கிறது என்று திரும்பிப் பார்ப்பேன். என்னுடைய ஜப்பானிய நண்பர்கள் எல்லோருமே நுனி நாக்கு ஆங்கிலத்தில் தத்தமது தொலைபேசிகளில் பரபரப்பாக பேசிக்கொண்டிருப்பார்கள். அமெரிக்கப் பணியாளர் களும் அது போலவே அவரவர் அழைப்புகளில் மூழ்கிக் கிடப்பார்கள். எனவே இந்த விஷயத்தில் எனக்கு உதவ அங்கு எவருமே இல்லை. அதனால் என்னுடைய அலுவலகத்தின் துவக்க நாட்களில் நான் எந்த அளவுக்கு நிலை குலைந்து போயிருப்பேன் என்பதை உங்களால் புரிந்து கொள்ள முடியும்.

எனது வாழ்க்கையை மாற்றிய "என்னால் முடியும்"

"ஆங்கிலம் தெரிந்தவர்கள் வேறு யாரேனும்..." அவர்கள் முடிக்கும் முன்பே அவர்கள் என்னிடம் என்ன கேட்க வருகிறார்கள் என்பதை நான் புரிந்து கொள்வேன். ஆனால், எனக்காக அந்த அழைப்புகளை ஏற்கச் சொல்ல அங்கு வேறு எவருமே இல்லை. எனவே ஒரு கட்டத்தில் நானே அதை எதிர் கொள்ள தயாரானேன். என் முழு வலிமையும் ஒன்று திரட்டி, வேண்டுமென்றே மிக தாழ்ந்த குரலில் "என்னால் முடியும்" என்று தொலைபேசி ரிசீவரில் மெதுவாகச் சொல்வேன். அதைக் கேட்டதும், எங்கே என்னை காயப்படுத்திவிட்டோமோ என்னும் சங்கடமான உணர்வில் அழைப்பாளர்கள் ஒரு கணம் பேச்சற்றுப் போவார்கள். அந்தக் கணம்தான் எனக்கு கிடைத்த வாய்ப்பு. அந்த கனமான மௌனத்திலிருந்து அவர்கள் விடுபடுவதற்கு முன்பே நான் என் மனதில் தோன்றிய

சொற்களையெல்லாம் அவர்களிடம் வீசி எறியத் தொடங்கினேன்.

எனக்குத் தெரியும், அந்த இரண்டு நொடிகளுக்கு மேலும் அவர்களை காக்க வைத்தால் என்ன நடக்கும் என்று. அடுத்த நொடியே “மன்னியுங்கள்” என்னும் வினா என்னை நோக்கி வீசப்பட்டுவிடும். மட்டுமல்ல, இது போல் மேலும் மூன்று “மன்னியுங்கள்” என்னை நோக்கி வீசப்பட்டால் என்னிடம் கொஞ்சம் நஞ்சம் மிச்சமிருக்கும் மன உறுதியும் என்னிடமிருந்து காணாமல் போய்விடும் என்றும் எனக்கு நன்றாகவே தெரியும். எனவே அவர்களுக்கு அப்படி ஒரு வாய்ப்பே கொடுக்கக் கூடதென்று நான் முடிவு செய்தேன். தொலைபேசியில் “என்னால் முடியும்” என்று சொல்லிக் கொண்டே, என் மனதில் தோன்றிய ஆங்கிலச் சொற்களை எல்லாம் நான் அவர்கள் மீது வீசி எறியத் தொடங்கினேன். துவக்கத்தில் நான் என்ன சொல்ல வருகிறேன் என்று புரியாமல் தடுமாறும் அவர்கள், ஒரு கட்டத்தில் “ஓகே, புரிந்தது, சரி சரி” என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். அந்த சூழ்நிலைக்கு பொருத்தமான எனக்கு தெரிந்த சொற்களை வாரி இறைத்ததன் மூலம், மெதுவாக நான் வாடிக்கையாளர்களுடன் சகஜமாகத் தொடங்கினேன்.

இது என்னுடைய வாழ்க்கையின் ஒரு மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்தது. நான் என்னுடய மனப்பான்மையை அடியோடு மாற்றினேன். அதன்பின் மீண்டும் ஒருவர் என்னைப்பார்த்து ‘மன்னியுங்கள்’ என்று சொல்லும் ஒரு வாய்ப்பை தராத அளவுக்கு உறுதியான ஒரு மனநிலையை நான் உருவாக்கிக் கொண்டேன். என்னை விடவும் நன்றாக ஆங்கிலம் பேசும் ஒருவர் இருக்கும் பகுதிக்கு இணைப்பு கொடுக்க முடியுமா என்று என்னிடமே கேட்கும் போது ஏற்படும் அவமானத்தை விட பெரிய அவமானம் வேறொன்றுமில்லை. எனவே “என்னால் முடியும்” என்னும் உறுதிமொழியை எனக்குள்ளே எடுத்துக் கொண்ட நான், இங்கே அவர்களுடைய அழைப்பை ஏற்க என்னைத்தவிர வேறு எவரும் இல்லை என்று விளக்கினேன்.

துவக்கத்தில், பல சந்தர்ப்பங்களிலும் எனக்கு வரும் அழைப்புகளை எடுத்து பேசுமாறு நான் என்னுடைய சக பணியாளர்களிடம் வேண்டிக் கொண்ட ஒரு காலம் இருந்தது. ஆனால் நான் தொடர்ந்து அப்படியே செய்து வந்தால் அது

என்னை தோல்வியிடம்தான் கொண்டு சேர்க்கும் என்பதை வெகு விரைவிலேயே நான் புரிந்து கொண்டேன். அதன்பின் எனக்கு வரும் அழைப்புகளை ஏற்குமாறு பிறரிடம் கேட்பதை நான் அடியோடு நிறுத்திவிட்டேன். அந்த 25 அல்லது 26 வயதில் என் மனப்பாங்கில் ஏற்பட்ட இந்த மாற்றம் என் வாழ்க்கையின் மிகப்பெரிய திருப்பு முனையாக அமைந்தது. சொல்லப்போனால் என்னுடைய ஆங்கில அறிவு எத்தனை பலவீனமானதாக இருக்கிறது என்று தெரிந்த கொண்ட நானே, ‘நான் ஆங்கிலத்தில் நன்றாக பேசுவேன்’ என்று எந்தவிதமான ஆழ்மனத் தயக்கங்களும் இல்லாமல் சொல்வது எத்தனை கஷ்டமானது என்பது எனக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். எப்படியானாலும், அதன்பின்பு நான் யதார்த்தத்தை ஆங்கிலத்தில் பேச முடிவு செய்தேன். எனது வாடிக்கையாளர்களிடம் இத்தகைய ஒரு உறுதியுடன் நான் பேச முற்பட்டது, எனக்கு மதிப்பீடு மிகுந்த ஒரு துவக்கமாக அமைந்தது.

அமெரிக்காவுக்கு போகும் ஒருவருக்கு எந்த அளவுக்கு ஆங்கிலம் தெரிய வேண்டுமோ அந்த அளவுக்கு கூட நான் ஆங்கிலத்தை படிக்கவில்லை. ஒரு முறை அமெரிக்கா போய்விட்டால் ஆங்கில அறிவு தானாகவே வந்து விடும் என்று நினைத்ததே அதற்குக் காரணம். ஆனால் யதார்த்தம் எத்தனை கடுமையானது என்பதை மிகத் தாமதமாகவே புரிந்து கொண்டேன். என்னுடைய இந்த பொறுப்பற்றத்தனத்தால் அமெரிக்காவில் நான் பல விதமான கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டி வந்தது. ஆனால் அதுவே எனக்கு விதவிதமான அனுபவங்களையும் கற்றுத் தந்தது; என்னுடைய சுய திறனின் அடிப்படையில் வேலை செய்யும் வாய்ப்பு ஏற்பட்டது. அமெரிக்காவுக்கு நான் போகும்போது என்னிடம் இருந்த ஆங்கில அறிவு, ஒரு வேளை அங்கு எனக்கு ஏராளமான வாய்ப்புகளை பெற்றுத் தரும் என்று பலரும் நினைத்திருக்கக்கூடும். ஆனால் அங்கே போய் நான் எத்தனை கஷ்டப்படப் போகிறேன் என்பதைப்பற்றி எனக்கு எதுவுமே தெரிந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை.

வால் ஸ்ட்ரீட் அதி திறமைசாலிகளின் போர்க்களம் என்பதை நான் புரிந்து கொண்டேன்

அது 1982 ஆம் வருடம். அன்னியச் செலவாணி துறையில்

இருந்து 47 வயது மதிக்கத்தக்க ஒரு மேலாளர் எனது நியமனக் கடிதத்தை என்னிடம் கொண்டு தந்தார். கம்பெனியின் அமெரிக்க கிளைக்கு நான் மாற்றப்பட்டிருந்தேன். அப்போது எனக்கு வயது 25 அல்லது 26 இருக்கக்கூடும். வருடத்துக்கு சுமார் 55,000 டாலர்களுக்கு இணையான சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தேன். அந்த நியமன கடிதத்தை என்னிடம் தந்த அந்த மேளாளர், இனிமேல் எனது சம்பளம் அவரது சம்பளத்துக்கு இணையாக இருக்கும் என்று குறிப்பிட்டுச் சொன்னார். அப்படியாக அன்னியச் செலாவணி துறை மேலாளரின் சம்பளத்துடன் நான் அமெரிக்கா அனுப்பப்பட்டேன். ஆனால் அப்போது நான் உணரவில்லை, வால் ஸ்ட்ரீட் போன்ற ஒரு இடத்தில் வேலை பார்ப்பது எத்தனை கடினமானதென்று.

ஒரு நாளிலேயே வாழ்வின் அத்தனை மகிழ்ச்சிக் கிரணங்களும் என்னை வந்து தழுவி விடவில்லை. ஏனென்றால், லோவர் மான்ஹாட்டன் பகுதியில், நியூயார்க் பங்குச்சந்தை செயல்பட்டுக் கொண்டிருக்கும் வால் ஸ்ட்ரீட்டுக்கு அமெரிக்க அறிவு ஜீவிகள் மட்டுமல்ல, உலகத்தின் அதி மகா திறமைசாலிகளும் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அங்குள்ள அமெரிக்க தொழில் வல்லுனர்களுடன் போட்டி போடவே எனது நிறுவனம் என்னை அங்கே அனுப்பி வைத்தது. ஆனால், நிறுவனம் என் மீது வைத்துள்ள எதிர்பார்ப்பின் முழுப் பரிமாணம் எத்தகையது என்பதைப் பற்றி அப்போது எனக்கு திட்டவட்டமாக எதுவும் தெரியவில்லை. ஆங்கிலத்தை சரியாக பேசக் கூட தெரியாத நான், அங்கே பணியாற்ற அனுப்பப்பட்டதைக் கண்டு, அங்கே பணியாற்றும் என்னுடைய சக பணியாள நண்பர்கள் பெரும் திகைப்புக்கு ஆளானார்கள். முதல் வாரம் முழுக்க கோபம் கலந்த விமர்சனங்கள்தான். இப்படிப்பட்ட தீட்சையுடன்தான் வால் ஸ்ட்ரீட் என்னும் அந்த கடினமான உலகில் எனது வாழ்க்கைப் பயணம் நகரத் தொடங்கியது.

எனது வாழ்க்கையின் இந்த காலகட்ட அனுபவங்கள் சிலவற்றை புதிய தலைமுறை இளைஞர்களான உங்களிடம் பகிர்ந்து கொள்ள நினைக்கிறேன். நான் கற்ற பாடங்களில் சிலவற்றை- நாம் எப்படி சிந்திக்க வேண்டும், நேர்மறை சிந்தனைகளால் நிரம்பிய ஒரு எதிர்காலத்தை உருவாக்க நாம் என்ன செய்ய வேண்டும் என்பது போன்ற பல்வேறு விஷயங்களைப் பற்றி இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

1.2

கனவு காணுங்கள், அது நனவாகும்வரை விடாப்பிடியாக இருங்கள்

மிகப்பெரிய இலக்கை தீர்மானியுங்கள். கூடவே சின்னஞ்சிறிய இலக்குகளையும் உருவாக்கிக் கொள்ளுங்கள்

கனவு காணுங்கள்! மிக நீண்ட எதிர்காலத்தை எதிர் நோக்கி இருக்கும் இன்றைய இளைய தலைமுறைக்கு நான் வழங்கும் செய்தி இதுதான். உங்கள் ஒவ்வொருவருக்கும் இதுவொரு மிகப்பெரிய அத்தியாயம். சாதிக்க ஒரு கனவு இல்லையென்றால் உங்களுக்கான ஒரு ஒளிமிகுந்த எதிர்காலத்தை உங்களால் உருவாக்க இயலாது. நீங்கள் என்ன சாதிக்க போகிறீர்கள் என்பதைப் பற்றி மிகத் தெளிவாக இருங்கள். அத்துடன் மிகப்பெரிய ஒரு கனவொன்றைக் காண்பேன் என்றும் உறுதி கொள்ளுங்கள். ஒரு கனவை துரத்துவதென்பது மனித இனத்தின் அடிப்படை இயல்பு. எனவே உங்களிடம் ஒரு கனவு இலையென்றால், உங்களது எதிர்காலம் பற்றி நீங்கள் இன்னமும் திட்டமிடவில்லை என்று அர்த்தம். எனவே இதுவரையில் உங்களுக்கென இலக்குகள் எதுவும் இல்லையென்றால், உடனடியாக உங்களுக்கான ஒரு கனவைத் தேடிக் கண்டுபிடியுங்கள்; உங்கள் எதிர்காலத்தை உருவாக்க ஆரம்பியுங்கள்.

இதற்கு அடுத்த கட்டம், உங்கள் கனவை நனவாக்கும் முயற்சி. முதலில் உங்களிடம் ஒரு கனவு இருக்க வேண்டும் என்பது உண்மைதான். ஆனால் அதை விடவும் முக்கியமானது அதை நனவாக்க நீங்கள் எடுக்கும் முயற்சிதான். மேலோட்டமாக பார்த்தால் இது வெகு எளிதாகத் தோன்றலாம். ஆனால் அதை செயல்படுத்துவது என்பது அத்தனை எளிதான விஷயமில்லை. உங்கள் கனவை நனவாக்குவதென்பது, அதற்காக நீங்கள் எவ்வுளவு தூரம் முயற்சி செய்கிறீர்கள், எந்த அளவுக்கு

விடாமுயற்சியுடன் இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. உங்கள் இலக்குகளை நோக்கி கனவு காண்பதிலேயே உங்கள் வாழ்வு வீணாகிப் போவதை நான் விரும்பவில்லை. எனவே நீங்களே உங்களிடம் கேளுங்கள்: “எனது கனவை நனவாக்க நான் என்ன செய்யவேண்டும்?” உங்கள் கனவை நோக்கி நீங்கள் ஒரு அடி எடுத்து வைக்க ஆரம்பித்துவிட்டாலே போதும். உங்கள் எதிர்காலத்தை நோக்கிய ஒரு ஒளிரும் பாதையை நீங்கள் உருவாகிவிட்டீர்கள் என்று அர்த்தம்.

உங்கள் கனவை நோக்கி பயணப்படும் போதே, உங்கள் இலக்குகள் எது என்பதைப் பற்றிய ஒரு தெளிவான பார்வை யும் உங்களிடம் இருக்க வேண்டியது அவசியம். அதனால் எப்போதுமே மிகப்பெரிய இலக்குகளையே உருவாக்கிக் கொள்ளுங்கள். பின் அந்த பாதைக்கு ஏற்ற, சிறு மற்றும் நடுத்தர இலக்குகளையும் கட்டமைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, பெரும்பாலான மாணவர்களிடம் இப்படிப்பட்ட ஒரு குறிக்கோள் இருக்கும்: “எனது பட்டப்படிப்புக்குப் பின் நான் இதை எட்ட வேண்டும். அதுவும் மூன்று வருடங்களுக்குள்”. அல்லது “முப்பது வயதிற்குள் நான் இதை செய்து முடிப்பேன்”. இப்போது நீங்கள் முப்பதை நெருங்கிவிட்டீர்கள் என்றால், நாற்பது வயதில் என்ன சாதிப்பது என்பதைப் பற்றி இப்போதே சிந்திக்கத் தொடங்குங்கள். இப்படிப்பட்ட பெரிய இலக்குகளை முடிவு செய்யும்போதே, அவற்றை எப்படி அடைவது என்பதைப் பற்றியும் மிகத் தெளிவான ஒரு திட்டத்தையும் வகுத்துக் கொள்ளுங்கள்.

கல்லூரி நாட்களில் பலவிதமான ஆர்வங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்

பெரும்பாலான கல்லூரி மாணவர்களிடம் எதிர்காலத்தில் தாங்கள் எப்படிப்பட்டவர்களாக ஆக வேண்டும் என்பது குறித்து ஏராளமான கனவுகள் முட்டி மோதிக் கொண்டு இருக்கும். உங்களுக்குள்ளும் அப்படிப்பட்ட கனவுகள் இருந்தால் அதற்காக நீங்கள் பதட்டப்பட வேண்டாம். எத்தனை முடியுமோ, அத்தனை புதிய விஷயங்களையும் உங்கள் கல்லூரி நாட்களிலேயே ரசித்துப் பார்த்துவிடுங்கள். இங்கே இந்த இடத்தில் இது தான் மிக முக்கியமானது. கல்லூரி வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட பாடத்தை படிப்பது, புதிய விஷயங்களை சோதித்துப் பார்ப்பது, ஹாபிகளை வளர்த்துக் கொள்வது,

உங்கள் இயல்பை ஒத்த நண்பர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது, பல்வேறு புதிய தளங்களுக்குள் உங்கள் விருப்பங்களை விரிவுபடுத்திக் கொள்வது என்று எத்தனை முடியுமோ அத்தனை விஷயங்களையும் செய்து முடித்து விடுங்கள்; உங்களை எது ஈர்க்கிறதோ, அதனுடன் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளுங்கள்.

ஏனென்றால், இவைதான் உங்கள் பிற்கால வாழ்க்கையில் பல புதிய வாய்ப்புகளை உருவாக்கித் தரவிருக்கின்றன; புதிய கதவுகளின் தாழ்ப்பாளை திறந்து வைக்கப் போகின்றன. விதி விலக்காக, இதில் ஒரு சிலர் மட்டும் வேலைக்குப் போகத் தொடங்கிய பிறகும் தங்கள் விருப்பப்பட்டியலை புதுப்பித்துக் கொண்டே இருக்கிறார்கள். எனவேதான் மாணவர்கள் தமது கல்லூரிப் பருவத்திலேயே பலவிதமான ஹாபிகளையும், விருப்பங்களையும் வளர்த்துக் கொள்வது நல்லது என்று நினைக்கிறேன். ஏனென்றால், பெரும்பாலும் அவைதான் உங்கள் பிற்கால வாழ்க்கையில் ஒளி வீசும் மலராக மலரப்போகிறது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுக்கான தொடுவானத்தை எத்தனைக்கு முடியுமோ அத்தனைக்கு விரிவுபடுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

உங்களுக்குள் புதிய மாற்றங்கள் நிகழ வேண்டும் என்று நீங்கள் விரும்பினால், பலவகையான விருப்பங்களையும், புத்தம் புதிய ஆர்வங்களையும் கட்டாயம் வளர்த்துக் கொள்ள வேண்டும். இந்த விருப்பங்கள் அனைத்துமே உடனடியாக உங்கள் வாழ்க்கையில் பலன் தராமல் போகலாம், ஆனால் ஏதாவது ஒன்றின் மீது நீங்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கும் வரையில், அதன் ஒரு சிறு அம்சத்தையாவது சுவைத்திருக்கும் பட்சத்தில், எதிர்பாராத ஏதாவதொரு கணத்தில் அது உங்கள் வாழ்க்கையில் ஒளிர்ந்து மணம் வீசுவது நிச்சயம். எனவேதான் சொல்கிறேன், கல்லூரி வாழ்க்கை, நமது வாழ்க்கையின் ஒரு மதிப்பு மிக்க பருவம்.

இளமையில் நாம் ஆழ்ந்து படிக்கும் புத்தகங்கள் நம்மிடம் தொடர்ந்து செல்வாக்கு செலுத்தும்

நமது கல்லூரி நாட்களில் நாம் படித்த புத்தகங்கள் நம்மிடம் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும்; மட்டுமல்ல, நமது நினைவடுக்குகளில் புத்துணர்ச்சி ஊற்றாகவும்

உறைந்திருக்கும், நமது வாழ்நாள் முழுமைக்கும். இது நான் அனுபவ பூர்வமாக உணர்ந்த உண்மை. எனது பட்டப்படிப்பு காலத்திலிருந்து நான் எத்தனையோ புத்தகங்களைப் படித்திருந்தாலும், வாழ்க்கையின் பல படிகளைத் தாண்டி வந்து விட்ட இந்த கணத்திலும், என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றிருப்பவை எனது கல்லூரி நாட்களில் நான் வாசித்த புத்தகங்கள்தான். மாணவப் பருவத்தில் உங்களை ஈர்த்த புத்தகங்கள் உங்கள் வாழ்க்கையை செதுக்குவதில் பெரும் செல்வாக்கு கொண்டிருப்பதை நீங்கள் உணரலாம். குறிப்பாக நமது முப்பதுகளிலும், நாற்பதுகளிலும். முக்கியமான வாழ்க்கைத் திட்டங்கள் பலவற்றையும் நாம் சந்திக்கும் காலகட்டம் இது. நாம் எடுக்கும் முடிவுகள் அனைத்துமே நமது புத்திசாலித்தனத்தின் மீது கட்டப்பட்டவை என்றே நம்மில் பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் பெரும்பாலான இடங்களில் இதுவொரு முழு உண்மை இல்லை.

நீங்கள் சற்றே பின்னோக்கிப் பார்த்தீர்கள் என்றால், இந்த முடிவுகள் அனைத்துமே உங்களுடைய இருபது அல்லது இருபத்தியிரண்டாவது வயதில் உங்களை முழுவதுமாக நிரப்பிய அறிவு ஜீவிகள், சிந்தனையாளர்கள் அல்லது எழுத்தாளர்கள், ஆகியோரின் தாக்கத்தில் உருவானதாகவே இருக்கும். நமது வாழ்க்கையின் அந்த பருவத்தில் நாம் காதலித்த புத்தகங்கள், திரும்பத் திரும்ப படித்த புத்தகங்கள் நமது வாழ்க்கையின் ஆழமான பகுதிக்குள் வேரோடிப் போயிருக்கும்; நமது சிந்தனைப் போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். இந்த தாக்கம் பல பதிற்றாண்டுகள் நம்முடனே தொடர்ந்து கொண்டிருக்கும்.

புத்தகங்களை இவ்வாறு உள்முகமாக படிக்க பழகிக் கொண்டால், உங்களுக்கென ஒரு தனித்த கருத்தாக்கம் உங்களிடம் முளைவிட ஆரம்பிக்கும். விரைவிலேயே நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள், உங்களது சிந்தனைகள் உங்கள் பெற்றோர் சிந்தனையிலிருந்து முற்றிலுமாக விடுபட்டு நிற்பதை. உங்கள் இலக்கும், உங்கள் பெற்றோர் விருப்பமும் தனித்தனியாக வளர்ந்து கிளை பரப்பும். இவையே தளையிலிருந்து விடுபடத் திமிறும் உங்கள் சிந்தனைப் போக்கின் துவக்கம்.

கேடு நிறைந்த புத்தகங்களை தவிர்த்து விடுங்கள்

உங்கள் இளமைக் காலத்தில் நீங்கள் தவறான இயல்பு கொண்ட

புத்தகங்களையோ, தத்துவங்களையோ கடந்து செல்ல நேரிடலாம். ஆனால் அவற்றுக்கு உங்கள் மனதில் நீங்கள் இடம் கொடுத்தால், அது உங்கள் வாழ்க்கையில் மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும். நேர்மறை சிந்தனைகள் கொண்ட புத்தகத்தையோ அல்லது மோசமான விளைவு களை ஏற்படுத்தும் புத்தகத்தையோ நீங்கள் பார்க்க நேரிடுவது உங்கள் அதிர்ஷ்டத்தைப் பொறுத்தது. எதிர்மறை விளைவுகளை உருவாக்கும் சிந்தனைகளின் பக்கமாக நீங்கள் ஈர்க்கப்படும் போது, அது தவறான பாதையை நோக்கியே உங்களை அழைத்துச் செல்லும். வாழ்க்கையின் மிகப் பெரும் துயரம் இது.

எனவே எழுத்தாளர்கள் அனைவருமே மிகுந்த மரியாதைக்குரியவர்கள் என்று பொத்தாம் பொதுவாக நினைத்துவிடவேண்டாம். எழுத்தாள ரின் சுய வாழ்க்கை, படைப்புகளின் குணாதிசயங்கள் ஆகியவற்றை கவனமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதைப் போன்ற ஒரு வாழ்க்கைதான் நமக்கும் வேண்டுமா என்று உங்களுக்குள்ளேயே நீங்கள் கேட்டுப்பாருங்கள். மிக மோசமான வாழ்க்கை வாழ்ந்த படைப்பாளர்களின் எழுத்துக்களை தயவு தாட்சண்யம் இல்லாமல் தவிர்த்து விடுங்கள். நீங்கள் தொடர்ந்து அவரது எழுத்துக்களை படித்து வந்தால், அவருடைய கருத்துக்கள் உங்களையும் அறியாமலேயே உங்கள் வாழ்க்கையின் மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிடும்.

சான்றாக, தற்கொலை செய்து கொண்ட எழுத்தாளர்கள் பெரும்பாலும் ஒரு வித்தியாசமான குணாம்சம் கொண்டவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் மீது பரிவு கொள்ளும் மனோநிலைக்கு வெகு விரைவிலேயே நாம் ஈர்க்கப்பட்டுவிடுவோம். இப்படிப்பட்ட எழுத்தாளர்களின் எழுத் துக்களை திரும்பத் திரும்ப படிக்கும் போது, வெகு விரைவிலேயே உங்கள் சிந்தனைப் போக்கும் அவர்களுடைய அலை வரிசையுடன் இயல்பாக இணைந்து விடும் அபாயம் உண்டு. இது அவர்களைப் போன்ற முன்முடிவுகளை உங்களிடம் உருவாக்குவதோடு, பெரும் துயரத்தை நோக்கி உங்களைச் செலுத்திவிடும் அபாயம் உண்டு.

வாழ்க்கையில் தாங்கள் எதிர் கொண்ட சிரமங்களைப் பற்றி எழுதும் நாவலாசிரியர்களின் படைப்புகளில் பெரும்பாலும் வெறுமை, திவால், சுகவீனம், முறிந்த உறவுகள் போன்றவையே

இடம்பெற்றிருக்கும். இவைதான் அவர்களுடைய படைப்பின் சுவராசியத்துக்கு காரணம். இப்படிப்பட்டவர்களைக் கொண்டாடும்போது, நீங்கள் உங்களையும் அறியாமல் அவர்களுடைய வாழ்க்கையின் பிரதிபலிப்பாக மாறிவிடுகிறீர்கள். சான்றாக, வறுமையை மிக அழகாக விவரிக்கும் ஒரு எழுத்தாளரை நான் ஆராதிக்கும் போது, என்னுடைய வாழ்க்கையிலும் நான் வறுமையை அழைத்து வந்துவிடுகிறேன். நான் கோடி கோடியாக சம்பாதிக்க விரும்புகிறேன் என்று முழு மனதுடன் நீங்கள் கூறினாலும் கூட, சொக்கவைக்கும் வறுமை உங்கள் ஆழ் மனதில் வேரோடிப் போயிருக்கும். இது தொழில் தோல்வி, பண இழப்பு போன்றவற்றை உங்களிடம் படியச் செய்து விடும்.

நமது சிந்தனைகள் நம் வாழ்க்கை மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்

நாம் நம்பும் தத்துவங்கள் நமது வாழ்க்கையில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தும் வல்லமை பெற்றவை. இப்படிப்பட்ட சிந்தனைகளில் பெரும்பாலனவை நம்மை ஒரு மாய உலகுக்கு இட்டுச் செல்வதோடு, வெகு விரைவிலேயே மாயமாய் மறைந்தும் போய்விடுகின்றன. மாறாக அவை நமது உள்ளத்தை ஊடுருவி நமது ஆழ்மனதில் உறைந்து போனால், அது நமது வாழ்க்கையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்து வதோடு நமது வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடுகிறது. தத்துவங்கள் மழை போன்றது. சில வேளைகளில் மழை மேல் மண்ணை மட்டும் நனைத்துவிட்டு போய்விடுகிறது. சில நேரங்களில் அது நிலத்தடி நீர்வரையில் ஊடுருவிச் சென்றுவிடும். அப்படி மழை நீர் நிலத்தடி நீருடன் ஒன்று கலக்கும் போது- சிந்தனைகள் நமது ஆழ் மனதுக்குள் உள்ளிறங்கும் போது, அது நம்முடைய வாழ்க்கையில் பலத்த தாக்கத்தை ஏற்படுத்த ஆரம்பித்துவிடுகிறது.

எனவேதான் நமது சிந்தனைப் பரப்பை ஸ்பர்சிக்கும் தத்துவங்கள் பற்றி நாம் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். ஏனென்றால் வெகு விரைவிலேயே அவை நமது வாழ்வின் ஆழங்களுக்குள் ஊடுருவும் தீவிர சக்தியாக மாறிவிடும். நீங்கள் திரும்பத் திரும்ப படிக்கும் புத்தகங்கள், நீங்கள் சதா அசைபோடும் விஷயங்கள், மட்டுமல்லாமல் நீங்கள் கற்றுக் கொள்ள விரும்பும் விஷயங்கள் கூட உங்கள் சுய

கருத்தாக்கத்தின் ஒரு பகுதியாக உறைந்துவிடும். வேறொருவரின் படைப்பாகவே இருந்தாலும் கூட, அது உங்களுடன் ஆழமாக பொருந்திப்போனால், நீங்களும் குறிப்பிட்ட அந்த எழுத்தாளரைப் போலவே உருமாற ஆரம்பித்துவிட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். அது வேறொருவரின் சிந்தனைதானே என்று நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்வது அர்த்த மற்றது. ஏனென்றால் ஒருவரின் சிந்தனைகள் உங்களுடன் பொருந்திப் போகிறதென்றால், உங்களிடம் ஏற்கனவே அத்தகைய சிந்தனைகள் தளம் கட்டி கிடக்கிறது அல்லது நீங்களும் அப்படிப்பட்ட சிந்தனைகளை உருவாக்க ஆரம்பித்துவிட்டீர் கள் என்று பொருள்.

வேறொருவரின் கோட்பாடு இப்போது உங்கள் தத்துவமாக மாறிவிட்டது. துவக்கத்தில் அது வேறொருவரின் தத்துவமாக இருந்தி ருக்கலாம். ஆனால் அது உங்களை ஈர்த்த விதம், நீங்கள் திரும்பத் திரும்ப அதை படித்தது, இவை போதும் அவை உங்கள் சுயத்தின் ஒரு பகுதியாக மாறுவதற்கு. முடிவில் இதுவே உங்கள் சுய கொள்கையாக பரிணமிக்கிறது; இதுதான் உங்கள் வாழ்க்கை முழுவதையும் தீர்மானிக்கும் அடிப்படை அம்சமாக இருக்கப் போகிறது.

மனதில் நாம் விதைக்கும் விதைகளே நமது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன

நமது தத்துவங்கள் விதைகள் போன்றவை. நாம் விதைக்கும் விதைகள்தான் நம்முடைய தோட்டத்தில் எப்படிப்பட்ட பூக்கள் மலர வேண்டும், எந்தவிதமான கனிகள் உருவாக வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றன. நமது கொள்கைகளும் அப்படிதான். அவை வெறும் சிந்தனைகளின் பிழிவு மட்டுமல்ல; அவை அடிப் படை உண்மைகளை உருவாக்குவதில் அதீத சக்தி படைத்தவையும் கூட. கால ஓட்டத்தில் நமது கொள்கைகள் ஒரு நிலைத்த வடிவம் கொள்ளும்போது, உங்கள் கொள்கைகளின் அடிப் படையில் உங்களை நீங்களே கணித்துவிடலாம், நீங்கள் எப்படிப்பட்டவர் என்று.

இதற்குச் சான்றாக ஒன்றைச் சொல்கிறேன். ஒரு நாள், டோச்சிகி மாவகாணத்தில் உள்ள நாசு ஷோஜாவுக்கு அருகே உயர்நிலைப் பள்ளிக்கூடம் ஒன்றைக் கட்டவேண்டும் என்னும்

சிந்தனை எனக்குள் உருவானது. அங்கே எங்களுக்கென்று சொந்தமாக கொஞ்சம் நிலம் இருந்தது. அதற்கு சில வருடங்களுக்குப்பின் 'ஹேப்பி சயின்ஸ் அகாடமி' அங்கே உருவானது. அதன்மூலம் ஒரு பள்ளிக்கூடம் கட்டவேண்டும் என்னும் என்னுடைய எதிர்காலத் திட்டம் நனவானது.

ஒரு பள்ளிகூடம் கட்டவேண்டும் என்னும் சிந்தனை என்னிடம் உருவாகாமல் இருந்திருந்தால், எங்களால் ஒரு போதுமே அதை உருவாக்கியிருக்கமுடியாது. ஒரு பள்ளிக்கூடத்துக்கு இரயில் பாதை வசதி மிக அவசியம் என்று நாங்கள் நினைத்திருந்தால், இந்த அறிவியல் அகாடமி உருவாகியே இருந்திருக்காது. ஆனால், ஒரு உறைவிடப் பள்ளியே எனது மனதில் நிறைந்திருந்தது. அதற்கு இரயில் வசதி என்பது தேவையே இல்லாத ஒன்று; நாசுஷோஜாவில் எங்கள் பள்ளிக்கூடம் ஒரு கிராமப்புறத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது.

இது நமது சிந்தனையின் வல்லமை எப்படிப்பட்டது என்பதை தெளிவுபடுத்துகிறது. நீங்கள் ஒரே ஒருமுறை விதைத் தால் போதும், பின்பு அதுவே ஒரு செடியாக முளைக்க ஆரம்பித்துவிடும். எனவே ஒன்றை மட்டும் எப்போது நினைவில் கொள்ளுங்கள். ஒரு அடிப்படை கருத்துருவம்தான் உங்கள் முதல் தேவை. பிறகு கால ஓட்டத்தில் அது தானாகவே வளர்ந்து நிதர்சனமாய் உங்கள் முன் காட்சியளிக்கும். எனவே உங்கள் மனதில் எப்படிப்பட்ட விதைகளை விதைக்கப்போகிறீர்கள் என்பதைப் பற்றி மிகுந்த எச்சரிக்கையாக இருங்கள். ஏனென்றால் அதுதான் உங்கள் வாழ்வின் மெட்டை முடிவு செய்கிறது; உங்கள் எதிர்காலத்தை ஒரு இனிய பாடலாக உருமாற்றுகிறது.

1.3

நேர்மறையாக சிந்தியுங்கள்

எதிர்மறை சிந்தனை உங்கள் மனதில் வேரோடிப் போக அனுமதிக்காதீர்கள்

சிறுவயதில் நாம் எல்லோருமே சோகம், வருத்தம் மற்றும் விரும்பத்தகாத சம்பவங்கள் ஆகியவற்றால் வெகு எளிதாக பாதிக்கப்பட்டு விடுகிறோம். இந்த கால கட்டத்தில் நாம் தொட்டால் சிணுங்கியாகவும், வெகு எளிதில் உணர்ச்சி வசப்படுபவர்களாகவும் இருக்கிறோம். உதாரணமாக, உறவினர் ஒருவரின் மரணம், ஒரு விபத்து, அல்லது ஒரு நோய்ப்படுக்கை ஒரு இளைஞனின் அலைபாயும் மனதில் வெகு எளிதாக தாக்கத்தை ஏற்படுத்தி விடும். ஆனாலும், இதுபோன்ற நிகழ்வுகள் வெகு நேரத்துக்கு நம்மை ஆட்கொள்ள நாம் இடம் கொடுத்துவிடக் கூடாது. ஏனென்றால், சில வேளைகளில் இவையே சோகத்தின் மீதான பெரு விருப்பமாக நமக்குள் எதிர்வினை புரியக்கூடும். மட்டுமல்ல, ஒருவேளை இந்த சோக உணர்வு நம்மிடம் இல்லாவிட்டால், சில நேரங்களில் நாம் அசௌகரியமாகக்கூட உணரக்கூடும். இளமையில் நமது மனம் வெகு எளிதில் உணர்ச்சித் தாக்குதலுக்கு ஆளாகிவிடும். எனவேதான் இந்த பருவத்தில் எதிர்மறை இயல்பு கொண்ட எண்ணங்கள், கருதுகோள்கள், தத்துவங்கள் போன்றவை நம் மனதில் வேரோடிப் போய்விடாமல் நாம் வெகு கவனமாக இருக்க வேண்டும்.

“ஒரு முறை நான் தோற்றுவிட்டேன், எனவே இனிமேல் நானொரு தோல்விச் சின்னம்தான்.”

“எல்லோரும் என்னை விமர்சிக்கிறார்கள். இதற்கு மேலும் இதை எப்படிக் கையாள்வது என்று எனக்குத் தெரியவில்லை.”

“இந்த வேலைக்கு நான் லாயக்கில்லை என்று எல்லோருமே

சொல்கிறர்கள். நானொரு சிதைந்த தோல்வி.”

“எனக்கு நம்பிக்கையே இல்லை. ஏனென்றால், நானொரு நல்ல பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்படவில்லை.”

“எனது பெற்றோர்கள் என்னை வெறுக்கிறார்கள். எனவே எனக்கு வாழ்க்கையில் பிடிப்பே இல்லை.”

“என் நண்பன் என்னை புறக்கணிக்கிறான். எனக்கு இனி நண்பர்களே தேவையில்லை.”

“எனது வாழ்க்கை முடிந்துவிட்டது. ஏனென்றால் எனது தொழிலில் நான் தோல்வியடைந்துவிட்டேன்.”

மேலே சொல்லப்பட்ட எதிர்மறை சிந்தனைகளைப் போன்ற பல எண்ணங்கள் உங்களிடமும் இருக்கலாம். ஆனால் தயவு செய்து அவற்றில் எதையுமே உங்கள் மனதில் வேரோடிப்போக அனுமதித்து விடாதீர்கள்.

ஒரு மூங்கிலைப்போல் உறுதியாக வளர்வேன் என்று நம்புங்கள்

ஒரே நேரத்தில் நம்மால் இரண்டு வெவ்வேறு விஷயங்களைப் பற்றி சிந்திக்க முடியாது என்பது ஒரு அடிப்படை உலகியல் உண்மை. ஒரு எதிர்மறை எண்ணம் உங்கள் மனதுக்குள் நுழைகிறது என்று தெரிந்தால், உடனடியாக அதை ஒரு நேர் சிந்தனையால் இடமாற்றம் செய்துவிடுங்கள். எப்போதெல்லாம் நீங்கள் எதிர்மறைக் கண்ணோட்டத்துடன் இருக்கிறீர்களோ அல்லது எதிர்மறை சிந்தனை உங்களிடம் நிழலாடுகிறதோ, அந்தக் கணமே அதற்குப் பதிலாக, அந்த சூழலுக்கு ஏற்ற அல்லது அந்த சிக்கலுக்கு பொருத்தமான ஒரு நேர் சிந்தனையை உங்களிடம் உருவாக்கிக் கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் ஒரு சிக்கலான சூழலை நீங்கள் எதிர் கொண்டே ஆக வேண்டிய நிலையிலும் கூட, அந்த சூழலை நீங்கள் எதிர்கொள்ளும் விதத்தை உங்களால் மாற்ற முடியும். அதற்காக நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். சிக்கலை வேறொரு கோணத்திலிருந்து அணுகுவது. உதாரணமாக இப்படி நினைத்துக் கொள்ளுங்கள்: “இப்போது நான் என் வாழ்க்கையின் ஒரு கடினமான கட்டத்தில் நிற்பது

உண்மைதான். ஆனால் சற்றே விலகி நின்று சிந்தித்தால், அதிலிருந்து எனக்கு உதவும் சில நேர்மறைத் தீர்வுகள் வெளிப்படக்கூடும்." அல்லது, "உண்மையிலேயே அவன் என்னை மிகக் கடுமையாகத்தான் விமர்சித்து விட்டான். ஆனாலும், அவன் சொன்னவையெல்லாம் அப்படியொன்றும் தவறானவை அல்ல. ஒரு வேளை, இது என்னுடைய பலவீனத்தி லிருந்து நான் விடுபடுபடுவதற்கான ஒரு வாய்ப்பாகக் கூட இருக்கலாம். சொல்லப்போனால் எனக்கு நன்மை செய்யும் ஏதோவொன்றைப் பற்றி எனக்கு எடுத்துச் சொல்லவே அவன் முயன்றிருக்கிறான்."

வாழ்க்கையில் நீங்கள் எதிர் கொள்ளும் சவால்கள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் அதைப் பற்றி கவலை கொள்ளாதீர்கள். அதை எந்த அளவுக்கு நீங்கள் நேர்மறையாய் பார்க்கிறீர்கள், அல்லது அதை எந்த அளவுக்கு உங்கள் வளர்ச்சிக்கான உரமாக மாற்றிக் கொள்கிறீர்கள் என்பதன் மூலம், அந்தச் சிக்கலை நீங்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தை மாற்றி அமைத்து விடலாம். உங்களால் உங்களுக்குள் முளைவிட்ட நேர் சிந்தனை, சுய கட்டுமானம் போன்ற விதைகள் வளம் நிறைந்த ஒரு எதிர்காலத்தை உங்களுக்குள் மலரச் செய்வது நிச்சயம்.

வளர்ச்சியை நோக்கிய நமது பயணத்தில் நாம் பல தடைகளை எதிர்கொள்ள வேண்டியது வரலாம். உங்களைச் சுற்றி இருப்பவர்கள் உங்களை விமர்சனம் செய்யலாம் அல்லது உங்களை கீழே தள்ளிவிட முயற்சிக்கலாம். சில நேரங்களில் உங்களை நன்கு புரிந்து கொண்ட உங்கள் பெற்றோர்களின் அன்பு, அல்லது உங்களுடைய பள்ளி ஆசிரியர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், பணி சார்ந்த தோழர்கள் அல்லது மேலதிகாரிகள் ஆகியோரின் பொறாமை உங்களை பின்னோக்கி நகர்த்துவதை நீங்கள் உணர்ந்திருக்கலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் மூங்கில் கிளைகளின் வலிமையையும், அதன் மீட்டெழுச்சியையும் சற்றே சிந்தித்துப் பாருங்கள். கட்டாந்தரையில் கூட முளைவிடும் திறன் படைத்தவை மூங்கில்கள். அந்த மூங்கில்களைப் போலவே எந்தச் சூழலிலும் வலிமையுடன் முளைவிடும் திறன் பெற்றவர்களாக உங்களை உருமாற்றிக் கொள்ளுங்கள். உயரங்களைக் கடந்து சிகரங்களைத் தொடுவதாக தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தால், நீங்கள் சந்திக்கும் பிரச்சனைகளையெல்லாம் தாண்டி, உங்களால் ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கி விடமுடியும்,

நிச்சயமாக.

இது போன்ற சந்தர்ப்பங்களில் மீட்டெழுச்சியுடன் இருக்க வேண்டியது மிக மிக அவசியம். எளிதில் உணர்ச்சித் தாக்குதல் களுக்கு ஆளாகும் நமது இளைமைப் பருவம், விரும்பத் தகாத சம்பவங்களால் வெகு எளிதில் காயப்பட்டு விடும். நீங்கள் காயப்பட்டதாக நினைப்பது, விமர்சனங்கள் அல்லது கிண்டல்களால் உடைந்துபோவது, சிறு பின்னடைவால் தோல்வியுற்றதாக வருந்துவது போன்ற சந்தர்ப்பங்கள் வரலாம்; இவற்றையெல்லாம் உடைத்துக் கொண்டு என்றாவது ஒரு நாள், அசாதாரணமான மனிதனாக நீங்கள் உருவெடுப்பீர்கள் என்பதை உங்களால் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அளவுக்கு நீங்கள் நம்பிக்கையற்று போகலாம். இவை எல்லாவற்றுக்கும் உடனடியாக ஒரு முற்றுப்புள்ளி வையுங்கள். உறுதியாக இருங்கள். மீண்டெழுந்து நில்லுங்கள். நீங்கள் கீழே விழும்போதெல்லாம், உங்களை மீட்டெடுப்பதற்கான வலிமையைக் கண்டெடுங்கள். காலையில் கண் விழிக்கும்போது, கடந்த தினத்தை விடவும் வலிமை படைத்தவராக, அதி சக்தி ஊற்றெடுத்தவராக காட்சியளியுங்கள். நீங்கள் எத்தனை தடவைகள் கீழே விழுகிறீர்கள் என்பது ஒரு பொருட்டில்லை. ஆனால் விழும் போதெல்லாம் மீண்டெழுங்கள். ஒரு போதுமே உங்கள் முயற்சியை கைவிட்டு விடாதீர்கள்.

1.4

நம்பிக்கை: அச்சத்துக்கு எதிரான அற்புத ஆயுதம்

அச்சம் வேண்டாம், கடவுள் நம்முடன் இருக்கிறார்

நமது சிறு பிராயத்தில் நாம் போராட வேண்டிய மிக முக்கியமான தடைக்கல் அச்சம்தான். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு பயம். ஆனால், ஒட்டுமொத்தமாக எல்லா பயங்களுமே அடையாளம் தெரியாத ஏதோவொரு இடத்திலிருந்துதான் புறப்படுகின்றன. ஜாஸ் திரைப்படம் வெளியானபோது, அந்த சுறாவின் மீதான பயம், கடலில் இறங்கி அந்த அலை நுரைகளில் ஆசைதீர நீராட நமக்கு அச்சத்தை ஏற்படுத்தியது. சுறா எதுவுமே இல்லை என்று உறுதி சொல்லப்பட்டாலும் கூட, அந்த சுறாமீனைப் பற்றிய எண்ணம் நமது கால்களில் இறுக்கமாக ஒட்டிக்கொள்கிறது; கடற்கரை மணலில் நம்மை கால் புதைய ஓடச் செய்கிறது. அச்சத்தை எதிர்கொள்ள வேண்டிய நமது மனோநிலை, நம்மை நிலைகுலையச் செய்துவிடுவதே இதற்குக் காரணம்.

சரி, அப்படியானால் இந்த அச்சத்திலிருந்து நாம் எப்படித்தான் வெளியேறுவது? வெகு எளிது. அச்சத்துக்கு எதிரான மிக வலிமையான ஆயுதம் நம்பிக்கை ஒன்றுதான். அதை தீவிரமாக பயன் படுத்துங்கள். கடவுளின் மீதான, அல்லது பகவான் புத்தரின் மீதான உங்கள் நம்பிக்கையால் உங்கள் மனதில் உறைந்துபோன அச்சத்தை வெற்றி கொள்ளுங்கள். கடவுள் அல்லது புத்தர் நம்முடன் இருக்கிறார் என்று உறுதியாக நம்புங்கள். அதன் பின் எதைப்பற்றியும் பயப்படத்தேவை இல்லை. ஒரு வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொள்ளும் திறன் நம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. நான் கடவுளின் அல்லது புத்தரின் குழந்தை அல்லது சீடன் என்று திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் புத்தரை நம்புவதால், புத்தர் எப்போதும் உங்களுடனேயே இருக்கிறார். எனவே

எதைப் பற்றியும் பயம் கொள்ளத் தேவையில்லை. இந்த உண்மையை நாம் கடைபிடிக்கத் தொடங்கினால் அச்சம் என்ற ஒன்று நம்மை அணுகவே அணுகாது. நாம் கடவுளிடம் அல்லது புத்தரிடம் நம்மை ஒப்படைத்துவிடும்போது நமது எதிர்காலம் மகிழ்ச்சியால் தளும்புகிறது. அச்சம் நம்மைக் கண்டு தோற்று விலகி ஓடிவிடுகிறது. எனவே தீவிர நம்பிக்கையின் உதவியால், உங்கள் அச்சத்தை நீங்கள் வெற்றி கொள்வீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

முயற்சி முயற்சி, தொடர் முயற்சி

உங்கள் பயத்தை வெற்றி கொள்ள உங்கள் நம்பிக்கையை பயன்படுத்துங்கள். ஆனால் உங்கள் கனவுகள் நனவாக நீங்கள் உண்மையிலேயே முயற்சி செய்துதான் ஆக வேண்டும். பொதுவாக வெற்றி பெற்றவர்கள் அனைவரிடமும் நாம் ஒரு பொதுப் பண்பைப் பார்க்கலாம். இந்த பொதுப்பண்பு வாழ்க்கையில் அவர்களுக்கு தடையற்ற பலன்களை வழங்கிக் கொண்டிருக்கிறது. வெற்றி சாதனை புரிந்தவர்கள் அனைவருமே முயற்சி மிக்கவர்கள். தங்கள் கனவுகள் நனவாகும்வரை அவர்கள் அதையே தொடர்ந்து கொண்டு இருக்கிறார்கள். இது ஏதோவொருமுறை முயற்சி செய்வது என்பதல்ல. வெற்றி என்பது, சோர்ந்து பின் தங்கிவிடாமல், நமது கனவுகளை நோக்கி உறுதியாக, ஒவ்வொரு அடியாக, தொடர்ச்சியாக நடைபயில்வதுதான். லாட்டரி, பந்தயம் போன்றவை ஒரு சில நேரங்களில் எதிர்பாராத வெற்றியைத் தந்து விடலாம். ஆனால் இந்த வெற்றிகள் நிலையானது அல்ல.

எனவே வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் முதன்முதலில் உங்களுக்கென ஒரு கனவை உருவாக்கிக் கொள்ளுங்கள். அதன்பின் உங்கள் மனதில் எழும் பயங்களை, ‘உறுதியான நம்பிக்கை’ என்னும் ஆயுதத்தால் வெற்றி கொள்ள வேண்டும். இதன் பிறகு மனதில் எந்தவிதமான சோர்வுக்கும் இடம் கொடுத்துவிடாமல், உங்கள் கனவு நனவாகும்வரை தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். இந்த தொடர் முயற்சி மற்றும் அர்ப்பணிப்பு மனோபாவம், உங்கள் முழு ஆற்றலையும் நீங்கள் வெளிப்படுத்திவிட்ட பின்பும்கூட, உங்களுக்கு மேலும் கொஞ்சம் ஆற்றலை வழங்கும். பிறர் எந்த இடத்தில் தங்கள் முயற்சியைக் கைவிட்டுவிட்டு சென்றார்களோ, அந்த இடத்தில் நின்று நீங்கள் உறுதி

கொள்ளுங்கள்: “நான் இந்த பாதையில் தொடர்ந்து முன்னேறிச் செல்வேன்” என்று.

1.5

உங்கள் நாளின் 24 மணி நேரத்தை எப்படி பயன்படுத்துவது

சின்னஞ்சிறு நேரத்துளிகள் வெற்றிக்கு வழி வகுக்கும்

ஒரு நாளின் 24 மணிநேரம் என்பது நம் அனைவருக்குமே பொதுவானது. ஆனால் அதை எப்படிப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கிறது. வாழும் காலம் மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். ஆனால் ஒரு நாளின் மொத்த நேரம் மனிதர் அனைவருக்கும் பொதுவானதுதான். அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும்.

எனவே வெற்றியைச் சுவைக்க இந்த 24 மணி நேரத்தை நாம் எப்படி செலவிடப் போகிறோம்? என்பதே முக்கியமானது. நான் இரண்டு விஷயங்களை உங்களிடம் வலியுறுத்துகிறேன். ஒன்று, உங்கள் வாழ்வின் ஒவ்வொரு மணித்துளியையும்- ஒவ்வொரு நிமிடத்தையும்- ஒவ்வொரு வினாடியையும் விலை மதிப்பில்லாததாக கருதுங்கள். நாளொன்றுக்கு வெறும் ஒரு பத்து நிமிடம் கிடைத்தாலும் கூட, அதை வெற்றிகரமாக பயன்படுத்தப் பாருங்கள்! ஏனேன்றால், அதிகப்படியான நேரம் உங்கள் கைகளில் இருக்கும்போது விஷயங்களை ஒத்திப் போடுவதைப் போல் இங்கே செய்யமுடியாது. உதாரணமாக, வேனிற்கால விடுமுறை போன்ற ஓய்வுக்கால திட்டங்களைக் கூட மற்றொரு நாளைக்கு மாற்றி வைக்க லாம். அதில் தவறில்லை. ஆனால் விஷயங்களை ஒத்திப் போடுவதென்பது உங்கள் படிப்புக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்திவிடும்.

வாழ்க்கையில் வெற்றிபெற்றவர்களிடம் நான் ஒன்றை கவனித்திருக்கிறேன். அவர்கள் தங்கள் பரபரப்பான வேலைகளுக்கிடையே ஒரு சிறு இடைவெளி கிடைத்தாலும், அது வெறும் பத்தோ அல்லது பதினைந்து நிமிடங்களாகவோ கூட இருக்கலாம். ஆனாலும் அவர்கள் அதை படிப்பதற்காகவே

செலவிடுகிறார்கள். உதாரணமாக நீங்கள் ஒரு புதிய மொழியைக் கற்க விரும்பினால், உங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும் அதற்காகவே பயன்படுத்தப் பாருங்கள். அயல் மொழி வல்லுனர்கள் அனைவருமே, காலையிலிருந்து இரவு தாங்கள் படுக்கப்போவது வரையில், தங்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு நிமிடத்தையும், அது இரயில் பயணமாக இருந்தாலும் சரி, மதிய உணவு இடைவேளையாக இருந்தாலும் சரி, குளியலறையில் குளித்துக் கொண்டிருந்தாலும் சரி, அதை புத்திசாலித்தனமாக பயன்படுத்துகிறார்கள்.

இப்படி சின்னஞ்சிறு நேரத் துளிகளைக் கூட ஆக்கபூர்வமாக பயன்படுத்தப் பழகிக் கொண்டால், நீங்கள் ஒரு தேர்ந்த மொழி வல்லுனராக ஆவது வெகு சுலபம். நாம் எப்படிப்பட்ட உயர்ந்த பதவியில் இருந்தாலும் சரி, நம் அனைவருக்குமே ஒரு நாள் என்பது, நாம் தூங்கும் நேரத்தையும் சேர்த்து மொத்தம் 24 மணி நேரம்தான். இதில் மனிதருக்கு மனிதர் எள்ளளவு கூட வித்தியாசம் இல்லை. எனவே உங்கள் கனவு இலக்கை அடைவதென்பது, ஒரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் எவ்வளவு தூரம் நீங்கள் திறமையாக பயன்படுத்துகீறீர்கள் என்பதையும், உங்கள் முயற்சிகளில் நீங்கள் எந்த அளவுக்கு விடாப்பிடியுடன் இருக்கிறீர்கள் என்பதையும் பொறுத்தது. ஒரு நாளின் முழு நேரத்தையும், வேலை செய்வதற்கு பழகிக் கொண்டால் நீண்ட இடைவெளிகளை கண்டுபிடிப்பது வெகு சிரமம்; ஒரு நாளில் ஒரு சில மணி நேர இடைவெளிகளை, வெகு அபூர்வமாகவே அப்படி நம்மால் இனம் காண முடியும். எனவே வாழ்க்கையின் ஒவ்வொரு நேரத் துளியும் மதிப்பு மிக்கது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

மூளைக்குள் வளர்ப்போம், ஆண்பெண் என்னும் இருவேறு பண்புகளையும்

ஒரே நேரத்தில் பல்வேறு செயல்களைச் செய்யும் திறமைகளை வளர்த்துக்கொள்வது வெகு முக்கியமானது. ஒரு விஷயத்தை செய்து முடிக்க ஒரே நேரத்தில் நாம் பல்வேறு விஷயங்களை செய்தாக வேண்டியிருக்கிறது. பொதுவாக ஆண்களின் மூளை, இயற்கையாகவே ஆழமான, நீண்ட கால செயல்பாடுகளுக்கு ஏற்ற விதத்தில் உள்ளது. உதாரணமாக உலக அதிசயங்களில் ஒன்றான எகிப்திய பிரமிடுகள் இப்படிப்பட்ட ஆண்

பண்பினால்தான் கட்டி முடிக்கப்பட்டன. ஒரு பிரமிடைக் கட்டி முடித்ததும் அவர்கள் மற்றொரு பிரமிடை கட்ட ஆரம்பித்து விடுகிறார்கள். புகழ்பெற்ற ஸ்பின்ஸ் சிலையை முழுமையாக உருவாக்கியவர்களே, பிற்பாடு மற்றொரு பிரமாண்ட பிரமிடை கட்டியிருக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட செயலை நெடுங்காலத்துக்கு செய்துகொண்டிருக்கும் தன்மையே மூளையின் ஆண் பண்பு.

உயர்கல்வி கற்ற பெண்கள், அதிலும் குறிப்பாக ஆண்களுடன் தினந்தோறும் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் பெண்கள் தமது மூளையில் இந்த ஆண் பண்பை வெகு இயல்பாகவே வளர்த்துக் கொள்கிறார்கள். அதி நுட்பமான உயர் பதவிகளைப் பெற ஒரு விஷயத்தைப் பற்றி நெடுநேரத்துக்கு சிந்திக்கும் திறனை வளர்த்துக் கொள்வது மிக அவசியம். உங்கள் வேலையில் ஆண் பண்பு ஒன்றை மட்டுமே செலுத்தப் பழக்கினால்தான் நீங்களும் மற்றவர்களுக்கு இணையானவர்களாக கருதப்படுவீர்கள். ஏனென்றால் ஆண் பண்பு கொண்ட வேலைத் திறனை வளர்த்துக் கொள்ளவே இங்கு பெரும்பாலானவர்கள் ஆசைப்படுகிறார்கள்.

ஆண் மூளைக்கு நேர் எதிராக, பெண் மூளை ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்கிறது. பிறக்கும்போதே பெண்கள் இப்படிப்பட்ட பன்முக செயல்திறன் பெற்றவர்களாகத்தான் பிறக்கிறார்கள். குடும்பத்தை நிர்வகிப்பது, வாரிசுகளை வளர்ப்பது போன்றவை, வரலாற்றுக் காலத்திலிருந்து பெண்களின் கடமையாகவே வரையறுக்கப்பட்டுள்ளன. அடுப்படியில் இரவு சமையல் மும்முரமாக நடந்து கொண்டிருக்கும்போது, குழந்தைகள் அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருப்பார்கள். கூச்சல், குழப்பம், அடிதடி சண்டை.... என்று ஒரே களேபரம். ஆனால் பெண்கள் இதை வெகு சாமர்த்தியமாக சமாளித்துக் கொள்கிறார்கள். விழிப்பான புலன்கள், தன்னைச் சுற்றிய நிகழ்வுகளைக் குறித்த எச்சரிக்கை உணர்வு போன்றவை பெண்களின் அடிப்படைத் தேவை. இதன் மூலம் அவர்களால் ஒரே நேரத்தில் பலவிதமான செயல்களைச் செய்ய முடிகிறது. அதனால்தான் பெரும்பாலான பெண்கள் மிகச் சிறந்த பன்முகச் செயல்பாட்டாளர்களாக விளங்குகிறார்கள்.

உயர் கல்வி கற்ற சில பெண்கள், அதிலும் குறிப்பாக அறிவியல் அல்லது கணிதம் பயின்ற பெண்களிடம் பெண் பண்பை விடவும், ஆண் தன்மையே முனைத்து நிற்கிறது. ஆனால் பிறக்கும்போதே

இந்த பன்முக செயல் திறனுடன் பிறக்கும் பெரும்பாலான பெண்கள், தங்கள் வாழ்நாள் முழுக்க அந்த திறனை தங்களுடனே சுமந்து செல்கிறார்கள். நமது அன்றாட வாழ்க்கையின் நடைமுறைச் சிக்கல்களில் இந்த பன்முகச் செயல்பாட்டை வளர்த்துக் கொள்வது அத்தனை சிரமமான ஒரு விஷயமில்லை. ஆனால், நீங்கள் பணிபுரியும் இடத்தில் இந்த பன்முகச் செயல்பாட்டை வளர்ப்பது தான் மிக சவாலான விஷயம். நீங்கள், ஒரு வளமான எதிர்காலத்தை கட்டமைக்க விரும்பும் ஒரு இளைஞனாக இருக்கும்பட்சத்தில், உங்கள் சுய செயல் திறனுடன், மூளையின் இந்த ஆண் மற்றும் பெண் பண்புகளையும் வளர்த்துக் கொள்வது மிக முக்கியமானது.

பன்முகச் செயல்பாட்டில் உங்கள் பார்வை பதியட்டும், பல முனைகளிலும்

ஆண், பெண் என்னும் இந்த இரண்டு பண்புகளையும் எப்படிக் கையாள்வது என்பதும் மிக முக்கியமானது. ஒரு நேரத்தில் ஒரு வேலையை வெற்றிகரமாக முடிக்கும் திறன்பெற்ற ஆண் பண்பும் மூளைக்குத் தேவை. அதே நேரத்தில் தலை முழுவதும் கண்களைக் கொண்ட தும்பியைப் போல், ஒரே நேரத்தில் பல்வேறு விஷயங்களை பரந்த கோணத்தில் பார்க்கும் பெண் பண்பும் மூளைக்குத் தேவை. உங்கள் தலை முழுவதும் பல கண்கள் இருப்பதாக பாவித்துக் கொண்டு, உங்களைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளின் அனைத்து அம்சங்களையும் கூர்ந்து கவனியுங்கள்; ஒரே நேரத்தில் பலவகையான செயல்களைச் செய்யுங்கள்.

இதைச் செயல்படுத்த உங்கள் அனைத்துப் பணிகளையும் ஒரே நேரத்தில், ஒரே வேகத்தில் செய்யத் தொடங்குங்கள். இல்லையென்றால் அவற்றை பல்வேறு கட்டங்களாகவோ அல்லது பல்வேறு வேகத்திலோ செய்வதாகவும் திட்டமிடலாம். பணி முடியும் தருவாயில் ஒரு புராஜக்ட், பாதி முடிந்த நிலையில் மற்றொரு புராஜக்ட், புத்தம் புதிதாக அப்போதுதான் ஆரம்பித்த ஒரு புராஜக்ட் என்று உங்கள் வேலைத் திட்டத்தை அமைத்துக் கொள்வது சிறந்தது. இப்படி பலவிதமான வேலைகளை ஒரே நேரத்தில் செய்வதன் மூலம், பலவகைப்பட்ட விஷயங்களை உங்களால் திறம்பட செய்து முடிக்க முடியும் என்பது நிரூபிக்கப்படுகிறது. ஆண் மற்றும் பெண் பண்புகளை மூளைக்குள் மிகத் துல்லியமாக ஒன்று கலப்பதன் மூலம், ஒரே

நேரத்தில் உங்களால் பல வகையான செயல்களை வெற்றிகரமாகச் செய்து முடிக்க இயலும்.

இது எனக்கு போர் விமான பைலட்டுகளை நினைவுபடுத்து கிறது. ஒத்திணைந்து செயல்படும் திறமை பைலட்டுகளுக்கு மிக அவசியமான ஒன்று. போர்க்களத்தில் சீறிப்பாயும் போர்விமானங்களுக்கு முன்னே, பின்னே, மேலே, கீழே என்று அனைத்து திசைகளிலும் ஆபத்து காத்திருக்கும். ஒரு விஷயத்தில் தேவைக்கும் அதிகமாக கவனத்தைக் குவிக்கும் திறன் பெற்றவர்கள் சிறந்த போர் விமானிகளாக முடிவதில்லை. தன் கண் முன்னே காணும் பொருளை சுட்டு வீழ்த்த ஒரேயொரு குண்டு போதும். ஆனால் போர் விமானங்களில் பறக்க வேண்டுமானால், உங்கள் கவனம் நொடிக்கு நொடி மாறிக்கொண்டேயிருக்க வேண்டும். குண்டு எந்த திசையிலிருந்து பாய்ந்து வந்தாலும் அதைச் சமாளிக்கும் அளவுக்கு. மட்டுமல்ல போர் விமானிகள் உணர்வு பூர்வமாக முடிவெடுக்கும் திறன் பெற்றவர்களாகவும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஏனென்றால் அதுதான் அவர்களை வெறும் போர்வீரர்கள் என்னும் நிலையிலிருந்து மேலும் உயர்ந்த நிலைக்கு தகுதி படைத்தவர்களாக்குகிறது.

மெட்ரோ நகரங்களில், ஒரே இடத்தில் ரயில் பாதைகளும், அணுகுச் சாலைகளும் பல அடுக்குகளாய் குறுக்கும் நெடுக்குமாக, அங்கும் இங்குமாகப் பாய்ந்து கொண்டிருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதுபோலவே பன்முக மாகப் பணியாற்றும் திறன் மற்றும் ஒத்திசைவான அணுகுமுறை ஆகியவற்றில் உங்கள் முழுத் திறனையும் நீங்கள் வெளிப்படுத்தும் போது, நீங்கள் செய்யும் எந்த செயலும் வெற்றியாகவே முடியும்.

பன்முகச்செயல்பாடு சிரமம் தந்தால், விரைந்து முடிவு எடுக்கப் பழகுங்கள்

பலவேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் பன்முகச் செயல்பாடு உங்களுக்கு சிரமமாக இருந்தால், ஒரு நேரத்தில் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் உங்கள் கவனத்தை செலுத்துங்கள். அதை முடித்த பிறகே அடுத்த விஷயத்துக்கு செல்லுங்கள். இதன் மூலம் உங்களாலும் பல்வேறு வேலைகளை தொடர்ச்சியாக செய்து முடிக்க இயலும். இதை நீங்கள் மற்றொரு வழியாகவும்

சாதிக்கலாம்.

விரைவாக முடிவெடுத்தல், உடனடிச் செயல்பாடு, வேகமாக வேலையை முடித்தல், இவைதான் அந்த மாற்று வழி. நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், இன்றைய வேலையை ஒருபோதும் மறுநாளைக்கு ஒத்திப் போடாதீர்கள். இன்றைய வேலையை இன்றே செய்து முடித்துவிட்டால், நாளை மற்றொரு வேலையைச் செய்ய உங்களுக்கு நேரப் பற்றாக்குறையே இருக்காது. இது இப்படியே தொடர்ந்தால், பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யும் பன்முகச் செயல்பாடு தரும் பலனை இதுவே உங்களுக்கு தந்து விடும். சுருக்கமாகச் சொன்னால் விஷயங்களை ஒரு போதுமே ஒத்திப்போட வேண்டாம்.

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். என்னுடைய பணிகளை நான் ஒரு போதுமே ஒத்திப் போடுவதில்லை. முடிவுகளை உடனுக்குடன் எடுத்துவிடுவதோடு, நான் செய்து முடித்தாக வேண்டிய அனைத்து விஷயங்களையும் வெகு விரைவாக செய்து முடிப்பதில் நான் அதீத கவனம் செலுத்துவேன். இதனால் என்னுடைய மேஜை, எப்போதுமே பளிச் என்று சுத்தமாகக் காட்சியளிக்கும். எனக்கான பணிகளை உடனுக்குடன் செய்து முடித்து விடுவதால், எனது உடலும் மனமும் எப்போதுமே அமைதியான ஒரு இனிய உணர்வில் லயித்திருக்கும்.

நமது வேலையை தாமதமாகச் செய்வதோ அல்லது ஒத்திப் போடுவதோ மிக எளிதானது. ஆனால் விஷயங்களை உடனுக்குடன் கவனித்து, அந்த இடத்திலேயே அதற்கான தீர்வை எழுதி, அதற்கு ஒரு முடிவுகட்டி விடுவதையே நான் விரும்புகிறேன். விஷயங்களை ஒத்திப் போட்டால், புதிய வேலைகள் வந்து சேரும் போது நாம் திக்குமுக்காடிப் போவோம். இந்த நிலையில் மேலும் ஒரு வேலை வந்து சேர்ந்தால்..., நீங்கள் செய்து முடிக்க வேண்டிய வேலைகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். இப்படிப்பட்ட ஒரு இக்கட்டான நிலை வரும்போது, அனைத்து வேலைகளையும் ஒரே நேரத்தில் எப்படிச் செய்து முடிப்பது என்பதற்கான ஒரு வழியை நாமே தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும்.

எனவே தான், என்னிடம் வரும் எந்த வேலையையுமே நான் தாமதப்படுத்துவதில்லை. உடனடியாக அதைக் கவனித்து, தேவைப்படும் முடிவுகளை எடுத்து, அந்த இடத்திலேயே அதற்கொரு முடிவு கட்டிவிடுவேன். அப்படியே எனது முடிவு தவறாகப் போய்விட்டாலும் அதற்காக நான் பதறுவதில்லை.

ஏனென்றால் அதைப் பற்றி சிந்திப்பதற்காக நான் தனியாக ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்வேன்.

மாற்றங்கள் வாழ்க்கை யின் தவிர்க்க முடியாத அம்சம் என்பதால், வருவதை ஏற்றுக் கொண்டு, அதற்கு ஏற்றபடி உங்கள் பாதையை மாற்றிக் கொள்வதே நல்லது. முடிவுகளை மட்டும் உடனடி யாக, அப்போதைக்கப்போதே எடுத்துவிடுங்கள்; தவறுகள் தலை காட்டினால் பிற்பாடு அதை மாற்றிக் கொள்ளலாம். இதை நீங்கள் பழகிக்கொண்டல், ஒரே நேரத்தில் பல்வேறு பணிகளைச் செய்து முடிப்பது வெகு சுலபம்.

ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குங்கள்

வெற்றிக்கனியைச் சுவைக்க, உங்கள் நாளின் 24 மணி நேரத்தின் முழுப் பரிமாணத்தையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றிய சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டேன். அதன் சுருக்கத்தை மீண்டும் ஒருமுறை உங்களுக்கு நினைவூட்டுகிறேன். முதலில் சின்னஞ்சிறு நேரத்துளிகளை கண்டறிந்து அவற்றை நேத்தியாகப் பயன்படுத்த ஆரம்பியுங்கள். அடுத்து, பன் முகமாகச் செயலாற்றும் திறனை வளர்த்துக் கொண்டு, நாளும் குவிந்து கொண்டிருக்கும் பலதரப்பட்ட பணிகளை வெற்றிகரமாகக் கையாளும் திறனை உருவாக்கிக் கொள்ள வேண்டும். கடைசியாக, பன்முகச் செயல்பாடு உங்களுக்கு கைவரவில்லையென்றால், உடனடியாக முடிவெடுக்கும் இலாவகத்தை கற்றுக் கொண்டு, விஷயங்கள் உங்கள் முன் தளம் தட்டிக் கிடக்க அனுமதிக்காமல் அவற்றை விரைவாக பைசல் செய்யும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்களிடம் வரும் வேலைகள் அனைத்தையும் எத்தனை விரைவாக முடிக்க முடியுமோ அத்தனை விரைவாக முடித்துவிட வேண்டும். இதனால் உங்கள் மேஜை எப்போதுமே சுத்தமாக இருக்கும். மட்டுமல்லாமல், எந்த நேரத்திலும் புதிய முயற்சிகளைத் தொடங்க நீங்கள் தயாராகவும் இருக்க முடியும்.

இந்த ஆலோசனைகளை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தொடர்ந்து கடைபிடித்து வந்தால், உங்களுக்கு பதவி உயர்வு நிச்சயம். தற்போது நீங்கள் எந்த துறையில் அல்லது எந்த பதவியில் இருந்தாலும் சரி. வெகு சிலர்தான் இத்தகைய திறன்கள் கைவரப்பெற்றவர்களாக இருப்பார்கள் என்பதால், ஒரு

திறன்மிகுந்த பணியாளர் என்ற மரியாதையுடன் நீங்கள் கவனிக்கப்படுவீர்கள். உங்கள் முன் வேலைகள் வந்து குவிந்தாலும், நீங்கள் எப்போதும் ஒரு இனிய மன நிலையிலேயே இருப்பீர்கள்.

உங்கள் திறனின் உச்சபட்ச விளிம்பிலிருந்து நீங்கள் வேலை செய்ய ஆரம்பிக்கும்போது உங்களுக்கான பதவி உயர்வுகள் தடைபட்டு போகலாம். எனவே, எப்படிப்பட்ட கடினமான வேலைகள் உங்களிடம் தரப் பட்டாலும், நீங்கள் உறுதியாகவும், இனிய மனநிலையுடனும் இருப்பதாகவே காட்சியளியுங்கள். அதிலும் நீங்கள் தற் போது இருக்கும் பதவிக்கு தேவையான திறன்களுடன். உண்மையாகவே நீங்கள் இனிய மனநிலையில் இருக்கும் பட்சத்தில் உங்களுக்கான பதவி உயர்வுகள் வந்து கொண்டேயிருக்கும், தடைகள் ஏதுமின்றி, நீங்கள் உங்களுக்கான வரம்பை எட்டுவது வரையில். இதன் மூலம் உங்கள் எதிர்காலம் ஒளிமிகுந்ததாக அமைவது நிச்சயம்!

தங்களுக்கான எதிர்காலத்தைக் கண்டறியும் வெற்றிப் பயணத்தில் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று இளம் வாசகர்கள் இப்போது தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். வெற்றிக்கான விதைகளை இந்த அத்தியாயம் முழுவதும் தூவியிருக்கிறேன். சொல்லப் போனால் இந்த விதைகள் கனவான்களின் பட்டியலில் இடம்பெற விரும்புவர்களுக்கும் பெரிதும் உதவக்கூடியது. இங்கே நான் குறிப்பிட்டுள்ள அனைத்துமே வாழ்க்கையின் பல்வேறு சூழல்களிலும் பயன்படுத்தத் தகுந்தவை. எனது பரிந்துரைகள் முழுவதும் உடனடியாக உங்களுக்கு புரியாமல் போகலாம். அதற்காக கவலை கொள்ள வேண்டாம். உங்களுக்கான நேரத்தை எடுத்துக் கொள்ளுங்கள். இந்த விஷயங்களை உங்கள் வாழ்க்கையில் உடனடியாக எப்படி செயல்படுத்தப் போகிறீர்கள் என்பதைப் பற்றி சிந்தித்துப் பாருங்கள்.

உங்களுக்கென ஒரு ஒளிமிகுந்த எதிர்காலம் காத்திருக்கிறது என்று தயவு செய்து நம்புங்கள். வாழ்க்கையில் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். நேர் சிந்தனை ததும்பும் ஆக்கபூர்வமான வாழ்க்கையை கட்டமையுங்கள். நேர் சிந்தனை கொண்ட செயல்திறன் மிக அவசியமானது. நேராகப் பாருங்கள், உங்களுக்கான பாதை நிச்சயம் திறக்கும். இந்தக் குறிப்புகள் வெறும் ஒரு தனிமனித வெற்றிக்கானது மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனித சமுகத்துக்கும் ஒரு ஒளி மிகுந்த புதிய எதிர்காலத்தை இது சாத்தியமாக்கும்.

2

வெற்றிக்காக திட்டமிடுங்கள், மிக நேர்த்தியாக

2.1

“நான் நன்றாக இருக்கிறேன்!” என்னும் மனக்கிளர்ச்சி

ஒரு உயர்நிலைப் பள்ளி அனுபவம்

இந்த அத்தியாயத்தில், என்னுடைய தி “ஐ ஆம் ஃபைன்” ஸ்பிரிட் என்னும் புத்தகத்திலிருந்து சில விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். “ஐ ஆம் ஃபைன்” என்னும் இந்தச் சொல், என்னுடைய உயர்நிலைப்பள்ளி ஆங்கில காம்போசிஷன் வகுப்பின் பழைய நினைவுகள் சிலவற்றை எனக்குள் தட்டி எழுப்புகிறது. எப் போதும் திங்கள் கிழமை காலையில்தான் இந்த காம்போசிஷன் வகுப்பு. கடந்து போன ஞாயிற்றுக் கிழமையின் விடுமுறை உணர்வு அப்போதும் எங்கள் மனதில் ஒட்டிக் கொண்டிருக்கும் என்பதால், எங்களைப் பொறுத்தவரை இந்த வகுப்பு எங்களுக்கு மகா சித்திரவதை. சரி, விஷயத்துக்கு வருகிறேன். அப்போதெல்லாம் பேச்சுப் பயிற்சிக்கென்று தனி வகுப்புகள் எதுவும் கிடையாது. அதனால், இந்த காம்போசிஷன் வகுப்பிலேயே பேச்சுப் பயிற்சிகளும் சொல்லிக் கொடுக்கப்பட்டது. என்னுடைய ஆங்கில ஆசிரியர் ஒரு வித்தியாசமான கொள்கை கொண்டவர்: எங்களுடைய ஒவ்வொரு வாரத்தையும் அவர் வெகு உற்சாகத்துடனேயே துவக்கி வைப்பார். எனவே ஒவ்வொரு திங்கள் கிழமை காலையிலும் அவர் எங்களை மேடையில் நிற்க வைத்து ஆங்கிலத்தில் பேச வைப்பார். வகுப்பிலிருந்து ஏதாவதொரு மாணவனைத் தேர்ந்தெடுத்து அவர் கேட்பார்: “ஹவ் ஆர் யூ?”

வகுப்பில் நான் எப்போதுமே முன் வரிசையில்தான் அமர்ந்திருப்பேன். எனவே அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களில் நானும் ஒருவனாக இருப்பேன். ஒரு நாள் அவர் என்னைப் பார்த்து கேட்டார்: “ஹவ் ஆர் யூ?” நான் பணிவாக பதிலளித்தேன். “பரவாயில்லை சார், சோர்வாக இருக்கிறேன்”. அதைக் கேட்டதும் அவர், இதை ஆங்கிலத்தில் எப்படி

நாகரிகமாகச் சொல்வது என்று எனக்கு சொல்லித்தந்தார். “ஐ ஆம் ஃபைன், தேங்க்யூ. அன்ட் யூ?” ஆனால் ஒரு நேர்மையான மாணவனான என்னால் இந்த பதிலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நான் அவரிடம் கேட்டேன்: “சர், எனக்கு ஜலதோஷமாக இருந்தாலும் நான் இப்படித்தான் பதில் சொல்ல வேண்டுமா? அப்படிச் சொன்னால் அதை பொய்யாகி விடுமே?” அதைக்கேட்ட ஆசிரியர் மீண்டும் என்னிடம் “ஐ ஆம் ஃபைன்” என்று சொல்வதே சரியானது அழுத்தமாகச் சொன்னார். அத்துடன், “எனக்கு காய்ச்சலாக இருக்கிறது”, “எனக்கு இன்று சோர்வாக இருக்கிறது” போன்ற பதில்களை ஒரு போதுமே சொல்லக்கூடாது என்றும் அறிவுறுத்தினார். நாங்கள் எப்போதுமே “ஐ ஆம் ஃபைன்” என்று பதில் சொல்ல வேண்டும் என்பதில் அவர் மிகக் கண்டிப்புடன் இருந்தார்.

என்னுடைய உயர்நிலைப்பள்ளி ஆங்கில ஆசிரியர் சொன்ன அந்த அறிவுரை, அவ்வப்போது இப்போதும் என் மனதில் வந்து போகிறது. அவருடைய வகுப்பிலிருந்த பல விஷயங்களும் இப்போது எனக்கு மறந்து போய்விட்டன. ஆனால் அன்று அவர் சொல்லித்தந்த இந்த ஆங்கில நாகரிகப் பேச்சு மட்டும் இன்றும் என் நினைவில் நிற்கிறது. காரணம், அன்று அவர் சொன்னதில் அடங்கியிருந்த உண்மையை இன்று என்னால் அனுபவ பூர்வமாக உணர முடிகிறது. அவர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மைதான். நமது நாட்களை “நான் பலவீனமாக இருக்கிறேன்” அல்லது “நான் சோர்வாக இருக்கிறேன்” போன்ற எதிர்மறைக் குறிப்பு களால் துவங்கவே கூடாது. நீங்கள் எவ்வளவு சோர்வாக இருந்தாலும் சரி, உங்கள் வாயிலிருந்து வரும் முதல் சொல் “ஐ ஆம் ஃபைன்” என்பதாகவே இருக்க வேண்டும். அதன் பிறகு நீங்கள் எத்தனை விரிவாக வேண்டுமானாலும் பேசிக்கொள்ளுங்கள், உங்கள் சுகவீனத்தைக் குறித்து. இது நீங்கள் நாகரிகமாகப் பேசுவதன் அடிப்படை அம்சம். மட்டுமல்ல, இது உங்களிடம் நேர் சிந்தனை மனப்பாங்கையும் வளர்த்தெடுக்கும். அந்த வகுப்பில்தான், நான் ஆங்கிலத்தின் பாஸிட்டிவ் தன்மை எப்படிப்பட்டது என்பதைக் கற்றுக் கொண்டேன்.

ஒரு ஜப்பானியப் பிரதமரின் எதிர்பாராத ஜென் புதிர்

அமெரிக்க முன்னாள் அதிபர் பில் கிளின்டன் ஜப்பானுக்கு வந்தபோது, நடைபெற்றதாக கூறப்படும் ஒரு சுவையான சம்பவம்

இது. விமான நிலையத்தில் அதிபர் கிளின்டனை வரவேற்ற ஜப்பானியப் பிரதமர், அவரிடம் "ஹவ் ஆர் யூ?" என்று கேட்பதற்குப் பதிலாக "ஹூ ஆர் யூ?" என்று வாய்தவறி கேட்டுவிட்டார்.

"ஹவ் ஆர் யூ?" என்று கேட்டிருந்தால், பில் கிளின்டன் நிச்சயமாக "ஐ ஆம் ஃபைன்" என்றோ அல்லது அதற்கிணையான வேறு ஏதாவதொரு பதிலைத்தான் சொல்லியிருப்பார், ஆனால் அவரிடம் கேட்கப்பட்டதோ "ஹூ ஆர் யூ?" ஆனால் அதற்கு அவர் சொன்ன அழகான பதில்: "நான் திருமதி கிளின்டனின் கணவர்".

இந்த சம்பவம் வெறுமொரு வதந்தியாகக் கூட இருக்கலாம். அந்த சந்திப்பின்போது வெகு சிலரே அங்கிருந்ததால், உண்மையிலேயே அங்கு என்ன நடந்தது என்பதைப் பற்றி நமக்கு உறுதியாக எதுவும் தெரியாது. ஆனால் அதே பிரதமர் ஒருமுறை 'ஐடி' என்னும் சுருக்கக் குறியீட்டை வாசிக்கும்போது, அதை 'இட்' (அது) என்னும் பெயரடையாக தவறாகப் படித்துவிட்டார். எங்கள் ஜப்பானியர்களுக்கு 'ஹவ் ஆர் யூ?' 'ஹூ ஆர் யூ' 'ஹவ் டு யு டூ?' போன்ற வாக்கியங்களைப் புரிந்து கொள்வது மகா சிரமம். அன்றாட வாழ்வில் இந்த வாக்கியங்களைப் பயன்படுத்தும் போது அந்த சொற்களில் பலவும் எங்கள் குரல்வளைக்குள் சிக்கி சிதிலமாகிவிடும்.

எங்கள் முன்னாள் பிரதமரின் மீது மேலும் புழுதி வாரி தூற்ற நான் முயற்சிக்கவில்லை. ஜென் புதிர்க் கதைகளைப் போல அவரது கேள்வியிலும் ஆழமான புதிர்கள் புதைந்திருக்கலாம். அப்படிப்பட்ட ஒரு கேள்வியை எதிர்கொள்பவர்கள் எவருமே நிச்சயமாக ஒரு கணம் பேச்சற்றுத்தான் போவார்கள்; அதற்கு என்ன பதில் சொல்வது என்று திகைத்து போவார்கள். என்னிடம் யாராவது வந்து 'ஹூ ஆர் யூ' என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வது என்று நான் திகைத்துத்தான் போவேன். "நான், எல் கான்டெர் என்று சொல்வதா? அல்லது வேறு ஏதாவது சொல்வதா?' பில் கிளின்டனுக்கும், ஜப்பானிய பிரதமருக்கும் இடையிலான இந்த உரையாடலில் இருந்து, நமது பேச்சில் வாழ்த்துக்கள் எத்தனை எத்தனை முக்கியத்துவம் பெற்றவை என்பதைத் தெரிந்து கொள்கிறோம்.

நாம் யார் என்பதை நமது நடத்தையே முடிவு செய்கிறது

நாம் என்ன பேசுகிறோம் என்பதைப் பற்றி நாம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏனென்றால் சொற்களே

வாழ்க்கையைப் பற்றிய நமது கோணத்தை உருவாக்குகிறது. இந்த புத்தகத்தின் பல்வேறு பகுதிகளிலும், என்னுடைய பேச்சுகள் பலவற்றிலும், இதை நான் பலமாக வலியுறுத்தி வருகிறேன். ஆனாலும்கூட, இவை போதும் என்று எனக்குத் தோன்றவில்லை. எப்போதும் நாம் எதைப் பற்றி சிந்தித்து கொண்டிருக்கிறோமோ அதுவே நமது வாழ்க்கையின் முக்கிய அம்சமாகிறது. ஒரு குறிப்பிட்ட நாளில் நீங்கள் எதைப்பற்றி சிந்திக்கிறீர்கள் என்பது உங்கள் வாழ்நாளில் பலத்த மாற்றங்கள் எதையும் ஏற்படுத்தி விடப்போவதில்லை. ஆனால் ஒரு வருடம் முழுக்க, அல்லது மூன்று வருடங்களாக அல்லது கடந்த இருபது வருடங்களாக நீங்கள் சதா எதைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்களோ, அந்த சிந்தனையே உங்களை கட்டமைக்கிறது.

இங்கே உங்கள் மனதின் நடத்தை வெகு முக்கியமானது. இதுவெறும் ஒரு பழமொழி அல்ல. அப்பட்டமான உண்மை. இதுதான் நிதர்சனம். உங்கள் மனதில் அலையடிக்கும் எண்ணங்கள் உங்கள் கண்ணுக்கு புலனாகாமல் இருக்கலாம். ஆனால் அவைதான் உங்கள் எதிர்காலத்தை கட்டமைக்கின்றன. இதைத்தான் நான் வாய்ப்பு கிடைக்கும் பொதெல்லாம் வலியுறுத்தி வருகிறேன். ஏனென்றால், இந்த அனுபவபூர்வமான உண்மையை ஏராள மானோர் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

“ஐ ஆம் ஃபைன்!” என்னும் இந்த மனோபாவத்தை நாம் ஒவ்வொருவருமே கடைபிடிக்க முடியும் என்று நான் நம்புகிறேன். “நெவர் லூஸ் யுவர் ஹங்ரி ஸ்பிரிட்”[1] என்னும் எனது பேச்சில் ஒரு முறை நான் குறிப்பிட்டேன்: அறிவுத் தாகமும், சுய முன்னேற்ற சிந்தனைகளும் உங்களிடம் இருக்கும் வரையில், உங்களுக்கு எத்தனை வயதானாலும் நீங்கள் வயோதிகராகவே கருதப்பட மாட்டீர்கள். “ஐ ஆம் ஃபைன்!” என்னும் இந்த மனோபாவாம் இளைஞர்களைப் போலவே முதியவர்களுக்கும் மதிப்பு மிக்க ஒன்றுதான். நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருக்கும் போதோ, வயோதிக பிரச்சனைகளால் அவதிப்படும் போதோ ஒரு சின்னஞ்சிறு புன்சிரிப்புடன் “ஐ ஆம் ஃபைன்!” என்று சொல்லும் வலிமை உங்களிடம் இருக்குமானால் அதுவே நீங்கள் ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதற்கான அத்தாட்சி. மட்டுமல்ல,

அது உங்களைச் சுற்றியுள்ளவர்கள் மீது நீங்கள் செலுத்தும் அன்பின் வெளிப்பாடும் கூட. எனவே இன்றிலிருந்து, ஒரு எதிர்மறை எண்ணம் உங்கள் உதட்டில் உதிர்ந்து வருவதாகத் தோன்றும் அக்கணமே மனதில் நேர் சிந்தனையை உருவாக்கிக் கொண்டு “நான் மிக மிக உற்சாகமாக இருக்கிறேன்!” என்று உரத்து சொல்லப் பழகுங்கள்.

[1] **பார்க்க:** ரியோ ஒகாவாவின், தி லாஸ் ஆஃப் கரேஜ் (டோக்கியோ: ஐஆர்ஹெச் பிரஸ், 2009). இந்தச் சொற்பொழிவு டோக்கியோ ஷோஷி கானில், ஹேப்பி சயின்ஸ் வளாகத்தில் 2007, அக்டோபர் 6 ஆம் தேதி நடைபெற்றது.

2.2

எளிமையாக சிந்தியுங்கள்

அறிவும், அனுபவங்களும் அதிகப்படியாவது உங்கள் சிந்தனையை சிக்கலாக்கிவிடும்

என்னுடைய தி "ஐ ஆம் ஃபைன்" ஸ்பிரிட் புத்தகம் எனது போதனைகளின் முக்கிய அம்சங்களின் தொகுப்பாகும். அதன் முன்னுரையில் நான் எழுதியிருந்தது போலவே, அந்த புத்தகம் வயது, இனப் பாகுபாடுகள் எதுவுமின்றி அனைத்து தரப்பு மக்களுக்கும் பயன்தருவதாகும். வாசகர்களின் முதல் நிலை படிப்புக்கு ஏற்ற சிறந்த மதிப்பீடுகள் அடங்கியதாக கருதப்படும் இந்த புத்தகத்தை, வெறும் ஒரு உதவி நூலாக படிப்பது பரிதாபத்துக்குரியது. வாழ்க்கையின் பல்வேறு சூழல்களிலும் பயன்தரும் படிப்பினைகள் நிறைந்த இந்த புத்தகம், உங்கள் நிறுவனத்தின் பணியாளர் உதவி நூலாகவும் பயன்படும்.

தி "ஐ ஆம் ஃபைன்" ஸ்பிரிட் புத்தகம் ஏராளமான விஷயங்கள் அடங்கியது என்பதால், அதிலிருந்து ஒரு சில குறிப்புகளை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். முதல் பகுதி எளிய, கவலையற்ற வாழ்க்கையைப் பற்றி பேசுகிறது. இது உண்மையிலேயே ஒரு ஆச்சரியப்படத்தக்க உயர்ந்த மதிப்பீடு. கால ஓட்டத்தில் நாம் மேலும் மேலும் கற்கும் புதிய விஷயங்களும், புதிய வாழ்க்கை அனுபவங்களும் நமது மனதை சிக்கலுக்குள் ஆழ்த்தி விடுகின்றன. அறிவின் எடை அதிகரிக்கும்போது, அதைப் பற்றிய எண்ணங்களின் அளவும் அதிகரிக்கிறது. அதைப் போலவே அதிகமான அனுபவ பாடங்கள் மிகுதியான எதிர்மறைச் சிந்தனைகளை நமது மனதில் கட்டி எழுப்புகிறது. சிக்கல் நிறைந்த வாழ்க்கை, நம்மை குழப்பத்தில் ஆழ்த்திவிடுகிறது. விருப்பங்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டு, என்ன செய்வது என்று புரியாமல் அதைப் பற்றி நீண்ட நேரம் கவலை கொள்வதிலேயே நமது பொழுதை பாழாக்கிக் கொள்கிறோம்.

அறிவும் அனுபவமும் அதிகரிக்கும்போது நாம் திறமைசாலிகளாகத்தான் மாறியிருக்க வேண்டும். ஆனால் தங்களது முப்பதுகளில், நாற்பதுகளில், ஐம்பதுகளில், அறுபதுகளில்... நிற்கும் மனிதர்களில் பலரும், தமது பொழுதுகளின் பெரும்பாலான நேரத்தை கவலைப்படுவதிலேயே செலவிடுகிறார்கள்; தாங்கள் சிரமத்துக்கு ஆளாவதாக நினைக்கிறார்கள். நமது சிந்தனைப் பாங்கு அளவுக்கு அதிகமாக விரிவடையும்போது, விஷயங்களை அதன் உண்மையான எளிய வடிவில் காணும் திறனை நாம் இழந்து விடுகிறோம்.

நாம் இளைஞர்களாக இருக்கும்போது, துணிச்சலாகவும் தீர்க்கமாகவும் செயல்படுவது எளிது. ஏனென்றால் அப்போது நமது அறிவும் அனுபவமும் ஒரு துடைத்து வைத்த சிலேட்டைப்போல சிக்கல் எதுவுமின்றி படு சுத்தமாக இருக்கிறது; மட்டுமல்ல, அப்போது எதுவும் நம்மை பின்னோக்கி இழுப்பதுமில்லை. ஆனால், வயது ஏற ஏற நம்முடைய வலிமை மறைய ஆரம்பித்து விடுகிறது. இந்த கட்டத்தில் நாம் வாழ்க்கையை ஒரு பாதுகாப்பான கோணத்தில் அணுக ஆரம்பித்து விடுகிறோம்; ஒரு விஷயத்தை புதிய முறையில் அணுக நாம் தயங்குகிறோம். ஏனென்றால் பழைய வழிமுறைகளே இதுவரையிலும் நன்றாகச் செயல்படுவதை நாம் அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறோம். அல்லது இரண்டு நபர்களுக்கிடையேயான ஒரு பேச்சுவார்த்தைக்கு நாம் தயங்குகிறோம், ஏனென்றால் அது ஏதாவது ஒருவரை காயப்படுத்தி விடக்கூடும் என்று நாம் அஞ்சுகிறோம். இப்படித்தான் அதிகப்படியான சிந்தனைக்குள் நாம் மெதுவாக வழுக்கி விழுகிறோம். இதற்கு பதிலாக விஷயங்களை மிக எளிமையாகவும், சிக்கலின்றியும் பார்க்கும் தொடர் முயற்சியை நாம் கைக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்யும்போது நமது மெய்யறிவு தானாகவே வளர்வதை நம்மால் உணர்ந்து கொள்ள முடியும். காரண காரியங்களுக்கு ஏற்ற விதத்தில் நம்மை நாமே ஒழுங்கமைத்துக் கொள்ளும்போது, புதிய அறிவும், புதிய அனுபவங்களும் நம்மை சிக்கல்களுக்குள் புதையுண்டு போகாமல் தடுத்துவிடும்.

மனதில் படியும் சிலந்தி வலைகளை அறுத்தெறியுங்கள்

அன்றாட பராமரிப்பு இல்லையென்றால், நமது மனம்

எண்ணங்கள் என்னும் சின்னஞ்சிறு சிலந்தி வலைகளால் நிரம்பி வழிந்து விடும், மிக எளிதாக. உங்கள் மனதில் சேர்ந்து விட்ட சிலந்தி வலைகளால் வெகு சீக்கிரத்திலேயே நீங்கள் சிக்கலுக்குள் அமிழ்ந்து, செயல்பட முடியால் தத்தளிக்க ஆரம்பித்து விடுவீர்கள். இப்படிப்பட்ட திகைப்பூட்டும் நிலையை நீங்கள் உணர்ந்தால், உடனடியாக உங்கள் மனதை சுத்தம் செய்ய உறுதி கொள்ளுங்கள். ஒருமுகப்பட்ட பயிற்சியால் மனதை தூய்மைப்படுத்தும் பணியில் நீங்கள் தொடர்ச்சியாக ஈடுபடும்போது, அந்தப் பணியை மேலும் எளிமையாகவும், பகுத்தறிவுடனும் செய்யும் சிந்தனைத்திறன் மீண்டும் உங்களிடம் வந்து சேர்ந்துவிடுகிறது.

உங்கள் மனதிடமே கேளுங்கள். உங்களை வலைக்குள் வீழ்த்தும் சிலந்தி வலைகள் எவையேனும் மனதிற்குள் இருக்கிறதா என்று. சிலந்தி வலையில் சிக்கி சிறகுகளை படபடவென்று அடித்து, தப்பிக்க வழிதேடும் பட்டாம்பூச்சியைப்போல, உங்கள் மனதும் தத்தளித்து தவிக்கிறதா? இந்த சிலந்தி வலைகள்தான் நம்மை வீழ்த்தும் வாழ்க்கைத் தளைகள்; அவை மனித உறவுகளை பிரிக்கும் சிறைக்கம்பிகள். அல்லது பணியிடத்தில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள். இப்படிப்பட்ட வாழ்வியல் சிக்கல்களால் நீங்கள் பிணைக்கப்படும்போதெல்லாம், உறுதியான மனம் என்னும் துடைப்பத்தால் அந்த சிலந்தி வலைகளையெல்லாம் பெருக்கித் தள்ளுங்கள். பகுத்தறிவுடன் விஷயத்தை அணுகுங்கள். எளிமையாக சிந்தியுங்கள்.

சொல்லப்போனால் எளிமையாக சிந்திப்பதுதான் மிக சிரமமான காரியம். ஆனால் அதன் பலன்களோ அளவில்லாதது. எளிமையாக சிந்திப்பது, நமக்கு செயல்படும் ஆற்றலைத் தருகிறது. விஷயங்களை எளிமையாகப் பார்ப்பது, நீங்கள் என்ன செய்ய வேண்டும், எத்தகைய முடிவை எடுக்க வேண்டும் என்னும் தெளிவான பார்வையைத் தருகிறது. இது தடைகள் இல்லாமல், உங்கள் இலக்கை நேரடியாக சென்றடைய உங்களுக்கு உதவுகிறது. வேறொரு உதாரணத்தையும் இங்கே பயன்படுத்திப் பார்ப்போம். சிலந்தி வலையில் அகப்படுவதென்பது அண்டார்டிக் பகுதியின் அடர் பனிப் படிவுகளுக்குள் இயங்க முடியாமல் அகப்பட்டுக் கொள்வதைப் போன்றது. அந்த தடிமனான பனிப்பாளங்களைப் பிளந்து செல்லும் பனி உடைப்பான்களைப் போல நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். பயணம் தடைப்படும்போதெல்லாம், பனியைக் கிழித்து நமக்கான

பாதையை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

உயர்ந்த மதிப்பீடுகளுக்காக சிறிய விஷயங்களை வெகு இலாவகமாக தியாகம் செய்யுங்கள்

அறிவு ஜீவிகளில் பலரும் அளவுக்கு அதிகமான சிந்தனைகளால் முடங்கிப் போகிறார்கள். எனவே அவ்வப்போது சிந்தனைகள் இன்றி வெறுமையாக இருப்பதன் முக்கியத்துவத்தை நினைத்துப் பார்ப்பது நல்லது. தன்னடக்கத்துடன் மன நிறைவாக வாழப் பழக வேண்டும். அதை விடுத்து, கடந்த காலத்திலேயே அமிழ்ந்து விடக்கூடாது. அடுத்தவர்களின் உணர்வுகளைக் குறித்து அதிகப்படியாக சிந்திப்பதை நிறுத்த வேண்டும். கடந்த கால காயங்களையும், பகைமை உணர்வுகளையும் மறந்து விட வேண்டும். இவற்றையெல்லாம் உடனடியாக விட்டொழியுங்கள்; இதுதான் எளிமை.

விஷயங்களை அதன் இயல்பான போக்கில் ஏற்றுக்கொண்டு, அதிவேகமாய் அதிலிருந்து வெளியேறும்போது நேர்த்தியாக வாழும் கலை மிக இயல்பாக உங்களுக்கு கைவந்துவிடும். நேர்த்தியாக வாழுதல் என்பது பல்வேறு விஷயங்களை உள்ளடக்கியது. ஆனால் சுருக்கமாகச் சொன்னால், என்னைப் பொறுத்தவரை, மதிப்பு மிகுந்த ஒன்றைப் பெறுவதற்காக மற்றொன்றை-அவை எண்ணிலடங்கா நமது விருப்பமாக இருந்தாலும் சரி- முழுமையாக தியாகம் செய்யும் திறனில் இருந்துதான் நேர்த்தியான வாழ்க்கை துவங்குகிறது. எதிர்மறையான தளைகள் பல வழிகளிலும் நம்மை வந்து சேர்கின்றன. அனைத்தையும் அடைந்தாக வேண்டும் என்று தாகத்துடன் அலையும்போது, நமது வாழ்க்கை முழுவதுமே நாம் முடங்கிப் போய்விடுகிறோம். எனவே பிறரைப் பற்றி அதீதமாக சிந்துப்பதை விட்டுவிட்டு, அதி முக்கியமான விஷயங்களைத் தேர்வு செய்ய உறுதி கொள்ளுங்கள்; பயனற்ற சிறிய விஷயங்களை கைகழுவிவிடுங்கள். இப்போது உங்கள் மனம் எடையற்று மிக இலேசாக இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். எளிமையாகவும், நேர்த்தியாகவும் வாழ்வதே புத்திசாலித்தனமான வாழ்க்கை என்று நான் நம்புகிறேன். இருவேறு விருப்பங்களுக்கு இடையே சிக்கி நசுங்கி, முடங்கிப் போக வேண்டிய அவசியமே இல்லை; இதனால் உங்கள் நேரம்தான் ஏராளமாக வீணடிக்கப்படுகிறது.

அளவுக்கு அதிகமான தாழ்வு மனப்பான்மையும் சுயநலத்தின் ஒரு வடிவம்தான்

நமது இளைமைக் காலத்தில், நாம் அனைவருமே மிக எளிதாக தாழ்வு மனப்பான்மைக்கு ஆளாகி விடுகிறோம். இப்படிப்பட்ட ஏதாவதொரு மனச்சிக்கலுக்கு ஆளாகாதவர்கள் என்று இந்த உலகில் எவருமே இல்லை. நாம் கட்டாயம் தவிர்த்துவிட வேண்டிய பல விஷயங்களில் இந்த குழந்தைப் பருவ மனச்சிக்கலும் ஒன்று. இந்த ஐம்பது, அறுபது, எழுபது வயதிலும் அதிகநேரம் அந்த மனச்சிக்கல்களுக்குள்ளேயே அமிழ்ந்திருப்பது, உங்கள் குழந்தைப்பருவ தாழ்வு மனப்பான்மை இன்னமும் உங்களை விட்டு அகலவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது. வாழ்க்கைப் பயணத்தின் ஏதாவதொரு இடத்தில், இந்த மனச்சிக்கல்களையெல்லாம் உதறித் தள்ளி விட்டு, புதியதொரு மாற்றத்துக்கு நம்மை நாம் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

வயதுக்குவந்தவர்களாக மாறும் முதிர்ச்சியின் மிக முக்கியமான அடையாளம் இது. அடுத்தவர்களின் இரக்கத்தை இன்னமும் யாசித்து நிற்பது, நாம் இன்னமும் முழுமையாக முதிர்ச்சிபெறாத ஒரு விடலை என்பதையே காட்டுகிறது பெற்றோர்களின் உதவியை இன்னமும் எதிர்பார்த்திருப்பவர்கள், அவர்களுக்கு எத்தனைதான் வயதானாலும், அவர்கள் இன்னமும் வயதுக்கு வராதவர்கள்தான். அடுத்தவர்களுக்கு உதவி செய்யும் நிலையில் இருப்பவர்கள்தான் உண்மையிலேயே வயதுக்கு வந்தவர்களே தவிர, அடுத்தவரை சார்ந்திருபவர்கள் அல்ல. தாழ்வு மனப்பான்மை அடுத்தவர்களைப்பற்றி நினைக்கவே தனக்கு நேரமில்லை என்னும் சுயநல மனப்பான்மைக்கு நம்மை இட்டுச் செல்கிறது. நம்மைப்பற்றியும், நம்மை எப்படி காப்பாற்றிக்கொள்வது என்பதைப்பற்றியுமே நாம் கவலைப்படுகிறோம். எனவே ஏதாவதொரு மனச்சிக்கலுக்குள் நாம் அகப்பட்டுக் கொண்டிருப்பதாக உணர்ந்தால், எத்தனை விரைவாக முடியுமோ அத்தனை விரைவாக அதிலிருந்து விடுபட்டுவிடவேண்டும்.

தாழ்வு மனப்பான்மையால் தவிப் பவர்களிடம் எப்போதுமே ஒரு குணம் உண்டு. அவர்கள் தங்களது இதயம் வெகு தூய்மையானது என்றும், அது கண்ணாடியைப் போல வெகு எளிதில் உடைந்துவிடும் என்றும் நம்பிக்கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட சுய படிமம் உங்களுக்குள் பல வருடங்களாக

இடம்பெற்றிருந்தால், இப்போதே அதை துடைத்தெறியுங்கள். ஏனென்றால், அதுவொரு உருச்சிதைந்த படிமம்; அது தன்னலத்தின் மற்றொரு வடிவம். நாம் சிறியவர்களாக இருக்கும்போது, தாழ்வு மனப்பான்மைக்குள் சிக்கிக் கொள்வது தவிர்க்க முடியாததுதான். ஆனால் அதையே பலவருடங்களாக தூக்கிச் சுமந்துகொண்டிருந்தால், வெகு விரைவிலேயே அது தன்னலம் அல்லது ‘நான்’ என்னும் தன்முனைப்பாக உருப் பெற்றுவிடும். எனவே உங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பதை நிறுத்திவிட்டு அடுத்தவர்களுக்கு உதவி செய்வதை நோக்கி உங்கள் மனதைத் திருப்புங்கள்.

தாழ்வு மனப்பான்மையிலிருந்து முழுமையாக விடுபட்டவர்கள் என்று எவருமே இந்த உலகில் இல்லை. மட்டுமல்ல இந்த உணர்வுச்சிக்கலில் இருந்து விடுபட நாம் அனைவருமே பலவிதமான சவால்களையும் சந்தித்தாக வேண்டும். ஆனால் இதற்கான தீர்வோ வெகு எளிமையானது; உங்களுடைய பிரச்சனைகளுக்காக அடுத்தவர்களை சிரமப்படுத்துவதை விட்டுவிட்டு, அடுத்தவர்களின் சிக்கல்களுக்கான தீர்வு களை கண்டுபிடிக்க உதவும் விதத்தில் உங்களை உருமாற்றிக் கொள்ளுங்கள். இதை நிறைவேற்ற உங்களிடம் முழு ஈடுபாடு இருந்தால் மட்டும் போதும்.

2.3

துணிச்சலாக இருங்கள், பிரச்சனைகளை எதிர்கொள்ளுங்கள்

பிரச்சனைகளை நேரடியாக அணுகுங்கள். அவற்றை உங்கள் வளர்ச்சிக்கு உரமாக்கிக் கொள்ளுங்கள்

விமர்சனங்களுக்கு எதிராக துணிச்சலுடன் முகம் காட்டுவதே “ஐ ஆம் ஃபைன்!” என்னும் தொடரின் நான்காவது கட்டம். நமது கவலைகள், பணிப் பொறுப்புகள், வாழ்க்கை சிரமங்கள் ஆகியவற்றை நேரடியாகவும், ஆக்கபூர்வமாகவும் ஏற்றுக் கொள்ள நாம் முயற்சிக்க வேண்டும். ஒரு இலகுவான வாழ்க்கையை வாழ்வதற்காக நாம் இந்த உலகுக்கு வரவில்லை. வாழ்க்கையின் நோக்கமே சவால்களை எதிர்கொள்வதுதான். அதுவே நமது ஆன்மாவை அடுத்த தளத்துக்கு நகர்த்துகிறது; முன்பை விடவும் அதை ஒளி மிக்கதாக மாற்றுகிறது. இப்படித்தான் ஹேப்பி சயின்ஸ் நம்புகிறது. நமக்கு மட்டும் ஏன் இந்த கரடு முரடான வாழ்க்கை, அடுக்கடுக்கான சுமைகள் என்று நினைக்கும் போதெல்லாம், ஒன்றை மட்டும் நினைவில் கொள்ளுங்கள். நம்மால் தாங்க முடியாத சுமைகள் எதுவும் இதுவரையில் நம்மீது சுமத்தப்படவில்லை. உங்களால் தாக்குப்பிடிக்கும் அளவுக்கான பிரச்சனைகளே, உங்கள் முன்னால் முகம் காட்டி நிற்கின்றன.

நமது வாழ்க்கை எத்தனை கடினமாக மாறிக்கொண்டிருக்கிறது என்பது ஒரு விஷயமே இல்லை. ஏனென்றால், ஒரு கட்டத்தில் நாம் அனைவருமே இந்த உலகத்திலிருந்து தேர்ச்சி பெற்றுவிடுவோம்; மட்டுமல்ல, அப்போது நமது பிரச்சனைகளும் நம்முடனேயே மரணித்துப் போய்விடும். அவ்வளவுதான் வாழ்க்கை. உயிருடன் வாழ நமக்கு வழங்கப்பட்ட நேரத்தைச் செலவிடவும், இந்த வாழ்க்கையின் துயரங்களை ஏற்றுக்கொண்டு அதை நமது ஆன்ம வளர்ச்சிக்காக மேம்படுத்திக் கொள்வதற்காகவும்தான் நாம் இந்த பூமிக்கு

வந்திருக்கிறோம்.

ஒரு சிலர், பிரச்சனைகளிலிருந்து தப்பித்துப் போவதை ஒரு பழக்கமாகவே வைத்திருக்கிறார்கள். நமது பிரச்சனைகள் தீர்க்கப்படவே முடியாத அளவுக்கு பெரிதானவை என்றும், நமது வேலைகள் நம்மிடமிருந்து அளவுக்கு அதிகமான செயல்பாட்டை எதிர்ப்பார்க்கின்றன என்றும் நாம் நம்பிக் கொண்டிருக்கிறோம். “இதற்கு மேல் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது...”,“இன்று மீண்டும் ஒரு முறை ஓவர்-டைம் வேலை பார்ப்பதைப் பற்றி என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியாது”, “இந்த வேலை எனக்கு மகா சிரமமானது”, என்னால் முடியவே முடியாது!”-என்று வெகு இயல்பாகச் சொல்லும் பழக்கத்துக்கு நாம் ஆட்பட்டுவிட்டோம்.

பல நேரங்களிலும், இப்படிப்பட்ட எதிர்மறை எண்ணங்களை வாடிக்கையாக மீண்டும் மீண்டும் சொல்வதுதான், நம்மை மகிழ்ச்சியற்றவர்களாக மாற்றுகிறது. நீங்கள் உங்களிடமே கேட்டுப்பாருங்கள். இப்படிப்பட்ட எதிர்மறை எண்ணங்கள் ஏதேனும் உங்களுக்குள் இருக்கிறதா என்று. மீண்டும் ஒரு எதிர்மறைச் சொல்லை உங்கள் உதட்டிலிருந்து உதிர்ப்பதற்கு முன்னால், சற்றே பொறுங்கள். உங்கள் பிரச்சனைகளை கனிவுடன் ஏற்றுக்கொள்ள மீண்டும் ஒரு முறை முயற்சித்துப் பாருங்கள். உங்களது பிரச்சனையைப்பற்றி சிந்திக்கும்போது- உதாரணமாக, பணியிடத்தில் மிகச் சிரம மான பொறுப்பு, அல்லது வாழ்க்கையின் ஒரு சிரமமான கணம்- அதை அமைதியாக ஏற்றுக் கொள்ளுங்கள். பிரச்சனையிலிருந்து தப்பித்து ஓடாதீர்கள். மாறாக, அதை துணிச்சலுடன் எதிர்கொள்ளுங்கள். “இந்த சவால் ஏன் எனக்கு வழங்கப்பட்டது என்று நான் ஆச்சரியப்பட்டு போனேன். இது நிச்சயமாக நான் வளர்வதற்காக எனக்கு வழங்கப்பட்ட ஒரு நல் வாய்ப்பு” என்று உரத்த குரலில் உங்களுக்குள்ளேயே சொல்லுங்கள்.

துணிச்சலாக இருங்கள்

இறுதிக் கணக்கீட்டில் மனிதர்களின் திறமைகளில் பெரிய வேறுபாடுகள் எதுவும் இருப்பதில்லை. ஆனால் துணிச்சலில் தான் பலத்த பின்னடைவு. இது நமக்கு வித்தியாசமாகத் தோன்றலாம். ஆனால் அதுதான் உண்மை. அறிவுச் செருக்கும், அதிகாரப் பதவியும் இருக்கும்போது நாம் அனைவருமே

துணிச்சல் குறைந்த இயல்புடன்தான் செயல் பட்டிருப்போம். சிக்கலின் காரணம் இதுதான்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தங்கள் வாழ்நாளின் பெரும்பகுதியையும் தங்கள் துறை சார்ந்த விஷயங்களைப் படிப்பதிலேயே செலவிடுகிறார்கள். அதிலும் ஜப்பானியப் பல்கலைக் கழக பேராசிரியர்கள், பிற பேராசிரியர்களை விடவும் அறிவு மிக்கவர்களாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஏனென்றால், அவர்கள் உலகின் மிகச்சிறந்த கல்வி நிறுவனங்கள் ஒன்றில் பணியாற்றுகிறார்கள். ஆனாலும், அங்கே பேராசிரியர்கள் பதவிக்கு வருபவர்களில் பெரும்பாலானோர், மிகக் குறைந்த அளவிலான புத்தகங்களையே வெளியிட்டு வருகிறார்கள் என்பது ஒரு எதிர் முரண். தவறாக ஏதும் அச்சிட்டுவிட்டால், தங்களைப் பற்றிய நன்மதிப்பு சிதைந்து போகுமே என்று அவர்கள் கவலைப்படுவதுதான் இதற்கு காரணம். ஆழமான ஆராய்ச்சி முடிவுகளை எட்டுவது வரையிலும் அவர்கள் தமது புத்தக வெளியீட்டை தள்ளிபோட்டுக்கொண்டே இருக்கிறார்கள் அதைச் செய்வதற்கான துணிச்சலை ஒருங்கிணைப்பது அவர்களுக்கு மகா சிரமமான காரியம். தமது வாழ்நாளின் பெரும்பகுதியையும் ஆராய்ச்சியிலும் படிப்பிலுமேயே செலவிட்டு வரும் அந்த அறிவு ஜீவிகள், சொல்லப்போனால், தற்போது இருப்பதை விடவும் மிக அதிகமான புத்தகங்களை வெளியிட்டிருக்க வேண்டும் என்பதே சாமானியர்களின் எதிர்பார்ப்பு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்கள் மிகச் சொற்பமான புத்தகங்களையே வெளியிட்டு வருகிறர்கள்.

மிகப் பெரிய நிறுவனங்களில், உயர் பொறுப்புகளில் பணியாற்றும் பலரிடமும் இப்படிப்பட்ட இயல்புதான் காணப்படுகிறது. உயர்ந்த பொறுப்பு வகிப்பவர்கள் துணிச்சல் மிக்க வர்களாக இருக்க வேண்டும். முக்கியமான விஷயங்களில் வெகு விரைவாக முடிவுகளை எடுக்க வேண்டும். ஆனால் நிலைமையோ தலைகீழ். முக்கியமான கோப்புகள் பலவும் அவர்களுடைய இழுப்பறைக்குள் பத்திரமாக ஓய்வெடுக்கின்றன. திறமைசாலிகளில் பலரும் இப்படி முக்கியமான விஷயங்களில் முடிவெடுப்பதை தவிர்க்கும் போது, அவர்களால் தமது நிறுவனத்துக்கு மிகச்சிறந்த வெற்றிகளை கொண்டு சேர்க்க முடியாமல் போய்விடுகிறது. பல நேரங்களில் வாழ்க்கையிலும் இப்படித்தான் நிகழ்ந்து விடுகிறது.

துணிச்சலே நமது அடிப்படைத் தேவை. நாம் அனைவருமே துணிச்சல் மிக்கவர்களாக இருக்க வேண்டும். ஏனென்றால், துணிச்சல்தான் மாற்றங்களைக் கொண்டுவரும். அறிவுக்கும் கூட எல்லை வரம்புகள் உண்டு. ஏனென்றால் உலகில் அனைத்துமே துணிச்சலை மையமிட்டே அமைகிறது.

விளிம்புக்குள் தள்ளப்படும்போது அதிலிருந்தே நாம் முகிழ்த்தெழுகிறோம்

உங்களுக்கு ஒரு பதவி வழங்கப்படும்போது, அதற்கான பொறுப்புகளை நீங்கள் கடைப்பிடித்தே ஆக வேண்டும். அது 2007, நவம்பர். அயல்நாட்டில் ஆங்கிலச் சொற்பொழிவாற்ற நான் துணிச்சலுடன் சென்ற நாள்.[2] த ஸ்டார்ட்டிங் பாயின்ட் ஆஃப் யூத்[3] என்னும் என்னுடைய புத்தகத்தைப்பற்றிய முதல் சொற்பொழிவு[4] முடிந்து சரியாக ஒரு மாதத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சொற்பொழிவு அது. ஆங்கிலத்தைப் படிப்பதற்காக பெரும்பாலான நேரத்தை செலவிட்ட போதிலும், இன்னும் என்னால் ஆங்கிலத்தில் மிக இலாவகமாகவும், சரளமாகவும் பேச இயலவில்லை என்று அந்தப் புத்தகத்தில் நான் தெரிவித்திருந்தேன். ஆனால் உங்கள் மூச்சை இழுத்து பிடித்துக்கொள்ளுங்கள், அந்த சொற்பொழிவு நடந்த அடுத்தமாதமே நான் அயல்நாட்டில் ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினேன். நமது வாழ்க்கையில் அடுத்த கணம் என்ன நிகழும் என்பது நமக்குத் தெரியாது என்பதை, நான் புரிந்து கொண்ட நிகழ்வு அது.

அதற்கு முன்னால் அயல்நாட்டில் நான் ஆங்கிலச் சொற்பொழிவுகள் எதுவும் நிகழ்த்தியதில்லை. என் வாழ்க்கையில் முதன்முதலாக, அயல் மண்ணில் ஒரு ஆங்கிலச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டிய சூழல். ஹேப்பி சயின்ஸ் குழும நிறுவனர் என்னும் நிலையில், எனது பொறுப்புகளிலிருந்து என்னால் விலகி ஓட முடியாது. எனவே என்னுடைய அந்த ஆங்கிலப் பேச்சு எப்படி இருக்கும் என்பதைப் பற்றி வீணாக கவலைப்பட வேண்டாம் என்று நான் முடிவு செய்தேன். ஆனால், எனது பேச்சின் சுருக்கத்தையாவது பங்கேற்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எனது கவலை என்று எனக்குள்ளேயே நான் சொல்லிக் கொண்டேன். எனவே என்னுடைய சுய அனுபவத்திலிருந்து ஒன்று சொல்கிறேன்: உங்களுடைய பொறுப்புகளிலிருந்து ஒரு போதும் விலகி

ஓடாதீர்கள்; அதை சந்திப்பதற்கான துணிச்சலை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

நேர்த்தியாக ஆங்கிலம் பேசும் மக்களின் முன்னால், சரியான ஆங்கிலப் பயிற்சி இல்லாத ஒருவர் பேசுவது சுத்த பைத்தியக்காரத்தனம் என்றுதான் பலருக்கும் தோன் றும். கேள்வி பதில் நிகழ்வில் தாய்மொழி பேசுபவர்கள் மட்டுமல்லாமல், அயல்நாட்டில் பத்து இருபது வருடங்களுக்கு மேல் வாழ்ந்துவரும் ஜப்பானியர்களும் கூட நுனி நாக்கு ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுவதைக் கண்டேன். தாய்மொழி பேசுபவர்களைப் போலவே பேசும் அவர்கள், என்னைவிட பல மடங்கு திறமைசாலிகள். ஆனால், எனது மொழித்திறமை எப்படியிருந்தாலும், சொற்பொழிவுகளே என்னுடைய முக்கிய வேலை; அதுதான் என்னுடைய வாழ்க்கைத் தொழில். புரொஃபஷனல்கள் தமது கடமையிலிருந்து விலகிச் செல்லக்கூடாது. ஒரு பணி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டால், அதன் பிறகு சாக்குப் போக்குகள் இல்லை; பின்னோக்கிய பயணம் இல்லை.

வெறும் மூன்று நாள் ஆங்கிலப் பயிற்சிக்கே நேரம் இருந்த போதிலும், எனது ஹவாய் சொற்பொழிவை எப்படியோ சமாளித்து விட்டேன். என்னுடய முந்தைய வேலையில் ஆங்கிலத்திப் பயன்படுத்தி இருபது ஆண்டுகளுக்கு மேல் ஆகி விட்டன. எனவே நாளொன்றுக்கு பத்து மணி நேரம் வீதம், மூன்று நாட்களும் ஆங்கிலத்தை தவிர வேறு எதைப் பற்றியுமே நான் சிந்திக்கவில்லை. அதன்பின் நேரடியாக நான் ஹவாய் சொற்பொழிவுக்குத்தான் சென்றேன். கால அவகாசம் மிகக் குறைவாகவே இருந்தபோதிலும், முழு ஈடுபாட்டுடன் ஒன்றைச் செய்தால், நிறைவேற்ற முடியாத விஷயங்கள் என்று எதுவுமே இல்லை என்பதை நான் அப்போதுதான் தெரிந்து கொண்டேன். பின்வாங்கிச் செல்லும் வாய்ப்பு இல்லையென்றால், மனித இனத்தால் சாதிக்க முடியாத செயல்கள் என்று எதுவுமே இல்லை என்று இந்த ஹவாய் சொற்பொழிவு எனக்குப் புரியவைத்தது.

எனது முதல் முயற்சியிலேயே என்னால் ஆங்கிலத்தில் சொற்பொழிவுகள் ஆற்ற முடியும் என்பதைத் தெரிந்து கொண்டேன். இதை அடுத்து, வெகு விரைவிலேயே நான் தொடர்ச்சியாக பல சொற்பொழிவுகளை வழங்க ஆரம்பித்து விட்டேன். இதில் சுவாராசியமான விஷயம் என்னவென்றால்,

எனது பேச்சை கேட்டவர்கள் எல்லோருமே நான் ஆங்கிலத்தை வெகு திறமையாக பயன்படுத்தினேன் என்றே நம்பினார்கள். உண்மையில், என்னுடைய பேச்சை விடவும் அவர்களுடைய ஆங்கிலப் பேச்சே சிறந்தது. ஆனால், ஜப்பானிய மொழியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட விரிவுரைகள் நிகழ்த்திய பொது மேடை அனுபவம் என்னிடம் இருந்தது.[5]

என்னுடைய ஆங்கிலத் திறன் எப்படிப்பட்டதாக இருந்தாலும், மேடைப்பேச்சில் சாதனைகள் நிகழ்த்திய புரொஃபஷனல் நான். அதே நேரத்தில், ஹேப்பி சயின்ஸ் முழுமத்தைச் சேர்ந்த புதிய உறுப்பினர்கள், என்னை விடவும் திறமையான ஆங்கிலப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தாலும், ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றும்போது தடுமாறிப் போகிறார்கள். காரணம் அவர்களுடைய அனுபவக் குறைவு. இப்படியாக, நடைமுறையில் என்னுடைய பேச்சு தடைகளைத் தாண்டி மனங்களை வென்றது. எனவேதான் துணிச்சலை வாழ்க்கையின் ஒரு முக்கிய அம்சமாக நாம் கைகொள்ளவேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

சுய ஊக்கம் கொள்ளுங்கள், உங்கள் சுய உறுதியைப் பயன்படுத்தி

இது மாற்றங்களின் காலம். தங்கள் வேலையை அடிக்கடி மாற்றிக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அறுபது வயதைக் கடந்தவர்கள் கூட புதிய மொழிகளைக் கற்பதில் ஆர்வம் காட்டுகிறார்கள். ஒரு புதிய இடத்தில் உங்கள் வேலையை ஆரம்பிக்கும்போது, அங்குள்ள புதிய விஷயங்கள் அனைத்தையும் தேடிப்பிடித்து படிக்கிறோம். ஒன்றை நேர்மையாக ஒத்துக் கொள்வோம்: அனுபவம் இல்லாத வேலைக்குள் காலடி எடுத்து வைக்கும் போது நம் அனைவரிடமும் ஒரு மெல்லிய பயம் இழையோடிக்கொண்டுதான் இருக்கும். இருபது வயது இளமைப்பருவத்தில் ஒரு புதிய விஷயத்தைத் துவங்குவது அத்தனை சிரமமான காரியம் அல்ல. ஆனால் அதே வேலையை உங்கள் அறுபதாம் வயதில் துவங்க, உண்மையிலேயே நீங்கள் சற்று சிரமப்படத்தான் வேண்டியிருக்கும்.

ஆனாலும், நீங்கள் ஒவ்வொருவருமே உங்களுக்குள் தன்னம்பிக்கைய வளர்த்துக்கொண்டு, உங்களை நீங்களே ஊக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான்

ஆசைப்படுகிறேன். ஐம்பது பணியாளர்களை மேற்பார்வை செய்யும் முன் அனுபவம் கொண்ட ஒரு மேலாளராக நீங்கள் இருக்கும்பட்சத்தில், உங்களிடம் நிர்வாகம் மற்றும் முடிவெடுப்பதில் அபார திறமைகள் கொட்டிக் கிடக்கும். இப்படிப்பட்ட நீங்கள் ஒரு புதிய நிறுவனத்தில் பணியாற்ற ஆரம்பிக்கும்போது, உங்களை விடவும் வயதில் குறைந்த துவக்க நிலைப் பணியாளர்களின் செயல்திறனை கடந்து செல்ல உங்களுக்கு அதிக நாள் ஆகாது.

சுய உறுதியின் அபார சக்தியை மனமார நம்புங்கள். “ஐ ஆம் ஃபைன்” என்னும் கோட்பாட்டை நாம் இங்கேயும் பயன்படுத்தலாம். நமக்கு நாமே, தொடர்ச்சியாக, பல தடவைகள், நேர்சிந்தனை மிகுந்த சுய உறுதியை நமக்குள் உட்செலுத்திக் கொண்டேயிருக்க வேண்டும். நீங்கள் உங்களுக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுங்கள்: “நான் மிகவும் நன்றாக இருக்கிறேன்! என்னால் இதைச் செய்ய முடியும்! என்னால் நிச்சயம் இதைச் செய்ய முடியும்!” இந்த உலகில் முடியாது என்று எதுவுமே இல்லை என்று நமக்கு நாமே எந்த அளவுக்கு சொல்லிக் கொள்கிறோமோ, அந்த அளவுக்கு நம்மால் சாதனைகள் நிகழ்த்த முடியும். ஒரு புதிய துவக்கத்துக்கு என்றுமே வயதாவதில்லை.

மட்டுமல்ல, அளவுக்கதிகமாக புகார் சொல்லாமல் இருப்பதும் மிக முக்கியமானது. “என்னால் இதைச் செய்ய இயலாது!” என்று உங்களுக்குள்ளேயே சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டிருந்தால், சாதனைகள் நிகழ்த்தும் உங்கள் திறனை நீங்களே தொலைத்துக் கொள்கிறீர்கள் என்று பொருள். எனவே, அதற்குப்பதிலாக உறுதியுடன் உங்களுக்குள்ளேயே திரும்பத் திரும்ப சொல்லுங்கள்: “என்னால் இதைச் செய்ய முடியும்!”, “இதை எப்படிச் செய்வது என்பதை நான் கண்டிப்பாக கற்றுக் கொள்வேன்.”

பழக்கத்தின் வலிமையைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்

உடற்பயிற்சி செய்ய முடியாத அளவுக்கு உங்களுக்கு என்றுமே வயதாகப்போவதில்லை என்று எனக்குத் தெரியும். கட்டுகோப்பான உடலுக்கும் நமது வயதுக்கும் சம்பந்தமேயில்லை. நான் நடக்கப் போகும்போதெல்லாம்,

பெரும்பாலும் ஒரு வயதான கனவானை வழியில் பார்ப்பேன். அவருக்கு நிச்சயமாக வயது எண்பதுக்கு மேல் இருக்கும். ஆனாலும் அவர் என்னை விடவும் வேகமாக நடப்பார். இது வெறும் ஜோக் இல்லை. அவரது வேகத்துக்கு ஈடு கொடுக்க வேண்டுமானால் உண்மையிலேயே எனக்கு ஒரு சைக்கிள் வேண்டும்! அவர் நடக்கும் வேகத்தைப் பார்த்தால், அவர் மணிக்கு 3.5 மைலுக்கும் மேல் நடப்பார் என்று அனுமானித்தேன். தங்களது வயதான காலத்திலும், பெரும்பாலான மனிதர்களுக்கு இப்போதும் மிக உறுதியான கால்கள். அதே வேளையில் இருபதுகளில் இருக்கும் சில இளைஞர்களுக்கு சற்று மேடான பகுதியில் நடக்க ஆரம்பித்தாலே போதும் மூச்சு இளைக்க ஆரம்பித்துவிடும். இந்த இளைஞர்களுக்கும், மேட்டிலும் மிக சுறுசுறுப்பாக நடைபோடும் முதியவர்களுக்கும் அப்படி என்னதான் வித்தியாசம்? உடற்பயிற்சி. நாள் தவறாமல் செய்யும் உடற்பயிற்சி கால்களை வலுவாக்கும். அது முதியவர்களோ அல்லது இளைஞர்களோ யாராக இருந்தாலும் சரி.

இந்த உடற்பயிற்சி மூலம் நமக்கு வெளிப்படுவது என்ன? பழக்கத்தின் சக்தி. நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொண்டவர்களே உச்சத்தை அடைகிறார்கள் என்று பல்வேறு ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. அது படிப்பாக இருந்தாலும் சரி, அல்லது வெறும் விளையாட்டாக இருந்தாலும் சரி. இதற்காக ஆரம்பத்தில் நீங்கள் உங்கள் மன உறுதியைப் பயன்படுத்தியாக வேண்டும். ஆனால் ஒரு முறை நீங்கள் இந்த நல்ல பழக்கத்தை உருவாக்கிவிட்டீர்கள் என்றால், அதைத் தொடர்ந்து செய்ய ஆரம்பித்து விட்டீர்கள் என்றால், அது நீங்கள் உணர்வதற்கு முன்பே, ஒரு அலையடிக்கும் சக்தியாக உங்களுக்குள் உருமாற்றம் பெற்றுவிடும்.

உதாரணமாக ஆங்கிலப் படிப்பையே எடுத்துக்கொள்வோம். நாளொன்றுக்கு பத்து சொற்களை மனப்பாடம் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால், ஒரு வலிமையான சொல் தொகுதிக்கு நீங்கள் உடைமையாளர் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள அதிக நாட்கள் ஆகாது. தினமும் முப்பது நிமிடங்கள் முதல் ஒரு மணி நேரம் வரை நடக்கும் பயிற்சியை பழக்கப் படுத்திக்கொண்டால், நீங்கள் புரிந்துகொள்வதற்கு முன்பே உங்கள் கால்கள் வலிமை பெற்றுவிடும். இந்த கோட்பாடு அனைத்துக்குமே பொருந்தும்.

“ஐ ஆம் ஃபைன்” என்னும் மந்திர உணர்வின் உச்சத்தை

அடைய வேண்டுமானால், தினந்தோறும் உங்களை நீங்களே உற்சாகப்படுத்திக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இது உங்களை சக்தி மிக்கவர்களாக மாற்றும். தொடர்ந்து உங்கள் விருப்பங்கள் நிறைவேறும், நிச்சயமாக.

2 “பி பாசிட்டிவ்” என்னும் சொற்பொழிவு 2007, நவம்பர் 18 ஆம் தேதி, ஹேப்பி சயின்ஸின் ஹவாய் கிளையில் நடைபெற்றது.

3 பார்க்க: ரியோ ஒகாவாவின் த ஸ்டார்ட்டிங் பாயின்ட் ஆஃப் யூத் (டோக்கியோ, ஐஆர்ஹெச் பிரஸ், 2007)

4 முதல் சொற்பொழிவு “நெவர் லூஸ் யுவர் ‘ஹங்ரி ஸ்பிரிட்’”

5 2002 பிப்ரவரி கணக்குப்படி

2.4

உங்களுக்கான சுய சக்தியை உருவாக்குங்கள்

பாசிட்டிவ் அலைக்கதிர் வீச்சுக்கு முயற்சியுங்கள்

“ஐ ஆம் ஃபைன்” உணர்வின் ஏழாவது கட்டம், எப்போதுமே பாசிட்டிவ் கதிர் வீச்சுக்கான முயற்சிகளை செய்து கொண்டேயிருப்பது. எப்போதும் எதிர்மறை கருத்துக்களையே பேசிக்கொண்டிருந்தால், வெகு விரைவிலேயே நண்பர்கள் நம்மை விட்டு விலகிச் செல்ல ஆரம்பித்துவிடுவார்கள். இறுதித் தீர்ப்புக்கான தூதர்களால் சூழப்பட்டிருப்பதை எவருமே விரும்புவதில்லை. உதாரணமாக, “எனக்கு மோசமான ஏதாவதொரு சம்பவம் நிகழப் போகிறது”, “நம்முடைய வியாபாரம் நஷ்டமடையப் போகிறது”, அல்லது “இந்த உலகமே நாசமாகப் போகிறது” என்று புலம்புவதற்கு பதிலாக, பாசிட்டிவ் கதிர்வீச்சை பாய்ச்சிப் பாருங்கள்.

எப்போதும் உற்சாகமாக இருப்பவர்களையே நாம் விரும்புகிறோம். ஏனென்றால் அவர்களுடன் நேரத்தை செலவிடும் போது நாமும் சக்தியூட்டம் பெறுகிறோம். எப்போதும் எதிர்மறைச் சொற்களை உதிர்க்கும் பழக்கத்துக்கு நீங்கள் அடிமையாகி இருந்தால், அதை நிறுத்துவதற்கான கடுமையான முயற்சிகளை உடனடியாகச் செய்ய ஆரம்பித்து விடுங்கள். துடிப்பு மிகுந்த இளைஞர்கள் கூட இந்த மோசமான பழக்கத்துக்கு ஆளாகிப் போவது கவலைக்கு உரியது. வயதாகும்போது இந்த சோர்வு மனப்பான்மை ஒரு பழக்கமாகவே மாறிப்போகிறது.

பலவீனமான உடல் நிலை, உணர்வுக் காயங்கள் போன்றவையே பெரும்பாலும் இப்படிப்பட்ட எதிர்மறை சிந்தனைகளுக்குக் காரணம். ஆனாலும் சோர்வு சொட்டும் மனிதர்களிடமிருந்து விலகிப்போகவே மனிதர்கள் ஆசைப் படுகிறார்கள் என்னும்

உண்மை இதனால் நீர்த்துப் போவது இல்லை. எனவே ஆரோக்கியமான பாசிட்டிவ் சக்தி உங்கள் உள்ளத்தில் ஊற்றெடுக்க நீங்கள் மனப்பூர்வமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக, மழை பெய்யும்போது ஒரு சிலர் சொல்வார்கள்: "ம்... என்ன மழை! மழை நாட்கள் என்னை சோம்பேறியாக்கிவிடுகின்றன" என்று. ஆனால் நேர் சிந்தனை கொண்டவர்களின் உணர்வைப் பாருங்கள்: "வெளியே மழை கொட்டோ கொட்டென்று கொட்டிக் கொண்டிருந்தாலும், என்னுடைய பாடங்களைப் படிப்பதற்கு என்னை நானே ஊக்கப்படுத்திக்கொள்வது எனக்கு பெருமையாக இருக்கிறது."

பின்வரும் இரண்டு வெவ்வேறு மனித உணர்வுகளைப் பாருங்கள்: "என்னுடைய விடுமுறையைக் கொண்டாட இன்று என்னால் வெளியே போக முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை"; "படிப்பதற்கு ஏற்ற அருமையான விடுமுறை இது; எல்லோரும் விடுமுறைக் கொண்டாட்டத்துக்காக வெளியே போயிருக்கும்போது நான் மட்டும் இங்கேயிருப்பதை நினைத்து எனக்குப் பெருமையாக இருக்கிறது." இந்த இரண்டு மனித எண்ணங்களையும் ஒப்பிட்டு பாருங்கள். இங்கே இரண்டாவது மனிதரே நமது பாராட்டுக்கு உரியவராகிறார்.

இருண்மை தவிர்த்து, ஒளி மிக்கவராக இருங்கள்

நேர்சிந்தனை என்னும் அலைவரிசையில் நீங்கள் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால், உங்களை நீங்களே கற்றுக்கொள்ளும் திறனை பெற்றுவிடுவீர்கள். அதாவது, உங்களுக்கான சுய சக்தியை உருவாக்குவது எப்படி என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள். சொல்லப்போனால் நாம் அனைவருமே சுயஉற்பத்தியாளர்களாக (self generator) மாற முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நம்மை ஒளிரச் செய்யும், நமது ஆழ் மனதில் பிரகாச வெளிச்சத்தை பாய்ச்சும், நமக்குள் பேரொளியேற்றும் சக்தியை உருவாக்குவதை நமது கடமையாகவே கருத வேண்டும். இந்த உலகமே இருள் நிறைந்ததென்பதும், நாம் அனைவருமே எதிர்மறை சக்திக் குவியல்களால் சூழப்பட்டிருக்கிறோம் என்பதும் ஒரு மறுக்க முடியாத உண்மை.

இந்த இருள் உலகுக்கு வெளிச்ச சுடரேற்றும் சக்தி மிக்க மனிதர்கள் பலரை உருவாக்குவதே எனது கனவு. இறுதித்

தீர்ப்பின்போது, சுடர்விட்டு பிரகாசிக்கும் உள் ஒளியை உருவாக்கும் ஒரு மனிதனின் திறமையே கவனத்தில் கொள்ளப்படுகிறது. அதனால்தான், என்னுடைய சொற்பொழிவுகள் பலவும் மனிதர்கள், தாங்கள் பிரகாசமாக சுடர்விட்டெரிவதற்கான பல்வேறு பாதைகளை காட்டித் தருவதாக அமைகின்றன. ஆனால், நான் ஒருவனே இந்த உலகம் முழுமைக்கும் ஒளியேற்றுவதென்பது இயலாத காரியம். அதனால்தான் நீங்கள் ஒவ்வொருவரும், உங்களுக்கான ஒளியை நீங்களே எப்படி உருவாக்கிக் கொள்ள முடியும் என்று நான் கற்றுத் தருகிறேன். ஒருமுறை எனது போதனைகளை தெளிவாகப் புரிந்து கொண்டாலே போதும். நீங்கள் ஒவ்வொருவருமே உங்களுக்குள் மெழுகுச் சுடரேற்றும் திறன் படைத்தவர்களாகி விடுவீர்கள்.

ஆரோக்கியமான, நேர் சிந்தனை கொண்ட, உற்சாகம் நிறைந்த மனநிலையை உருவாக்க நீங்கள் கற்றுக் கொள்ளும்போது, உங்கள் வாழ்க்கைப்பாதையில் எத்தனை சோதனைகள் வந்தாலும் அவை ஒரு பொருட்டே அல்ல. அதாவது, இந்த உலகின் 700 கோடி மக்களில் ஒருவனை நான் வெற்றிகரமாக காப்பாற்றிவிட்டேன் என்று பொருள். உங்களுக்காக, இப்படிப்பட்ட ஒரு சாதனையைச் செய்ய நீங்கள் கற்றுக்கொண்டுவிட்டீர்கள் என்றால், வெகு விரைவிலேயே உங்களைச் சுற்றியுள்ள மனிதர்களையும் உங்களால் காப்பாற்றிவிட முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த உலகுக்கு ஒளியேற்ற வேண்டும் என்பதே என்னுடைய கனவு. நான் குறிப்பிடும் இந்த ஒளி என்பது என்ன? இது இருளுக்கு எதிரானது; இது இருண்மையை விரட்டும் சக்தி. அப்படியானால் இருள் என்பது என்ன? உண்மை மறுப்பு, புகார்கள், அதிருப்தி, அதீத ஆசை ஆகியவற்றின் குறியீடே இருள். உங்கள் அழ்மனதில் உறைந்து கிடக்கும் விரும்பத்தகாத சேற்றுக்குவியல்கள்தான் இந்த இருள்.

நாம் ஒருபோதுமே இருண்மை நிறைந்தவர்களாக மாறிவிடக்கூடாது. மாறாக, ஒளிரும் மனிதர்களாக மாறுவதே நமது வாழ்க்கை நோக்கமாக இருக்க வேண்டும். அதிருப்தியும், அடுத்தவர் மீதான புகாரும் உங்களை அசைக்க ஆரம்பித்தால், உங்கள் மனம் நரகத்தின் பாதையை நோக்கி நகரஆரம்பித்துவிட்டது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உடனடியாக அந்த இருள் உலகிலிருந்து வெளியேறும்

வழியைக் கண்டுபிடிக்க முயலுங்கள். இந்த உலகை விட்டு பாதாளம் செல்லும் வரையில் நீங்கள் காத்துகொண்டிருந்தால், அது உங்களைப் பொறுத்தவரையில் ஒரு பரிதாபகரமான தாமதமாகும். எனவே இருளிலிருந்து வெளியேறும் வழியை உடனே கண்டுபிடியுங்கள்.

சாக்குபோக்கு சொல்வதை நிறுத்துங்கள்

இதற்கு என்னதான் வழி? உங்களுக்கு நான் வழி காட்டுகிறேன். ஆனால் அதற்கு முன்பாக நீங்கள் ஒரு சரியான மனநிலையை உருவாக்கிக் கொள்ளவேண்டும். இதற்கு, முதலில் உங்கள் மனதில் நல்ல விதைகளைத் தூவ வேண்டும். தொடர்ந்து சிறந்த சிந்தனை மற்றும் உறுதியான மனநிலை என்னும் இரண்டும், சதா உங்கள் மனதில் நிலை நிற்பதை உறுதி செய்ய வேண்டும். இறுதியாக, மிகச் சரியாக செயல்படுதல். புகார் சொல்ல நேரம் கிடைக்கும்போதெல்லாம், உங்களுக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுங்கள். இந்த நேரத்தை நான் ஏன் எனது வளர்ச்சிக்காக, பாசிட்டிவ் சிந்தனைகளுக்காக, துணிச்சல் நிறைந்த செயல்பாட்டுக்காக பயன்படுத்திக்கொள்ளக் கூடாதென்று.

நம்மால் ஒன்றை ஏன் செய்ய இயலவில்லை என்பதற்கான சாக்குப்போக்குகளை தவிர்ப்பது அதி முக்கியமானது என்று கருதுகிறேன். அதற்கு பதிலாக, அடிமேல் அடி வைத்து, நாம் முன்னேறிச் செல்வதற்கான பாதைகளை கண்டுபிடிக்கலாம். ஒன்றை முயற்சிப்பதற்கு முன்பாகவே, அதற்கான சாக்குப் போக்குகளைக் கண்டுபிடிப்பது நாம் அதி புத்திசாலிகளாக மாறி வருகிறோம் என்பதன் அறிகுறி. பலரும் வயதாகும்போதுதான் இப்படிச் செய்யத் தொடங்குவார்கள். ஆனால் புத்திசாலிகளோ இதற்கு பெயர் போனவர்கள். எனவே, இனிமேல் நீங்கள் அடிக்கடி சாக்குகள் சொல்வதாக உங்களுக்குத் தோன்றினால், ஒரு கணம் சற்றே தாமதியுங்கள். உங்கள் முடிவை நிறுத்தி வையுங்கள். அந்த நேரத்தை, ஆக்கபூர்வமாக முன்னேறிச் செல்லும் பாதைகளைக் கண்டு பிடிப்பதற்காக செலவிடுங்கள்.

ஒரு வேலையை ஏன் செய்யமுடியாது என்பதற்கான காரணங்களை உங்கள் மேலதிகாரியிடம் சொல்வதால் ஒரு பயனும் இல்லை. அதற்குப் பதிலாக, ஒன்றை மேம்படுத்துவதற்கான வழிகளைக் கண்டறிந்து சொல்வது,

சிரமத்தில் இருக்கும் உங்கள் நிறுவனத்தைக் காப்பாற்ற உதவக்கூடும். நெருக்கடியான நேரங்களில் பாசிட்டிவாக செயல்படும் மனிதர்களையே நிறுவனங்கள் தேடுகின்றன. ஏனென்றால், அப்படிப்பட்ட மனிதர்களே மதிப்பு மிகுந்தவர்கள்.

பொதுவாக வயது ஏற, ஏற நாம் சோர்வடைந்து போகிறோம். வயதான நிலையிலும் நீங்கள் துடிப்பு மிக்கவர்களாக இருக்கும் பட்சத்தில், உங்கள் வேலையை மாற்றிக் கொள்ள நீங்கள் தயங்கவே வேண்டாம். ஆனால், உங்கள் திறமை வடியத்தொடங்கும்போது வேலையை மாற்றுவது என்பது அபாயமானது. நம்மில் பலரும் பின்வரும் சாக்குப் போக்குகள் பலவற்றை நாளும் சொல்லிவருகிறோம்: “நம்முடைய சமூக அமைப்பின் குறைபாடுதான், வயதானவர்களை வேலைசெய்ய விடாமல் தடுக்கிறது”, “நம்மில் பலரும் நலிந்த கூலிப்பட்டாளத்தின் ஒரு அம்சங்கள்தான். இந்த உலகமே கஷ்டங்களால் கட்டமைக்கப்பட்டது”, “இது அரசாங்கத்தின் தவறு. இந்த உலகத்திடம்தான் ஏதோ பிரச்சனை இருக்கிறது”. ஆனால் இங்கே உண்மை என்ன வென்றால், நாம் நமது மனோபாவத்தை மாற்றி கொள்ள வேண்டும் என்பதுதான். எனவே உங்கள் மனோபாவத்தை, பழக்கங்களை, நீங்கள் பேசும் பேச்சை, உங்கள் சிந்தனைப் போக்கை மாற்ற ஆரம்பியுங்கள்.

முணுமுணுப்பாளர்களுக்கு காதல் கனியாது

‘முணுமுணுப்பாளர்களுக்கு காதல் கைகூடி வராது’- இதுவொரு ஜப்பானியப் பழமொழி. தற்கால இளைஞர்களுக்கு இதைப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கலாம். முணுமுணுப்பாளர்கள் என்றால் யார்? தமது தவறுகளை மிகைப்படுத்தி சொல்பவர்கள். தம்மைச் சுற்றி இருப்பவர்களிடம் தான் ஒரு உதவாக்கரை என்று ஒப்பாரி வைப்பவர்கள். இந்த குணத்தால் அவர்களின் காதலே அவர்களை ஒதுக்கித்தள்ளிவிடும். எப்போதுமே தங்கள் விதியை முணுமுணுத்துக்கொண்டிருப்பவர்கள் காதல் விஷயத்தில் துரதிர்ஷ்டசாலிகள். சொன்னால் நம்பமாட்டீர்கள், இப்படிப்பட்ட துரதிர்ஷடசாலிகளின் எண்ணிக்கை மிக அதிகம்.

தாங்கள் காயப்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே அவர்கள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள். இது உடற்பயிற்சிகூடத் தரையில், தரைவிரிப்பு விரிப்பதைப் போன்றது. தவறி

விழுந்தாலும் கூட காயமின்றி தப்பித்து விடலாம். இவர்கள், பிறரால் ஒதுக்கப்படுவதிலிருந்து தங்களை காப்பாற்றி கொள்ளவே முயல்கிறார்கள். அவர்களின் காதல் மறுக்கப்படும்போது, அவர்களின் பதில் ஒன்றேயொன்றுதான்: “எனக்கு முன்பே தெரியும், இப்படித்தான் ஆகுமென்று, நல்லவேளை, இதற்காக என் மனதை நான் திடப்படுத்தி வைத்திருந்தேன்.”

இத்தகைய மனநிலை கொண்டவர்களுக்கு காதல் விஷயத்தில் அப்படியொன்றும் அதிர்ஷ்டம் இருக்காது. இப்படிப் பட்டவர்களில் ஒருவராக நீங்கள் இருந்தால், உடனடியாக உங்கள் மனோபாவத்தை மாற்றுங்கள். தனது காதலை வெளிப்படுத்தும் இளைஞன் ஒருவனுக்கு மறுக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் என்பது உண்மைதான். பெண்கள் பெரும்பாலும் தாங்கள் அணுகப்படுவதையே விரும்பு கிறார்கள், ஒருவரின் விண்ணப்பத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ செய்தாலும் கூட. அதிலும் பெரும்பான்மையோர் உங்களை நிராகரிப்பதற்காக அவர்களுக்கு நீங்கள் ஒரு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சில பெண்கள் உங்கள் காதலை மறுத்தாலும், பெரும்பாலானோர் தாங்கள் அணுகப்பட வேண்டும் என்று உண்மையிலேயே எதிர்பார்க்கிறார்கள்.

துரதிர்ஷ்டவசமாக, ஒரு குறிப்பிட்ட ஆணின் மீது ஈர்ப்பு கொள்ளும் பெண்களில் பலரும், ஒரு கட்டத்தில் நிராசை அடைகிறார்கள். ஏனென்றால் முயற்சி செய்வதற்கு முன்பே, அவன் தன் முயற்சியைக் கைவிட்டுவிடுகிறான். அவனை ஒரு முறையாவது, அல்லது அவனுடைய அன்பை தாங்கள் ஏற்றுக் கொள்வது வரையிலும், அவனை நிராகரிப்பதற்காக, அவன் தங்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கியிருக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க் கிறார்கள். தாங்கள் தேர்ந்தெடுக்க தங்களுக்கு ஒரு வாய்ப்பு வழங்கப்படவேண்டும் என்று எல்லா பெண்களுமே விரும்பு கிறார்கள்; ஆண்கள் அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு மனம் உவந்து வழங்க வேண்டும்.

ஒரு பெண்ணை இந்த கோணத்தில் நீங்கள் அணுகினால், நீங்கள் நிராகரிக்கப்படுவது அத்தனையொன்றும் மோசமான விஷயமில்லை என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள். அப்படியொரு சம்பவம் உங்களுக்கு நிகழ்ந்தால், நீங்கள் ஒரு பெண்ணுக்கு அவள் தேர்வு செய்வதற்கான சிறந்த

வாய்ப்பொன்றை வழங்கியவர் ஆவீர்கள். ஒரு ஆணின் காதல் நாட்டத்தை நிராகரிக்க, பெண்கள் பலருக்கு வாய்ப்பு வழங்கும் அளவுக்கு ஆண்கள் துணிச்சல் மிகுந்தவர்களாக இருக்க வேண்டும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

தொடர்ச்சியான சுய பரிசோதனை இன்றி எதுவுமே முழு நிறைவடையாது

நம்மை நாமே தொடர்ந்து மீள் பரிசோதனை செய்து கொள்ளாவிட்டால், எதையுமே நம்மால் முழுமையாக நிறைவேற்ற முடியாது. நமது வேலைச் சூழலுக்கு இது மிகவும் பொருந்தும். அலு வலகங்களில், நமது இளைமைக் காலத்தில், நமது மேலதிகாரிகளிடம் நாம் எத்தனையோ ஆலோசனைகளை சமர்ப்பித்திருப்போம். ஆனால், அதில் ஒன்று கூட ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஆனாலும் மனம் சோர்ந்து விடாமல், உங்கள் ஆலோசனைகளை தொடர்ந்து வழங்கிக் கொண்டிருந்தால், உங்கள் விடாமுயற்சி நிச்சயமாக ஒரு நாள், உங்கள் நிறுவனத்தை உங்கள் பக்கமாக திரும்பிப் பார்க்க வைக்கும்.

பெரும்பாலான மேலதிகாரிகள் எடுத்த உடனேயே உங்கள் ஆலோசனைகளை, அது எத்தனை சிறந்ததாக இருந்தாலும் சரி, நிராகரிப்பதிலேயே குறியாக இப்பார்கள். அவர்கள் உங்களிடம் இப்படியெல்லாம் சொல்லக்கூடும்: “நீ இங்கே வந்து இன்னும் ஒரு வருடம் கூட முடியவில்லை” அல்லது “நீ வேலைக்குச் சேர்ந்து வெறும் மூன்று வருடங்கள் தான் ஆகின்றன” அல்லது “உனது தகுதிக்குமேல் நீ செயல்படுவதாக உனக்குத் தோன்றவில்லையா?” அவர் இப்படிச் சொல்வதற்கு காரணம், உங்களுடைய இந்த ‘பிஞ்சிலே பழுத்த’ குணத்தை அவர் புரிந்து கொண்டிருக்கலாம், அல்லது உங்களுடைய ஆலோசனைகளை ஏற்றுக்கொள்வது, உங்களுடைய சக பணியாளர்கள் மத்தியில் பொறாமையைத் தூண்டி விடலாம் என்று அவர் கவலைப்பட்டிருக்கலாம்.

எனவே இறுகிய முகத்துடன் உங்கள் மேலதிகாரி உங்கள் கருத்துகளுக்கு மறுப்பு சொன்னாலும், அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக்கொள்ளாதீர்கள்; உங்கள் முயற்சியைக் கை விட்டுவிடாதீர்கள். அதற்குப் பதிலாக, மேலும் அதிக உறுதியுடன் உங்கள் முயற்சியைத் தொடருங்கள்.

நீங்கள் ஒரு விடாக்கொண்டானாக இருக்கும் பட்சத்தில், உங்கள் மேலதிகாரி ஒரு கட்டத்தில் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளக் கூடும். மட்டுமல்ல, மற்றவர்களுக்கு அதைப் பற்றி குறைகூறும் வாய்ப்பும் ஏற்படாது. எனவே உங்கள் கருத்துக்கள் நிராகரிக்கப்படும்போதெல்லாம் இதை நினைவில் கொள்ளுங்கள்: ஒரு புதிய பணியாளரின் கருத்துக்கள் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், அது சக பணியாளர்கள் மத்தியில் பொறாமை உருவாக்குவதோடு, அந்த குறிப்பிட்ட பணியாளருக்கு மூத்த பணியாளர்களால் சிக்கல்களும் ஏற்படக்கூடும் என்று. வெற்றி மிக்க எதிர்காலத்தை உருவாக்கும் திறன் பெற்றவர் களாக நீங்கள் இருக்கும்பட்சத்தில், உங்களுக்கும் இது நிகழ வாய்ப்பிருக்கிறது. உங்கள் மேலதிகாரி வேண்டுமன்றே கூட இப்படிச்சொல்லாம்: “இதுவொரு சொத்தையான ஆலோசனை” அல்லது “இது ஒரு கல்லூரி மாணவனின் பக்குவமில்லாத கருத்து போல் இருக்கிறது. நீ இன்னமும் உலகியல் அறிவு பெறவில்லை.” உங்களை உசுப்பேற்றுவதற்காகவும், உங்கள் மேலதிகாரி இதுபோன்ற பல பரி சோதனைகளை உங்களிடம் நிகழ்த்தலாம்.

திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பிலிருக்கும் உயரதிகாரிகள் பலரும், சில நேரங்களில், தமக்கு அடுத்த நிலைப் பணியாளர்கள், புதுப்புது ஆலோசனைகளுடன் மீண்டும் மீண்டும் தனது அறைக்கதவை தட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட உறுதியான முதுகெலும்பு கொண்ட பணியாளர்களையே அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள்.

ஒரு பெண்ணிடம் தன் காதல் விருப்பத்தை தெரிவிக்கும் மனித முயற்சிக் கோட்பாடுகளை, நாம் இங்கேயும் பயன்படுத்திக் கொள்ளலாம். உங்கள் ஆலோசனைகள் சிறந்தவை என்று நீங்கள் நினைக்கும் பட்சத்தில், அவற்றை மீண்டும் மீண்டும் எடுத்துச் செல்ல தயங்க வேண்டாம். மாறாக, நீங்கள் சாக்குப்போக்கு சொல்பவராகவும், உங்கள் பிரச்சனைகளிலிருந்து விலகி ஒடுபவராகவும் இருந்தால், தயவு செய்து உங்கள் வாழ்க்கையை பாசிட்டிவ் அம்சம் நிறைந்த அர்த்தமுள்ள வாழ்க்கையாக மாற்றுவதற்கான முயற்சியைத் தொடங்குங்கள், உடனடியாக. செய்யுங்கள் தொடர்ச்சியாக. இதன் மூலம் உங்களால் மிக இலாவகமாக வெற்றிக்கோட்டை அடையலாம் என்று நான் உறுதி தருகிறேன்.

3

பெரிதாகவே சிந்தியுங்கள்

3.1

நாம் சிந்திக்கும் வழி வலிமையானது

தமது சிந்தனை வலிமை மிக்கது என்பதை ஜப்பானியர் உணர வேண்டும்

நாம் பெரிதாகவே நினைக்க வேண்டும் என்பது சரியாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அப்படி நினைப்பதே மிக முக்கியமானது என்பதை நமக்கு யாருமே சொல்லுவதில்லை. அது பள்ளிக்கூடத்தில் ஆகட்டும், வேலை செய்யும் இடங்களில் ஆகட்டும். இதைப் பற்றி புத்தகத்தில் எங்காவது நம் கண்ணில்பட்டால் கூட நமக்கும் அதற்கும் சம்மந்தமில்லை என்றுதான் எண்ணிக்கொள்கிறோம். அது ஏதோ வேற்றுலகவாசிகளுக்குத்தான், நமக்கில்லை என்று விலகிவிடுகிறோம். எனவே பெரிதாக நினைப்பது பற்றி நம்மில் பலருக்கும் எந்த கருத்தும் இருப்பதில்லை.

ஆனால் ஆச்சரியமான விஷயம் என்னவெனில், அமெரிக்காவில் உள்ள பல புத்தகக் கடைகளிலும் பெரிதாக நினைப்பது பற்றி அடுக்கடுக்காக புத்தகங்கள் கிடைக்கின்றன. அமெரிக்கர்களுக்கு அவ்வாறு பெரிதாக நினைப்பதுப் பற்றி மிக்க ஆர்வம் இருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. ஆனால் நேர்மாறாக இத்தகைய புத்தகங்கள் ஜப்பானில் விற்பனையாவதில்லை. இந்த வித மனப்போக்கை அவர்கள் அறிந்திருக்கவில்லை என்றே நம்புகிறேன். அமெரிக்கர்கள் இது பற்றி நன்கு உணர்ந்திருக்கிறார்கள். அமெரிக்கச் சமூகம் எப்போதும் மாறிக்கொண்டே இருக்கிறது. உலக மக்களுக்கு அது ஒரு சொர்க்க பூமி. வாய்ப்புகள் தேடி அங்கு வந்து குடியேறுபவர்கள் நிறையபேர். அவர்கள் கடின உழைப்பு மூலம் தங்களுக்கு ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்கி கொள்ள முடியும் என்று நம்புகிறார்கள். முன்னேற்றத்திற்கான நல்ல வாய்ப்புகள் இங்கு இருக்கின்றன என்று அவர்களுக்குத் தெரியும். அதை ஒப்பிடும் போது ஜப்பானியரிடம் அனுசரித்துப்

போகும் போக்கு வேரூன்றி உள்ளது. அதிலிருந்து யாரும் மாறி நிற்க முடியாது. அப்படிப்பட்டவர்கள் தட்டி நிமிர்த்தப்படுவார்கள், சம மட்டமாக்கப்படுவார்கள்.

இந்த சமமாக்கும் சக்தியின் ஆணிவேர் எது என்று நினைத்துப் பார்த்திருக்கிறேன். வேறென்றுமில்லை. பொறாமைதான். காரணம், நமக்கு முன்னால் ஒருவன் சென்றுவிட்டான் என்று அறியும்போது நமக்கு ஏற்படும் உணர்ச்சி பொறாமைதானே. நாம் மற்றவர்களைவிட முன்னே செல்லும்போது நமக்கும் ஒருவித பயம் ஏற்படுகிறதே, மற்றவர்கள் நம்மைப் பார்த்து பொறாமைப்படுவார்களே என்று. எனவே நாம் நம் தலையை முடிந்தவரை தொங்கப்போட்டுக் கொள்ளலாம். இந்த நவீன யுகத்தில் நாம் மற்றவர்களிடமிருந்து விலகி இருப்பது பல இடர்களைத் தவிர்க்கும் என்ற எண்ணம் ஜப்பானியர்களிடம் வேரூன்றி உள்ளது. உலக அளவில் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. வெற்றியடைந்த மக்களை கீழே தள்ளுவது இந்த பொறாமை தான். ஆனால் நம் மனப்போக்கு நம் வாழ்க்கையை எவ்வளவோ மாற்றி விடுகிறது. நம் மனப்போக்கு எவ்வளவு வலிமையானது என்பது நிறையபேருக்குத் தெரிவதில்லை.

நேர் சிந்தனை தத்துவத்தின் மூலம் நான் பெரிதாக நினைக்கத் தொடங்கினேன்

நான் இளைஞனாயிருக்கும்போது எப்போதும் பெரிய கனவுகள் பற்றியும் உயர்ந்த லட்சியங்கள் பற்றியுமே பேசிக் கொண்டிருப்பேன். ஆனால் என் வெளித்தோற்றத்திற்கு நேர் எதிராக உள்ளுக்குள் நான் உறுதியற்றிருந்தேன். என்னை விமர்சித்தபடி இருந்தேன். என் தோல்விகளைப் பற்றி சிந்தித்தபடி, என் பலவீனத்திற்காக என்னைத் தாழ்த்திக்கொண்டு, பிறர் என்னை விமர்சிப்பதைக் குறித்து குழம்பிக்கொண்டு, வாழ்வில் எல்லாமே நேர்மாறாக நடப்பதைப் பற்றிக் கவலைப்பட்டுக்கொண்டு இருந்தேன். என் இருபதுகளின் முற்பகுதிவரை இப்படித்தான் சென்றது, புதிய சிந்தனைத் தத்துவம் பற்றி நான் அறியும்வரை. அதன்பிறகுதான் பெரிதாக சிந்திக்கத் தொடங்கினேன். என் மனநிலையை மாற்றினேன். நேர் சிந்தனை என்ற நிலையை நான் முற்றாகக் கற்றுக் கொண்டேன்.

இந்த திடீர் மாற்றத்துக்கு முன்னால் நான் மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன சொல்வார்களோ என்று பயந்து கொண்டே இருப்பேன். பாதுகாப்பின்மையை உணர்வேன். எதிர்காலம் பயங்கரமாகக் காட்சி அளிக்கும். கடந்த காலத்தின் தோல்விகள் நிகழ்காலத்துக்குள் என்னை இழுத்து வரும். மற்றவர்கள் முன் என்னை ஒரு சங்கடமான நிலைமையில் உணர்ந்தேன். அவர்களிடம் பேசுவதற்குக்கூட வெட்கப்பட்டேன். அப்போதெல்லாம் நெர்வஸாக உணர்ந்தேன். இதயம் நின்றுவிடுவது போல படபடவென்று அடிக்கும்.

ஆனால் இன்று நிலைமை மாறி விட்டது. என் பேச்சைக் கேட்க வருபவர்கள்தான் என் முன்னே நெர்வஸாக இருக்கிறார்கள். என் வாழ்க்கை எப்படி முற்றிலும் மாறிவிட்டது என்பது வியப்பாகத்தான் இருக்கிறது. நாம் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது நம் வாழ்வில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டு வருகிறது என்பதை அறிந்துகொண்டேன்.

அமெரிக்க நவீன சிந்தனாவாதிகளைப் பற்றி நிறையப் படித்தேன். அவர்களில் நிறையபேர் தங்கள் ஆரம்ப நாட்களில், சிறு வயதிலோ பின்னர் முப்பது வயது வரைக்குமோ பெரிய பின்னடைவை சந்தித்துள்ளார்கள் என்பதை அறிந்தேன். அவர்கள் தங்கள் தோல்விகளைக் கண்டதும், நாளடைவில் அவை அவர்கள் கண்களைத் திறந்ததும், வாழ்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியதும் இந்தக் காலத்தில்தான். நிறையபேர் பெரிய தோல்வியை எதிர்கொண்டிருந்தனர். அவர்கள் பெரிய தாழ்வு மனப்பான்மைக்கு ஆட்பட்டிருந்தனர். சிலருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. சிலருக்கு சாலை விபத்துக்கள். வேறு சிலருக்கு குடும்ப நிலைகளால் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டிருந்தது. காரணம் வறுமையாக இருந்திருக்கலாம். அல்லது தாங்கள் நினைத்த கல்வித் தகுதி கிடைக்கவில்லையே என்பதாயிருக்கலாம். நினைத்த வேலை கிடைக்காமலிருந்திருக்கலாம். காதலில் தோல்வி ஏற்பட்டிருக்கலாம். அல்லது திருமணத்தில் பல பிரச்சனைகள் வந்திருக்கலாம். வேறு சிலருக்கு குழந்தைகள் வளர்ப்பில் அல்லது வேலையில் சிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். இந்த மாதிரி சம்பவங்கள் மிக சாதாரணமானவை. எங்கும் காணக்கூடியவை. ஆனால் ஒரு சிலரே இதன் உண்மைக் காரணங்களை கண்டறிந்தவர்கள். துணிவுடன் அதை எதிர்கொண்டு முன்னேறியவர்கள். தங்கள் கஷ்டங்களின்

இடையே மறைந்திருக்கும் வெற்றியைக் கண்டடைந்து மீண்டும் தங்களை மேல் நிலைக்கு உயர்த்திக்கொண்டவர்களின் உறுதியை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

என்னைப் பற்றி நான் எடைபோடுவதற்கும், பிறர் என்னை எடைபோடுவதற்கும் இடையே உள்ள வேறுபாடு

என் இருபது வயதுகளில் வெளிப்பார்வைக்கு நான் நல்ல தன்னம்பிக்கை உள்ளவனாகவே காட்சியளித்தேன். ஆனால் உள்ளுக்குள் உணர்ச்சி மிக்கவனாக, எளிதில் காயப்படுபவனாக இருந்தேன். நாளடைவில் மக்களின் உண்மை இயல்பு அவர்கள் சிந்தனையாலும், அவர்கள் எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கும் அவர்கள் வெளித் தோற்றத்தாலோ உடல் அமைப்பாலோ அல்ல என்பதை அறிந்துகொண்டேன். நான் எப்போதும் எதைப்பற்றி சிந்திக்கிறேனோ அதுவேதான் நான் என்பதை உணர்ந்து கொண்டதும், அந்த உண்மையைப் புரிந்து கொண்டதும், அதை உள்வாங்கிக்கெண்டதும், நான் மாறத் தொடங்கினேன்.

அப்போதுகூட நான் என்னைப்பற்றி பெரிதாக ஒன்றும் நினைக்கவில்லை. மற்றவர்கள் என்னை புதிய கோணத்தில் பார்க்கும்போது கூட எனக்கு ஒரு தாழ்வான சுய மதிப்பே இருந்தது. என்னுடைய இந்த சுய உருவத்துக்கும் என் நண்பர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு என்மீதிருந்த நல்ல மதிப்பீட்டுக்கும் இடையே இருந்த உடன்பாடு உண்மையில் மாறவே இல்லை. இதற்குக் காரணம் எனக்கு இளமையிலேயே பூரணத்துவம் பற்றிய ஆர்வம் இருந்தது. சிறிய தவறுகளைப் பற்றி தீவிரமாக ஆலோசிப்பேன், மனதிலிருந்து அவற்றை அகற்றுவதற்கு சிரமப்படுவேன். ஏனெனில் மனத்தூய்மை அல்லாத எதையும் ஏற்றுக்கொள்ள எனக்கு இயலவில்லை. இந்த சுபாவம் என்னிடம் ஒரு தாழ்வான சுய உருவை ஏற்படுத்தியது.

என்னைப் பற்றிய எனது சொந்தப் பார்வைக்கும் மற்றவர்களின் பார்வைக்கும் இடையே இருந்த பிளவு தவறான புரிதல்களுக்கு இடமளித்தது என்பதை நான் திட்டவட்டமாக உணர்ந்தேன். எனக்கு 27 அல்லது 28 வயது இருக்கும்போது நான் வேலை பார்த்த கம்பெனியில் ஒரு பிரிவிலிருந்து இன்னொரு பிரிவுக்கு மாற்றப்பட்டேன். அப்போது அவர்கள் எனக்கு என் வேலைபற்றி

இட்ட கட்டளை என்னை வியப்பிலாழ்த்தியது. அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். உன் புதிய இலாகாவில் வேலை செய்யும்போது, என்ன செய்கிறாயோ, ஒருபோதும் கடினமாக உழைக்காதே ஓய்வெடு. சும்மா இரு. ஒன்றுமே செய்ய வேண்டாம்.” எனக்கு இது அதிர்ச்சியாக இருந்தது. என் காதுகளை நம்பவே முடியவில்லை. அவர்கள் ‘நல்லது, கடுமையாக உழை’ என்று சொல்லியிருந்தால் நான் அவ்வாறே ஆர்வமுடன் செய்வதற்கு முன்வந்திருப்பேன். ஆனால் அவர்கள் வேலையே செய்யவேண்டாம் என்றல்லவா சொல்கிறார்கள். எனக்குத் திகைப்பாயிருந்தது. “நீ கெட்டிக் காரன் என்று எல்லோருக்குமே தெரியும். எனவே அதை செயலில் காட்ட வேண்டாம். சும்மா இரு. உன் திறமையை எல்லாம் வெளிக்காட்ட வேண்டாம்.”

என் காதுகளை நம்ப முடியவில்லைதான். எனினும் அவர்கள் கூறியபடியே நடந்தேன். ஆறு மாதமாக நன்றாக ஓய்வெடுத்தேன். ஏதோ ஓரளவு வேலை செய்தேன். என்ன ஆச்சர்யம், எனது புகழ் மேலும் மேலும் உயர்ந்தது. என்னால் அதைப் புரிந்துகொள்ளவே முடியவில்லை. நான் எப்போதுமே கடுமையாக உழைப்பவன். நான் செய்யும் வேலையில் முழுத் திருப்தி கொள்ளாமல் அதை மேலும் மேலும் உயர்த்த சிரமப்படுபவன். ஆனால் நான் அவர்கள் சொன்னதை அனுசரித்தேன். கொஞ்சமாக உழைத்தேன். நிறைய ஓய்வெடுத்தேன். இந்த அனுபவம் மூலமாக ஜப்பானிய மக்கள் எப்படி வித்தியாசமான முறையில் வேலை செய்கிறார்கள் என்பதை அறிந்தேன். அங்கே நான் என் வேலைத் திட்டங்களை நன்கு வகுத்து, என் திறமைக்கேற்றபடி உழைத்தபோது என்னுடன் வேலை பார்த்தவர்கள் நான் அவர்களை திறமையில்லாதவர்கள் என்று கருதுவதாக நினைத்துக் கொண்டனர். எப்போதுமே நான் என் திறமையை வெளிப்படுத்துபவன்தான். நன்றாக உழைக்காதவரை திருப்தி அடையாதவன். ஆனால் என்ன ஆச்சரியம் பாருங்கள், நான் இப்படி உழைப்பதன் மூலம் அவர்கள் கம்பெனியில் வெட்டிச் சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பதைச் சுட்டிக் காட்டுவதாக நினைத்தனர். இப்படி எனக்கு ஒருபோதும் நேர்ந்ததில்லை. அது என் நோக்கமும் அல்ல. எனக்கு திருப்தி அளிக்கும் வகையில் உழைக்கவேண்டும் என்பதுதான் என் கொள்கை. இந்த அதிர்ச்சியிலிருந்து மீள கொஞ்சம் நாட்களாயின. அப்புறம் நான் அதிகம் உழைக்கவில்லை. நல்ல பெயரும் கிடைத்தது.

ஜப்பானும் அமெரிக்காவும் உங்கள் திறமையை வெவ்வேறான விதத்தில் மதிப்பிடுகின்றன

மேற்கூறிய அதிசய நிகழ்வுக்குப் பின்னர் நான் அமெரிக்காவில் வேலை பார்த்தேன். அங்கே என் உண்மையான திறமையைவிட குறைவானவன் என்று பாசாங்கு காட்டினேன். ஒருவரும் என்னை கேள்வி கேட்கப் போவதில்லை. என்னுடைய திறமை மட்டும் குறைவாக மதிப்பிடப்படும், அவ்வளவுதான். அமெரிக்காவில் நீங்கள் 'என்னால் முடியும்' என்று சொன்னால் அந்த நிறுவனத்தின் திறமையான ஆளாக ஏற்றுக் கொள்ளப்படுவீர்கள். ஜப்பானில் அவ்விதம் ஒப்புக் கொள்வதில்லை. ஆனால் அமெரிக்காவில் உங்கள் திறமை கண்டுகொள்ளப்படும்.

அமெரிக்காவில், உதாரணமாக நான் என் சம ஊழியர்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது மேலதிகாரிகள் வந்து நேரடியாக அவர்களிடம் வெளியே போகும்படியும், என்னிடம் தனியாகப் பேசவேண்டியிருக்கிறது என்றும் சொல்லலாம். அமெரிக்கர்கள் நேரடியாகச் செயல்படுபவர்கள். காரிய வாதிகள். எனக்கு அது பிடித்திருந்தது. அமெரிக்க கலாச்சாரத்தினால் அமெரிக்காவுடனான என் உறவு நன்றாகவே இருந்தது. எப்போதுமே என் கருத்துக்களை நேரடியாகச் சொல்ல முடிந்தது.

ஆனால் ஜப்பானில் நிலைமை வேறு மாதிரி. ஒரு ஜப்பான் பழமொழி உண்டு "திறமையான கழுகு தன் நகங்களை மறைத்து வைத்திருக்கும்." ஜப்பானில் கஷ்டப்பட்டு உழைப்பது சுயநலம் அல்லது தற்பெருமை என்று கருதப்படுகிறது. வருடக்கணக்கில் உழைத்தாலும் என்னால் இதை நடைமுறைப்படுத்த இயலவில்லை. ஆனாலும், சுய பூரணத்துவத்தை நோக்கிய என் உயர்ந்த தகுதியாக்கம் மட்டும் மறையவேயில்லை.

3.2

உங்கள் சாதனைகளின் அளவு உங்கள் சிந்தனையின் வழியாகவே தீர்மானிக்கப்படுகிறது

பெரிய தரிசனம் கிடைப்பதுவரை எனக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை

ஒரு விஷயத்தில் முழு திருப்தி கிடைப்பதுவரை எனக்கு நம்பிக்கை ஏற்படுவதில்லை. இது என் இயற்கை. என்னுடைய வேலை விஷயத்திலும் இப்படித்தான். நான் ஒரு நீச்சல் போட்டியில் கலந்து கொள்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். முதலில் குதித்து தண்ணீருக்கடியில் சில மீட்டர் நீந்தியபிறகு தலையை மேலே உயர்த்திய பின்னர்தான் வேகம் பிடிப்பேன். அதுபோல் எந்த வேலையில் முனைந்தாலும் ஆரம்பத்தில் எங்கே செல்கிறேன் என்றே தெரியாது. பெரிய அளவில் காட்சி விரிந்ததும் விரைந்து செயல்படுவேன்.

என்னைப் பற்றிய என் கருத்தும் என்னைச் சுற்றியுள்ளவர் கருத்தும் மாறுபட்டவை. சில சமயம் அது என்னை வியப்பில் ஆழ்த்தும். உதாரணமாக, நான் முதலில் சில புத்தகங்களை எழுதிய போது அவை ஒரு சிறிய பதிப்பாளரால் வெளியிடப்பட்டது. புத்தகங்களின் விற்பனை அமோகமாயிருந்தது. இதற்குமுன் அவர்களின் எந்த புத்தகமும் இந்த அளவு விற்பனை ஆகவில்லை. என்னைப் பொறுத்த அளவில் பத்தாயிரம் பதினைந்தாயிரம் பிரதிகள் விற்பனை என்பது அதிசயமான விஷயம். அது ஒரு பெரிய வெற்றி. முதலில் நான் இத்தகைய விற்பனை ஒரு வெற்றி என்றே நினைக்க இல்லை.

உண்மையைச் சொல்லப்போனால், பதினைந்தாயிரம் பிரதிகள் விற்பனை என்பது அபூர்வமான விஷயம். பெரிய

பதிப்பாளர்களுக்கும் கூட. பொதுவாக ஒரு புத்தகம் சராசரி மூவாயிரம் பிரதிகளுக்கு மேல விற்பனை ஆவதில்லை. அவர்களுக்கு அதுவே போதும். எனவே புத்தக பதிப்பாளர்களும் பெரியதோ சின்னதோ அதிகப்படியாக பத்தாயிரம் பிரதிகள் விற்பனை ஆகும் புத்தகங்களை எதிர்பார்க்கிறார்கள். பத்தாயிரம் முதல் இருபதாயிரம் பிரதிகள் விற்பனையாகும் புத்தகம் 'பெஸ்ட் ஸெல்லர்' எனக் கருதப்படும். என்னுடைய அனைத்து புத்தகங்களும் அப்படி விற்பனை ஆனவை. பொதுவாக புதிய ஆசிரியரின் நூல்கள் அப்படி விற்பனை ஆவதில்லை. எனவே எனது பதிப்பாளர்களுக்கு வியப்பு கலந்த பெரும் மகிழ்ச்சி.

ஆனால் நான் இதில் அவ்வளவாக திருப்திப்பட்டுக் கொண்டேன் என்று சொல்வதற்கில்லை. என் தகுதியைப் பொறுத்த மட்டில் என் புத்தகம் ஒரு லட்சம் பிரதிகள் விற்றால்தான் வெற்றி என்பது என் கணிப்பு. வெளியீட்டாளர்களிடமிருந்து பின்னர் தெரிந்தது ஒரு லட்சம் பிரதிகள் என்பது எட்ட முடியாத ஒன்று, அபூர்வமாக நடப்பது என்று. அதற்குப் பெரிய அளவில் விளம்பரம் செய்ய வேண்டும். அண்மையில் ஒரு பிரசுர நிறுவனத்தின் நிர்வாகி பின்வருமாறு கூறினார்: ஒரு புத்தகம் மில்லியன் பிரதிகள் விற்பனை ஆவதற்கு அது பேப்பர் பேக்கில் வெளியிடப்பட வேண்டும். அந்த புத்தகம் ஒரு திரைப்படமாக வெளிவரவேண்டும். அந்த விவரம் புத்தகத்தின் அட்டையில் இடம் பெறவேண்டும். சரிதான், என்னுடைய கருத்தும், உலகின் மற்றவர்களின் கருத்தும் ஒத்துப்போவதில்லைதான்.

நீங்கள் சிறிய அளவில் சிந்தித்தால் பெரிய அளவில் வெற்றி காண முடியாது

நிறைய தடவை நான் தோற்றதற்குக் காரணம் முக்கியமாக நான் என்னை சற்று அதிகப்படியாக ஈடுபடுத்திக் கொண்டதுதான். சற்றுப் பெரிய அளவில் என்னை ஈடுபடுத்தும்போது மற்றவர்களுக்கு நான் என்ன செய்யப்போகிறேன் என்பது ஒரு மர்மமாகத்தான் இருக்கும். இது நான் ஹேப்பி சயின்ஸ் அமைப்பை நிறுவுவதற்கு முன்பும் பின்புமுள்ள நிலை. நான் இதை சுலபமாகவே சமாளித்துவிட்டேன். நான் சற்று ஒளிவு மறைவாக இருந்தேன், என் புகழ் மேலும் சற்று உயர்வது வரையிலும்.

முடிவில் உங்கள் சாதனைகள் உங்கள் குறிக்கோளைவிட உயரமாக வளராது. நீங்கள் சிந்திப்பது சிறிதாக இருந்தால் நீங்கள் அடைவது பெரிதாக இருக்க முடியாது. நீங்கள் உங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குப் போதுமான சராசரி சம்பளம் போதுமென்றால் நீங்கள் மற்றவர்களோடு ஒத்த வாழ்வை வாழ விரும்பினால் போதும். உங்களை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் நீங்கள் ஆடம்பரமாக வாழ நினைத்தால் உங்கள் பணியில் நன்கு பிரகாசிக்க வேண்டும். ஒரு முதலாளி ஆக வேண்டும், உலகின் பார்வை உங்கள்மேல் விழ ஏதாவது செய்ய வேண்டும், அப்போதும் உங்கள் மனதில் உருவாக்கியதைவிட மேலும் பெரிதாக எதையும் சாதிக்க உங்களால் முடியாது.

உயர்ந்த நோக்கம் கொண்டவர்கள், தங்களுக்கும் சுற்றியுள்ளவர்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டுக்கு எதிராகப் போராட வேண்டும். அவர்களோடு உரசல் ஏற்படலாம். விமர்சனங்களுக்கு ஆளாகலாம். சின்னதாக சிந்தித்தல் கீழ் நோக்கி செல்வது என்றுதான் அர்த்தம். பெரிய வெற்றி பற்றி நீங்கள் நினைக்கவே முடியாது. இதில் சில விதிவிலக்குகளும் உண்டு. சின்னதாக சிந்தித்து வெற்றியடைவதும் உண்டு. ஆனால் பொதுவாகப் பேசும் போது சிறிதாக சிந்திப்பது யாரையும் வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லாது என்பதுதான் உண்மை.

3.3

உயர்ந்த ஆசைகள் கொண்டிருங்கள் தொடர்ந்து பாடுபடுங்கள்

தேர்வுகளில் சாதனை புரிந்தோர் எதிர்மறையாக சிந்திப்பவர்களே

தேர்வுகளில் சிறந்த வெற்றிபெற்ற அறிவாளிகளின் பெரிய பலவீனம் எதிர்மறையாக சிந்திக்கும் பழக்கமே. இந்த மனோபாவம் அவர்களின் தேர்வு முடிவுகள் வரும்போது அவர்களுக்கு ஏமாற்றம் அளிக்காமல் காக்கிறது. ஏனெனில் அவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகம் மதிப்பெண் பெற்றிருப்பார்கள். இது தங்கள் விடைகள் தவறாகப் போய் மதிப்பெண் கிடைக்காமல் போய்விடும் என்ற பயம் இருப்பதால்தான். பெரும்பாலான தேர்வு எழுதுவோருக்கு இந்த பயம் இருக்கிறது. இன்றைய அதிகார வர்க்கத்தினர் பெரும்பாலோனோருக்கு இந்த பயம் இருப்பதால் அவர்களுக்கு கெட்ட பெயர் ஏற்படுகிறது. எதிர்மறையாக சிந்தித்து, மோசமான விளைவு ஏற்படும் என்று எண்ணியிருப்போர் தங்களுக்கு மிகக் குறைந்த அளவு கெடுதலே ஏற்படும் என்று நினைக்கிறார்கள் ஆக்கப்பூர்வமான நன்மைகளை உருவாக்குவதற்குப் பதிலாக.

“எப்படி தேர்வு எழுதியிருக்கிறாய்?” என்று யாராவது கேட்கும் போது, “சுமாராகத்தான் எழுதியிருக்கிறேன். பாசானால் போதும்” என்று நிறைய பேர் சொல்வது வழக்கம். ஆனால் ரிசல்ட் வரும்போது அவர்கள் நல்ல மதிப்பெண் எடுத்து வெற்றி பெற்றிருப்பது தெரியவரும். இது ஒருவித தந்திரம். இது மற்றவர்களை “என்னவோ சொன்னாய். இப்படி நல்ல மார்க் வாங்கியிருக்கிறாயே” என்று சொல்ல வைக்கும். தங்களை பெரிய அறிவாளி என சுட்டிக்காட்டும். இந்த போக்கு பெரியவர்களாகும்போது தலைகாட்ட அனுமதிக்க கூடாது. ஏனெனில் இது எப்போதும் தங்களை தாழ்த்திக் கொள்ள

பழக்கிவிடும்.

ரொம்பவும் உயர்வாக நினைத்துக் கொண்டிருக்கும்போது அதை அடைய முடியாவிட்டால் ஏமாற்றம் ஏற்படும் என்பதும் உண்மைதான். ஆனால் உயர்ந்த நிலைக்காக நீண்ட நேரம் பாடுபட்டு அதை அடையாமல் போவதில் தவறு ஒன்றுமில்லை. உங்கள் எதிர்பார்ப்பை குறைவாக மதிப்பிட்டு, பிறகு, "பார்த்தாயா, நான் சொன்னது சரி தானே!" என்று திருப்திப்பட்டுக்கொள்வது உங்களை எளிய பாதையில் செல்ல பழக்கிவிடும். துரதிருஷ்டவசமாக இது உண்மையான வெற்றிக்கான பாதையல்ல.

எனவே அதிக சிரமம் இன்றி உங்கள் இலட்சியங்களை அடைபவர்களாய் இருந்தால் உங்கள் ஆசைகளை உயர்ந்த நிலையில் வைத்திருங்கள். அதை எய்தாவிட்டாலும் பரவாயில்லை. உங்கள் எதிர்காலம் உங்களுக்கு சவாலாக அமையும் போது உங்களால் கற்றுக்கொள்ளவும் வளரவும் முடியும்.

தோல்விக்கான சாத்தியம் அதிகமாய் இருந்தாலும் உங்கள் இலக்கு உயர்ந்ததாக இருக்கட்டும்

உங்கள் எண்ணங்கள் பெரிதாக இருந்தாலும் நீங்கள் எதிர்பார்த்த முடிவை உடனே அடைய முடியாது. ஆனால் நீங்கள் முதலிலேயே சின்னதாக சிந்தித்தாலும் மிகப் பெரிய விஷயங்களை நீங்கள் அடைய முடியாது. எனவே நமது ஆசைகளை உயர்வாக வைத்து அதைநோக்கி இடைவிடாது செயல்படவேண்டும்.

ஹேப்பி சயின்ஸ் அமைப்பின் ஆதரவு பெற்ற, எங்களுடைய ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டி, 2010 மேல் சபைத் தேர்தலில் போட்டியிட்டது. 2009 இல் நடைபெற்ற கீழ்சபை தேர்தலில் வெறும் மூன்று மாதமே பிரச்சாரத்துக்கு கிடைத்தது. இதற்கு மாறாக 2010 மேல் சபை தேர்தலில் ஒரு வருடமாக பிரச்சாரம் நடைபெற்றது. நீண்ட நாட்கள் பிரச்சாரம் செய்தும் 2010 தேர்தலில் அதற்கு முந்திய வருட தேர்தலைவிட பாதி வாக்குகள்தான் கிடைத்தன. நிறைய நாட்களும், அதிகப்படியான முயற்சியும் இருந்த போதும் தோல்வி ஏன்? நிறைய காரணங்கள் சொல்லலாம். முக்கிய காரணங்கள்

நம்முடைய செயல்பாடுதான். ‘சிறிய துவாரமும் பெரிய கப்பலை மூழ்கடித்துவிடும்’ என்பதே ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டியின் நிலைப்பாடு. எனவே அது சிறிய எண்ணிக்கையில்தான் வேட்பாளர்களை நிறுத்தியது. ஆனால் என் கருத்தோ வேறு. கட்சியின் நோக்கம் கப்பலின் பக்கவாட்டில் ஒரு துளையிட்டு அதன் வழியே வேட்பாளர்களை எறும்புகள் போல் நுழைய விடுவது. இது சிறிய எண்ணம்.

நமது கட்சி இப்படி சிறிய அளவில் சிந்தித்தால் ஜப்பானிய மக்கள் நமது கருத்துகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். உங்கள் லட்சியங்களை நீங்கள் குறைவாக கொண்டிருந்தால் அதிகம் தவறுகள் செய்ய நேராது. பெரிய அளவில் நீங்கள் பொறுப்பேற்க வேண்டியிராது. இந்த திட்டம் பாதுகாப்பானது.

தோல்விகள் ஏற்படும் வாய்ப்பு குறைவு. ஆனால் நிறைய மக்களை கட்சியின் பக்கம் இழுக்காது.

ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டி அண்மையில்தான் தோன்றியது. 2009 கீழ்சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக. நாங்கள் பொதுவாக கற்றுக்குட்டிகள்தான். இருந்தும் எங்கள் இலட்சியத்தை உயர்வாக வைத்திருந்தோம், ஜப்பானின் முக்கிய கட்சியாக உயர வேண்டும் என்று. ஒற்றை இருக்கை மாவட்டங்களில் மொத்தம் 10,70,000 வாக்குகள் கிடைத்தன. 2010 இல் மாவட்டங்களில் 2,30,000 வாக்குகளே கிடைத்தன என்பதைக் கவனிக்கவும். நமது சிறிய அளவிலான சிந்தனை நமது வெற்றியைக் கட்டுப்படுத்தியது. 2009 தேர்தலில் நாம் கடைபிடித்த வழியைப் பின்பற்றியிருந்தால் நமக்கு மேலும் நிறைய வாக்குகள் கிடைத்திருக்கும்.

தோல்வியைத் தரும் சந்தர்ப்பங்களைக் குறைத்து, வெற்றியைத் தரும் சந்தர்ப்பங்களை அதிகரிப்பது சிரமங்களை சந்திக்க விரும்பாத ஓர் அலுவலக ஊழியருக்கு நல்லதுதான். இது போன்ற சிந்தனை பெரிய கம்பெனிகளில் பணிபுரியும் ஊழியர்களை தங்கள் பொறுப்புகளில் இருந்து நழுவச் செய்துவிடும். ஒரு நிர்வாகி என்கிற முறையில் நீங்கள் இந்த வழியைக் கடைப்பிடித்தால் உங்களுக்கு ஆதரவு கிடைப்பது சிரமம்தான். இதைவிட பெரிய அளவில் நீங்கள் சிந்திக்க வேண்டும்.

முடிவாக 2010 இல் ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டி தோல்வியுற காரணம் அதன் நோக்கங்கள் மிகக் குறைவு என்பதுதான். நமது குறிக்கோள், அரசியல் கட்சி பொது மானிய

சட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமே என்பதால் ஒருவருட முயற்சி இருந்த போதிலும் குறைந்த வாக்குகளையே பெறமுடிந்தது. நாம் ஒரு ஆர்வம் இல்லாத கட்சி என்று ஜப்பானியரை புரியவைத்தோம். வருங் காலத்தில் மேலும் ஆர்வம் மிக்க நடைமுறைகளை கையாள வேண்டும்.

ஹேப்பி சயின்ஸ் அமைப்பில் இருந்து தனியாக ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டியை நடந்த முயன்றோம். இதனால் இரண்டு அமைப்புகளிலிருந்தும் ஆதரவு கிடைப்பது குறைந்தது. ஹேப்பி சயின்ஸ் தனது சக்தியில் 10% விகிதத்தையே கட்சிக்கு ஆதரவாக அளிந்தது. முடிவாக நமது தவறு சிறிதாக சிந்திப்பதே என்று கூற விரும்புகிறேன். ஒரு பெரிய கப்பலில் சிறிய துவாரத்தைப் போட்டு அதை மூழ்கடிக்க செய்திருக்க கூடாததுதான். அதை ஒரு பெரிய அலையில் செலுத்த முயன்றிருக்க வேண்டும். நமது குறிக்கோளை பெரிய அளவில் வைத்திருந்தால் ஒரு பெரிய தோல்வியைதான் சந்திக்க வேண்டிவரும். மேலும் பல எதிர்மறை விளைவுகளையும் சந்திக்க நேர்ந்திருக்கும். ஆனால் இந்த ஆபத்தை தவிர்க்க நினைப்பதுவரை நமக்கோ நமது முயற்சிக்கோ வளர வாய்ப்பே இல்லை.

நீண்ட நாட்கள் நினைத்துக்கொண்டிருப்பவை இறுதியில் நிறைவேறிவிடும்

ஹேப்பி சயின்ஸ் இப்போது பெரிதாக வளர்ந்துவிட்டது. ஆனால் என் கருத்துகள் எல்லோரையும் போய் சேரவில்லை. சிறிய சிந்தனைகள் எங்கள் நிறுவனத்தை ஊடுருவுகின்றன. ஹேப்பி சயின்ஸில் வேலை பார்ப்பவர்கள் பலரும் வேறு நிறுவனங்களில் இருந்து வந்தவர்கள். தங்கள் முன்னாள் முதலாளிகளின் பண்பாட்டை கையோடு கொண்டுவந்தவர்கள். எனவே அவர்கள் எனது கருத்தில் நான் நினைத்ததைவிட, ஒரு சிறிய பகுதியைத்தான் ஏற்றுக்கொள்கிறார்கள். புதிய ஊழியர்களையும் தாங்கள் முன்பு வேலைபார்த்த அனுபவங்களின் அடிப்படையிலேயே பணியாற்றச் செய்கிறார்கள். இது ஊழியர்களை அவர்கள் தங்கள் முழுத்திறமையுடன் பணியாற்றாமல் தடைசெய்கிறது. என்னைப் பொறுத்தவரை சிறு சிறு விஷயங்களுக்காக ஊழியர்களின் கழுத்தைப் பிடிப்பதோ, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதோ வழக்கமல்ல. எனது கருத்துகள் சரிவர புரிந்துகொள்ளப்படவில்லை என்றே

தோன்றுகிறது.

இந்த அடிப்படை விதி மாறுவதே இல்லை. உங்கள் நோக்கத்தை விட நீங்கள் பெரிதாவது இல்லை. ஆனால் உங்கள் நோக்கம் பற்றி நீண்ட நாள் நினைத்துக்கொண்டே இருக்கிறீர்கள். அவை நாளடைவில் நிறைவேறிவிடும். 30 ஆண்டுகளுக்கு முன்னரே எனக்கு ஞானம் கிடைத்தது. அப்போது நான் தனிமையான ஆள். ஆனால் மேல் உலகத்திலிருந்து குரல்கள் மட்டும் கேட்டுக்கொண்டேயிருந்தன. இதுதான் என் வாழ்விலேயே தனிமையான நாட்கள். நூலில் தொங்கும் சிலந்தி போல் நான் உதவியின்றி இருந்தேன். என்னை ஆதரிக்க ஆதரவாளர்கள் யாரும் இல்லை. உலகில் யாரிடமும் உதவிகோர முடியவில்லை. இப்படித்தான் எல்லாம் ஆரம்பித்தது.

30 ஆண்டுகளுக்கு பின் இன்று நான் ஜப்பானை சுற்றி நிறைய ஷோஜாக்களை[6] நிறுவிவிட்டேன். நாடெங்கும் நானூறுக்கும் மேல் கிளைகள் இருக்கின்றன. அவை ஆயிரத்தை நோக்கி வளர்ந்து கொண்டிருக்கின்றன. வெளிநாடுகளில் எண்பதுக்கும் அதிகமான கிளைகள். உலகெங்கும் இருநூறு நாடுகளில் கிளை பரப்பத் திட்டமிட்டிருக்கிறோம்.[7]

எங்களுடைய திரைப்படங்களும் புத்தகங்களும் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. அதே சமயம் நாங்கள் ஹேப்பி சயின்ஸ் அகாடமியையும் தொடங்கிவிட்டோம். இது ஜப்பானின் முதன்மைக் கட்சியாக மாறத் துடித்துக் கொண்டிருக்கிறது. திரும்பி பார்க்கும்போது நாங்கள் நன்றாகவே செயல்பட்டிருக்கிறோம் என்றே தெரிகிறது. எங்கள் சிந்தனை களின் வலிமைக்கு இதுவே ஒரு சாட்சி.

இன்றுவரை எங்கள் வேட்பாளர்கள் யாரும் தேசிய தேர்தலில் பங்கெடுக்கவில்லை. ஆனால் எனது கருத்துகளும் யோசனைகளும் ஜப்பான் அரசையும் அதிகாரத்தையும் மீடியாக்களையும் பெரிதும் பாதித்துள்ளன. இவை அரசை அசைத்துவிடும் சக்திகொண்டவை. இந்த பாதிப்பு வளரத்தான் செய்யுமே தவிர பலவீனம் அடையாது. என்னுடைய சாதனைகள் எல்லாம் என் தீவிர முயற்சியின் பலன்தான். எவ்வளவு முடியுமோ அவ்வளவு குறைவாக வேலை செய்ய வேண்டும். என் மீது கவனம் செலுத்த கூடாது என்று முன்பு என்னிடம் கூறியிருந்த போதிலும்.

[6] ஹேப்பி சயின்ஸ் தொண்டர்கள் கூடும் மிகப்பெரிய நம்பிக்கை மையங்கள்.

[7] 2012 பிப்ரவரி கணக்குப்படி

3.4

இளைய தலைமுறைகளின் வலிமை வழியாக ஒரு வருங்கால செழிப்பை சிருஷ்டியுங்கள்

உங்கள் இருபதுகளில் நீங்கள் கற்றவை உங்களுக்கு சக்தியை கொடுக்கும்

அறிவே சக்தி. கற்பதுதான் வலிமை தருகிறது என்று எனது அனுபவங்கள் கூறுகின்றன. இருபது வயதுகளில் நீங்கள் கற்று உணர்ந்தவையே உங்களுக்கு அளப்பரிய வலிமையைத் தரும். எனது கல்லூரி நாட்களிலும் பட்டம் பெற்ற பின்னர் பல ஆண்டுகளிலும் நான் படித்தவை என் மனதில் தெளிவாக பதிந்திருக்கின்றன. எனது திறமைகளை வடிவமைத்தவை அவை. உண்மைதான், அதன் பிறகும் நான் நிறைய புத்தகங்களை படித்திருக்கிறேன். ஆனால் அவற்றில் பெரும்பான்மையும் என் நினைவில் தங்கியிருக்கவில்லை. இருபது வயதுகளில் நான் படித்தவை எனது நடத்தையை வடிவமைத்தன. இருபதுகள் வரை உங்கள் வளர்ச்சி நீங்கள் உண்ணும் உணவை பொறுத்தே அமைகிறது. அப்போது நீங்கள் படித்தவையும் கற்றவையும், உங்கள் ஆன்மா அடுத்த கட்டத்திற்கு செல்லத் தேவையான சத்துக்களை தருகின்றன.

ஜப்பான் ஒரு முக்கிய நாடாக மாறுவதற்கு, நிறைய வெற்றிகரமான மக்களை அது உற்பத்தி செய்ய வேண்டும்

ஜனநாயகக் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகு ஜப்பான் குறுகிய மனப்பான்மையுடன் பின்னோக்கி செல்லத் தொடங்கியது. இந்த ஆட்சி எல்லாவற்றையும் கீழே தள்ளியது. குறைந்த தரத்தைக் கடைப்பிடிக்க தொடங்கியது. இரண்டாம் தரத்திற்கு செல்லும் அதன் போக்கை எதிர்த்து, ஜப்பான் மக்களிடம் நான் அபாய

அறிவிப்பு செய்தேன். இது ஒரு பெரிய பாரமான வேலைதான். ஆயினும் அதற்கு புத்துயிர் ஊட்ட முனைந்தேன். நான் என் கவனத்தை திசை திருப்பினால் நாடு மேலும் மோசமடையும்.

ஜப்பான் தன் எதிர்காலத்தை அதன் இளைய தலைமுறையை நம்பியே இருக்கிறது. ஒரு செழிப்பான நாட்டை இளைஞர்களே உருவாக்க முடியும். பயப்படாதீர்கள், உங்கள் முயற்சியை கைவிடாதீர்கள். பொறாமை மனப்பான்மை வெற்றியையும் செழிப்பையும் கீழே வீழ்த்திவிடும். ஒன்றன் பின் ஒன்றாக வெற்றிகரமான மக்களை நாம் உருவாக்க வேண்டும். இல்லாவிடில் நாம் ஒரு முக்கிய நாடாக மாற முடியாது.

வெற்றியைக் குறித்து குற்ற மனப்பான்மை கொள்ள வேண்டாம். வெற்றி ஒரு மோசமான விஷயம். நம்மை அதைரியப்படுத்தும் எண்ணத்தை விட்டு விடுங்கள். வெற்றி பெற்றவுடன் அதற்கு பல பிரிவுகள் உண்டென்பதை புரிந்துகொள்ளுங்கள். ஹேப்பி சயின்ஸுக்கு வரும் அன்பளிப்புகளை நாங்கள் ‘மகிழ்ச்சியைப் பயிரிடுதல்’ என்கிறோம். பணத்தை தவிர வேறு பல அன்பளிப்புகளும் உண்டு. உலகிற்கு பங்களிக்க எண்ணற்ற வழிகள் இருக்கின்றன. எதிர்காலத்தில் நீங்கள் வெற்றிபெற்றால் உங்கள் வெற்றிக் கனியை உலகத்தாரோடு பகிர்ந்துகொள்ள மறந்துவிடாதீர்கள். எவ்வளவுக்கெவ்வளவு வெற்றி கிடைக்கிறதோ அவ்வளவிற்கு பரிசுகளை நீங்கள் வழங்கமுடியும்.

அமெரிக்காவில் நிறைய செல்வந்தர்கள் நல்ல நல்ல காரியங்களுக்காக பல அமைப்புகளை ஏற்படுத்தியுள்ளார்கள். உதாரணமாக, ஜான் டி. ராக்பெல்லரின் வெற்றி அவரை உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவராக மாற்றிவிட்டது. ஆனால் அவருக்கு எதிராக விமர்சனங்கள் நிறைய எழுந்தன. அதனால் அவர் தமது ஐம்பதுகளில் மனம் சோர்வுற்று மரணத்தின் விளிம்பிற்கே சென்றுவிட்டார். அந்த சமயத்தில் அவருக்கு ஒரு யோசனை தோன்றியது. தமது சொத்துகளை உலகின் நன்மைக்காக செலவிட விரும்பினார். ராக்பெல்லர் ஃபவுண்டேஷனை ஆரம்பித்தார். பல ஏழை நாடுகளில் பள்ளிக்கூடங்களும் மருத்துவமனைகளும் திறக்கப்பட்டன.

தம் சொந்தப் பணத்தை உலகின் நன்மைக்காக செலவிடத் துவக்கியதும் அவர் உடல்நிலை தேறியது. 90 வயது வரை திடமான ஆரோக்கியத்துடன் வாழ்ந்தார். மக்களின் விமர்சனங்கள் அவரை வாட்டும் வரை அவர் நிலை

மோசமாகத்தான் இருந்தது. ஆனால் அவர் ‘மகிழ்ச்சி விதை’களை விதைக்க தொடங்கியதும் அவர் உடல்நிலை நல்ல மாற்றத்தை அடைந்தது. மீண்டும் இளைஞராக மாறிவிட்டார். நீண்ட நாள் வாழ்ந்தார். வெற்றி பெற்ற மனிதராக வாழும்போது அதற்குரிய விலையாக சமூகத்திற்கு நன்மை செய்ய வேண்டும். வெற்றி என்பது பாவமல்ல. உங்களுக்கு திறமையிருந்தால் அதை முழுஅளவில் பயன்படுத்த வேண்டும்.

எதை தவிர்த்து விட்டீர்கள் என்று கேட்காதீர்கள் எதை சாதித்தீர்கள் என்று கேளுங்கள்

இளைஞர்களான உங்களுக்கு என் அறிவுரைகள் பயன்படும் என்று நம்புகிறேன். ஒவ்வொருவரும் விசித்திரமான பிரச்சனைகளையும் நிலைமைகளையும் எதிர்கொள்கிறார்கள். இங்கே முக்கியமான விஷயம் என்னவெனில், நாம் எதை எதிர்கொண்டாலும் பெரிதாகவே சிந்திக்க வேண்டும். வாழ்க்கையை முழுதாக வாழவேண்டும்.

தோல்வியுற்ற மனிதர்கள்தான் வாழ்க்கையில் விமர்சனங்களை தவிர்க்க வேண்டும் என்று சொல்வார்கள். என்னைப் பற்றி யாருமே குறைசொன்னதில்லை என்று சிலர் பெருமைப் பட்டுக்கொள்வார்கள். ஆனால் உங்களைப் பற்றி யாருமே குறைசொல்லாவிட்டால் நீங்கள் எதையுமே சாதிக்கவில்லை என்றுதான் அர்த்தம். எதையும் சாதிக்காதவரைப் பற்றி என்ன சொல்ல இருக்கிறது? வெற்றி பெற்ற மனிதர்களைப் பற்றிதான் விமர்சனங்கள் எழும். காய்த்த மரம்தான் கல்லெறிபடும். சொர்க்கத்தின் திறவுகோல் நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லை என்பதில் அல்ல, எதை எல்லாம் சாதித்தீர்கள் என்பதில்தான் இருக்கிறது. இந்த உலகைவிட்டு நீங்கள் நீங்கும்போது உங்களை ‘உங்களால் என்ன சாதிக்க முடிந்தது?’ என்றுதான் கேட்பார்கள். எதை தவிர்த்தீர்கள் என்றல்ல. என்ன சாதித்தீர்கள் என்பதில்தான் உங்களை எடைபோடுவார்கள்.

4

வெற்றிக்கு வழி

4.1

கஷ்டப்பட்டு படித்து உழைத்த சிறுவன்

சிறுவயதில் எனக்கு நம்பிக்கையூட்டிய 'அழகற்ற வாத்துக் குஞ்சு' கதை

இந்த அத்தியாயம் வாலிபர்களுக்காக மட்டும் அல்ல, வாலிப மனம்கொண்ட அனைவருக்கும்தான். முன்னொரு காலத்தில் ஒரு சிறுவனுக்கு எல்கேஜியில் இருந்து துவக்கப் பள்ளிக்கு செல்வதற்கான அறிவுத்திறன் (IQ) தேர்வு நடத்தப்பட்டது.[8] அதற்கு 100 மதிப்பெண். சிறுவனுக்கு ஒரே ஆச்சரியம். அவன் 97 எடுத்திருந்தான். உடனே வீட்டிற்கு ஓடிப் போய் பெற்றோரிடம் சொன்னான். ஆனால் அவர்கள் வருத்தத்துடன் கண்ணீர் விட்டபோது ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று அவனுக்குத் தோன்றியது. IQ தேர்வில் 100 மதிப்பெண் என்பது உச்சகட்டமல்ல, சராசரிதான்.

அவனுடைய அண்ணன் (நான்கு வயது மூத்தவன்) 187 மதிப்பெண் வாங்கியிருந்தான். முதல் தடவை எழுதிய தேர்வில் 186 கிடைத்தது. அது மிக அதிக ஸ்கோர் என்பதால் மீண்டும் எழுத வேண்டும் என்று ஆயிற்று. டோக்குஷிமா கல்லூரியின் கல்வித்துறையில் இருந்து ஒருவர் வந்து சிறுவனுக்கு பரீட்சை வைத்தார். அதில் 187 கிடைத்தது ஆனால் தம்பிக்கு கிடைத்ததோ வெறும் 97தான்.

இந்த தம்பி என்ன ஆவான்? மாணவாய் இருந்த போது பெற்றோர் அவனிடம் பெரிதாக எதையும் எதிர்பார்க்கவில்லை. தொடக்கப் பள்ளியில் படிக்கும்போது வீட்டு வேலைகள், தோட்ட வேலைகளை கவனித்துக்கொண்டான். கல்வித்துறையில் அவனால் பெரிதாக எதையும் சாதிக்கமுடியாது என்று பெற்றோர் நம்பினர். வியாபாரத்தில் ஈடுபடுத்துவதுதான் நல்லது என்று நினைத்தனர். சின்ன வயதில் அவனிடம் எல்லோரும் பணம் சம்பதிப்பது எவ்வளவு பெரிய விஷயம் என்றுதான் சொன்னார்கள்.

இப்படிதான் அவன் வளர்ந்தான். அவன் அண்ணனோ (இவனைவிட இரண்டு மடங்கு IQ உடையவன்) நன்றாக படித்தான். கல்வித்துறையில் நல்ல வேலை கிடைத்தது. தம்பிக்கோ ஆரம்ப பள்ளி நாட்களிலேயே தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

ஆனால் ஆரம்பப் பள்ளி இறுதிநாட்களில் பையனின் நிலை முன்னேறியது. கஷ்டப்பட்டு படித்தான். படிப்பில் அதிக கவனம் செலுத்தியதினால் உடல் பயிற்சியை மறந்துவிட்டான். எடை அதிகரித்தது ஆறாம் வகுப்பு படிக்கும்போது நாலடி பத்து இஞ் உயரம், 143 பவுண்ட் எடை. ஜப்பானில் ஒரு பழமொழி சொல்வார்கள் பெரிசுதான் சிறிசுக்கு நல்லது. அவன் அம்மா ஆறடி ஆள் போட வேண்டிய சட்டையை வாங்கி அவனுக்கு கொடுத்தார். தொள தொளவென்று இருந்த அதை போட்டுக்கொண்டு அவன் நடக்கும்போது வெயிலில் அவன் நிழல் பூதம் போல் காட்டியது. அவன் படித்த ‘அழகற்ற வாத்து குஞ்சு’ கதைதான் அவனுக்கு நினைவு வந்தது.

அந்த கதை அவனுக்கு மனதைவிட்டு மாறவே இல்லை. திரும்பத் திரும்ப அதையே நினைத்துக்கொண்டிருந்தான். என்றாவது ஒருநாள் இந்த அழகற்ற வாத்து குஞ்சு அற்புதமான ஓர் அன்னமாக மாறிவிடும் என்று அவன் நம்பினான்.

ரொம்ப நாட்களுக்கு பிறகுதான் IQ தேர்வின்போது விடைகளை தவறான பக்கத்தில் குறித்துவிட்டது புரிந்தது. ஆசிரியர் சொன்னதை தவறாக புரிந்துகொண்டு ஒரு தாளை அப்படியே ஒதுக்கிவிட்டிருந்தான். கேள்விகளுக்கான சரியான விடைகள் அந்த அந்த இடங்களில் குறிக்கப்படவில்லை. தேர்வின்போது ஆசிரியர் எப்படி விடைகளை குறிக்க வேண்டுமென்று திரும்ப திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தார். அவன்தான் புரிந்துகொள்ளவில்லை.

கடைசியில் அவனது IQ அவ்வளவு மோசமில்லை என்று நினைத்துக்கொண்டான். ஆனால் குழந்தைகள் பெற்றோர் சொல்வதை அப்படியே நம்பிவிடுவார்களே. ரொம்ப நாட்களாக அவன் தன் அறிவு சராசரிக்கும் குறைவுதான் என்று தான் நினைத்துக்கொண்டிருந்தான். ஆனால் பள்ளியில் என்னமோ நிறைய மதிப்பெண் கிடைத்தது. ஆறாவது படிக்கும்போது கடுமையாக படித்தான் அப்போதுதான் மற்ற மாணவர்களுக்கு இணையாக வர முடியும் என்று நினைத்தான். “அவர்களை விட மூன்று தடவை படித்தால் அவர்களை போல் வந்துவிடலாம்”

என்று எண்ணினான். இந்த எண்ணத்திலேயே அவன் வளர்ந்தான்.

மக்களால் மாற முடியும்

உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது அவனுக்கு ஒரு விஷயம் புரியவில்லை. பெற்றோர் அவனது திறமையை கண்டுகொள்ளவே இல்லை அண்ணனை மட்டுமே புகழ்ந்துகொண்டிருந்தனர். அண்ணனை சிம்மாசனத்தில் தூக்கிவைப்பதாக தோன்றியது. ஆச்சரியமாக இருந்தது அவனுக்கு. அவர்கள் தங்கள் கருத்தை மாற்றிக்கொள்ள மாட்டார்கள் என்று தோன்றியது. இப்போது அதைப் பற்றி நினைக்கும்போது ஒன்று புரிகிறது. அந்த நாட்களில் அதுதான் வழக்கம். மூத்தவனுக்குத்தான் மரியாதை. செல்லம். நல்ல வேளை, தான் அப்படி ஒன்றும் புத்திசாலி அல்ல என்பதால் அந்த சிறுவன் கஷ்டப்பட்டு பாடங்களை படிக்க கற்றுக்கொண்டான்.

நான்தான் அந்த சிறுவன்.

இந்தக் கதை கூறும் நீதி என்ன? ஒருவன் எப்படி மாறுவான் என்பதை சொல்ல முடியாது. உங்களை எடைபோட எத்தனையோ தேர்வுகள் இருக்கின்றன. ஆனால் மக்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். எனது அனுபவங்களின் மூலம் நான் கற்றது, நீங்கள் வளர்க்கும் உங்கள் மனோபாவமே முக்கியம் என்பதுதான். இந்த தத்துவத்துடனேயே நான் வளர்ந்தேன். கல்லூரியில் படிக்கும்போதுகூட என் பெற்றோர் என்னை பற்றிய எண்ணத்தை மாற்றிக்கொள்ளவில்லை. ஒருவேளை அவர்கள் நினைப்பது சரியாகக்கூட இருக்கலாம்.

எனக்கு 34 வயதாகும்போது ஹேப்பி சயின்ஸ் தொடங்கி பல ஆண்டுகளுக்கு பிறகு ஒருவாரப்பத்திரிக்கை என்னைப் பற்றி எழுதியது. நான் அறிவாளியல்ல என்று சொல்வது தவறு என்றது. டோக்கியோ பல்கலைக்கழகத்திலிருந்து சட்டப் படிப்பிற்கான விருது எனக்கு கிடைத்திருக்கிறது.

முதலில் என்னைப்பற்றிய விமர்சனங்களை தவிர்த்து வந்தேன். எழுதப்படாத ஒரு சட்டம் இருப்பதாக தோன்றியது. அதாவது வெற்றி பெற்ற மனிதர்களைப் பற்றி விமர்சனங்கள் செய்ய வேண்டும். ஒருவர் மக்களால் பாராட்டப்பட்டவர் என்றால் பத்திரிகைகள் அவரைப் பற்றி மோசமாக விமர்சிக்க வேண்டும். அந்த வாரப்பத்திரிகை சாத்தானின் கையாள் என்று

தோன்றியது.[9] இந்த மாதிரி தாக்குதல்களையெல்லாம் அறிந்திராத நான் முதலில் அதிசயப்பட்டேன். இது நடந்து இருபது வருடங்கள் ஆகிவிட்டன.

அவர்கள் விமர்சனத்தை நான் பணிவுடன் ஏற்றுக்கொண்டேன். நான் அப்படியொன்றும் புத்திசாலியல்ல என்று சொல்லத் தொடங்கினேன். இப்போதுகூட உள்ளுக்குள்ளே என் பெற்றோர் சொன்னது சரிதானோ என்றுதான் தோன்றுகிறது. ஒருதாழ்வு மனப்பான்மைகூட இருக்கிறது. மக்கள் எப்படி என்னை பார்க்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள்ளும் திறமை என்னிடம் இல்லை என்றுதான் தோன்றுகிறது.

[8] ஹிரோஷி ஒகாவா தனது குழந்தைப் பருவத்தைக் குறித்து சிலேடையாக பேசிய பேச்சு இது. ஆனால் சொல்லப்போனால், ரியோ ஒகாவா பல தடவைகள் ஜீனியஸ் லெவல் மினி மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.

[9] **பார்க்க:** ரியோ ஒகாவா (ஒரு வார இதழை ஆட்சி செய்யும் சாத்தானை துப்பறிவது) (டோக்கியோ: ஐஆர்ஹெச் பிரஸ், 2011)

4.2

உங்கள் காலடியில் வைரங்கள் கிடக்கலாம்

ஒரு பேச்சாளர் பணக்காரர் ஆன கதை

பலருக்கும் தங்களிடம் என்ன திறமை ஒளிந்திருக்கிறது, எவ்வளவு திறமை இருக்கிறது, அவற்றையெல்லாம் எப்படி பயன்படுத்தலாம் என்றே தெரியாது. இது குறித்து ஓர் அமெரிக்க பேச்சாளர் சுமார் ஐயாயிரம் மேடைகளில் பேசி பெரிய பணக்காரராகி விட்டார். அவர் இந்த கதையை சொல்வார்.

ஒரு விவசாயி ஒரு நிலத்தை விலைக்கு வாங்கினான். அதில் ஒரு வைரச்சுரங்கம் இருப்பதை அறிந்து நிலத்தை தோண்டத் தொடங்கினான். தோண்டி தோண்டி பார்த்தும் சுரங்கம் தென்படவில்லை. கடைசியில் நிலத்தை வேறு ஒருவருக்கு குறைந்த விலைக்கு விற்றுவிட்டு இன்னொரு இடத்திற்கு சென்று ஒரு நிலத்தை வாங்கித் தோண்டினான். அங்கும் தோல்விதான். பின் இன்னொரு இடத்திற்கு. இப்படியாக வைரச் சுரங்கத்தைத் தேடி தேடி கிடைக்காமல் அலுத்துப்போனான்.

அவனுடைய முதல் நிலத்தை வாங்கியவர் விவசாயி. அவன் தோண்டி விட்ட இடத்திலிருந்தே மேலும் தோண்டினார். மூன்றடி தோண்டியதும் என்ன ஆச்சரியம்! வைரச் சுரங்கம் அவருக்குத் தென்பட்டது. முதலில் தோண்டிய விவசாயி தொடர்ந்து தோண்டியிருந்தால் வைரம் கிடைத்திருக்கும்.

இந்தக் கதையை வெவ்வேறு வடிவத்தில் சொல்வதுண்டு. கதை உண்மையாகவும் இருக்கலாம். ஓர் அமெரிக்க பிரசங்கி இந்தக் கதையை ஐயாயிரம் தடவைக்கு மேல் சொல்லி பெரிய பணக்காரர் ஆகிவிட்டாராம். அமெரிக்கரின் கனவு நனவானது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்தக் கதை என்ன நீதி சொல்கிறது என்று உங்களுக்குப் புரிந்திருக்கும். பலரும் தங்கள் வெற்றிக்கு மூன்றடிக்கு முன்பே

அதை விட்டு விடுகிறார்கள். நம்மில் நிறைய பேர் அப்படித்தான். முதலில் தோண்டியவன் முதலில் தோண்டிய இடத்தில் வைரம் கிடைக்காததால் இன்னொரு இடத்தில் தோண்டத் தொடங்கினான். அங்கும் கிடைக்காததால் இன்னொரு இடத்தில். அப்புறம் இன்னொரு இடத்தில்...

நம் எல்லோரிடமும் ஒரு தெய்வீக வைரம் இருக்கிறது

இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது? நம் காலடியில் வைரம் கிடக்கிறது. நமது தோட்டத்தில் கிடக்கிறது. இந்தக் கதையின் நீதி சரிதானா என்பது வேறு விஷயம். ஆனால் இந்தக் கதை உலக முழுதும் பரவியிருக்கிறது. கதையில் ஒரு செய்தி இருக்கிறது. மக்கள் மனதைத் தொட்டுவிடும் செய்தி.

நம் எல்லோரிடமும் புத்தரின் (கடவுளின்) இயல்பு இருக்கிறது. ஏனெனில் நாம் எல்லோருமே புத்தரின் குழந்தைகள். உண்மை இது. நாம் நம்முள்ளே போதுமான அளவு தோண்டினால் உள்ளே புத்தரின் இயல்பு மறைந்திருப்பதைக் காணலாம். ஆனால் நிறைய பேர் விரைவிலேயே தங்கள் முயற்சியை விட்டு விடுகிறார்கள். இந்தப் பாழ் நிலத்தில் வைரம் எங்கே கிடைக்கப் போகிறது என்று எண்ணி விடுகிறார்கள்.

புத்தரால் நேசிக்கப்பட்ட மக்கள் இருக்கிறார்கள் என்று நாம் நம்புகிறோம். ஆனால் அது நாமல்ல. ஏனோ, நாம் எதற்கும் உதவாதவர்கள் என்று நினைத்துக் கொள்கிறோம். நம்மிடம் போதுமான கல்வி இல்லை, அனுபவம் இல்லை, சம்பாத்தியம் இல்லை. எனவே நாம் பெரியவர்கள் ஆவது சாத்தியமில்லை.

வைரம் தோண்டுபவர் கதை கூறும் நீதி என்ன? சிறப்பான எதற்குமே நாம் லாயக்கற்றவர்கள் என்று நம்புவர்கள் கூறுவது முற்றிலும் தவறே. இந்தக் கதை உலகெங்கும் பரந்து விட்டது. எண்ணற்ற முறை திரும்பத் திரும்பக் கூறப்பட்டு விட்டது. காரணம் நாம் எல்லோரும் புத்தரின் குழந்தைகள் என்பதே. ஹேப்பி சயின்ஸில் நான் எப்போதும் கூறிவருவதும் இதுதான். எல்லோர் காலடியிலும் வைரங்கள் புதைந்து கிடக்கின்றன. எல்லோராலும் அவற்றைத் தோண்டி எடுக்க முடியும், இன்னும் சிறிது ஆழமாகத் தோண்டினால். சந்தர்ப்பங்கள் மற்றவர்களுக்குத்தான் வரும், நமக்கு வராது என்று அபத்தமாக சிந்திப்பவர்களுக்கு இந்தக் கதை ஓர் எச்சரிக்கை. இதிலிருந்து நாம் அதைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

4.3

நாம் எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பது போலவே ஆகிவிடுவோம்

நம் கனவுகள் ஏன் மெய்ப்படவில்லை என்பதற்கான காரணங்கள்

மனிதர்களாகிய நாம் எப்போதும் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறோமோ அப்படியே ஆகிவிடுகிறோம் என்று நான் பலமுறை கூறியிருக்கிறேன். நீங்கள் யாரென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களோ அப்படியேதான் எதிர்காலத்தில் ஆகப்போகிறீர்கள். நிறைய பேர் என்னிடம் வந்து கேட்கிறார்கள், “நான் எப்போதும் என் கனவுகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிக்கிறேன். ஆனால் அவை பலிப்பதில்லையே. அவற்றைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால் கனவுகள் மெய்ப்பட்டு விடுமா?” அந்த இரண்டு வைரச் சுரங்கம் தோண்டுபவர்களின் கதை நமக்கு சில குறிப்புகள் தரலாம். ஆனால் நான் இப்போது உங்களுடன் வேறு ஒரு கதையைப் பகிந்து கொள்ளப் போகிறேன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் அமெரிக்கா செல்வத்தில் செழித்தபோது ‘வெற்றியின் விதிகள்’ மிகவும் பிரபல மடைந்தது. மனோதத்துவம் போன்ற துறைகளில் நீங்கள் சிந்திக்கும் வழியிலேயே உங்களை மாற்றிக் கொள்ளலாம் என்ற சித்தாந்தம் மிகவும் பிரபலம் அடைந்தது. ஒருநாள் ஓர் அலுவலக ஊழியர் இந்தக் கருத்தைக் கூறியவரிடம் பின்வருமாறு கேட்டார்: “மக்கள் தாங்கள் எப்போதும் சிந்திப்பதைப் போலவே மாறிவிடுவார்கள் என்று கூறுகிறார்கள். நான் என் ஆபீஸ் ஊழியர் வேலையை விட்டுவிட்டு ஒரு வெற்றிகரமான வியாபாரியாக மாறி செல்வந்தனாக வேண்டுமென்று எப்போதும் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். என்ன புண்ணியம், நான்

இப்போதும் ஆபீஸ் ஊழியனாகத்தான் இருந்து வருகிறேன். என்மேல் என்ன தவறு?"

அவர் கூறினார். "கண்ணாடியில் உங்கள் உருவத்தை நன்றாகப் பாருங்கள். உங்களைப் பார்த்த எவரும் நீங்கள் ஓர் அலுவலக ஊழியர் என்றுதான் கூறுவார்கள், இல்லையா? நீங்கள் இந்த வேலையை விட்டுவிட்டு ஒரு வியாபாரியாகவோ விற்பனையாளராகவோ மாற வேண்டுமானால் முதலில் உங்கள் தோற்றத்தை மாற்றிக் கொள்ள வேண்டும். உங்கள் மனதில் உங்களைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறீர்களோ அதே தோற்றத்தை வெளயிலும் காட்ட வேண்டும். மனதுக்குள் மட்டும் நினைத்துக் கொண்டிருந்தால் போதாது. நீங்கள் உண்மையாகவே அப்படி நினைத்துக் கொண்டிருந்தால் உங்கள் வெளித் தோற்றமும் அவ்வாறே மாறவேண்டும். உங்கள் நடவடிக்கைகளும் மாறவேண்டும். உங்களைப் பார்ப்பவர்கள் நீங்கள் எண்ணியிருப்பதை வெளியே காண்பார்கள். உங்களை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் ஒரு அதிகாரி என்பதை நீங்களே காண்பீர்கள்."

அத்துடன் தன் கோட், சூட், நெக் டை எல்லாவற்றையும் மாற்றிப் புதிய தோற்றத்தை ஏற்டுத்திக் கொள்ள ஊழியர் ஒப்புக்கொண்டார். இதிலிருந்து என்ன தெரிகிறது? நமது எண்ணங்கள் மாறினால், அது போலவே நம் வெளித் தோற்றமும் மாறிவிடும் என்பதே.

வெளித் தோற்றத்தாலும் செயல்களாலும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று காட்டுங்கள்

நீங்கள் ஒரு நாட்டின் தலைவராக இருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் அணிந்திருப்பதோ ஒரு சாதாரண குப்பை சேகரிப்பவனின் உடை. அத்துடன் நீங்கள் ஒரு குப்பை அள்ளும் வண்டியின் அருகே நின்று கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உங்களை யாராவது நாட்டின் தலைவர் என்று நினைப்பார்களா? இது நம் எல்லோருக்குமே பொருந்தும். நீங்கள் என்னவாக இருக்கிறீர்களோ, அல்லது என்னவாக இருப்பதாகக் காட்டிக்கொள்ள நினைக்கிறீர்களோ, அந்தத் தோற்றத்தை கொண்டிருங்கள். உங்கள் மனதில் இருப்பது உங்கள் செய்கைகளிலும் தோற்றத்திலும் வெளிப்படவேண்டும். மற்றவர்களின் மனதிலும் அது பிரதிபலிக்க வேண்டும். நிறைய

பேர் தங்கள் மனதில் உள்ளதை வெளியிலும் காட்டிக்கொள்வது எவ்வளவு முக்கியம் என்பதை உணர்ந்திருக்கவில்லை.

இதுதான் நாம் செய்யவேண்டிய முக்கிய வேலை. வைரச் சுரங்கத்தைக் காண்பதற்காக மேலும் தொடர்ந்து தோண்ட வேண்டியது மூன்றடிதான். வெற்றியடைய விரும்பி, ஆனால் அதற்கான முதல் நடவடிக்கை எடுக்காத அந்த ஆபீஸ் ஊழியரைப் போல் இருக்க வேண்டாம். நான் திரும்பத் திரும்பச் சொல்கிறேன் நீங்கள் நினைக்கிறபடிதான் உங்கள் வாழ்க்கை அமையும், ஆனால் உங்கள் எண்ணங்கள் வெறும் கற்பனைகளாக இருக்கக் கூடாது. உங்கள் கனவுகளைப் பற்றி நினைத்துளக் கொண்டிருந்தால் மட்டும் போதாது, அது நனவாவதற்கான நடவடிக்கைகளையும் தொடங்க வேண்டும். நமது எண்ணங்களை வெளிப்டையாகக் காட்டிக்கொள்ள வேண்டும். நமது எண்ணங்களை வார்த்தைகளாக வெளிப்படுத்த வேண்டும். எண்ணங்களின் அடிப்படையில் செயல்கள் புரிய வேண்டும். நமது தோற்றத்தில் அவை வெளிப்பட வேண்டும். முடிந்த வரை பல வழிகளிலும் உங்கள் எண்ணங்களை வெளிப்படையாகக் காட்ட அஞ்ச வேண்டாம்.

4.4

அறிவே சக்தி

மற்றவர்களுக்கு தெரிந்த அளவு புரிந்துகொள்ள இரண்டு மூன்று தடவை முயற்சி செய்யுங்கள்

நாம் சிந்திக்கும் முறை என்பது நமது வாழ்வில் ஒரு முக்கிய பகுதி. நாம் எப்படி இருக்கிறோம் என்று நினைக்கிறோமோ அப்படித்தான் இருப்போம். இது நான் சிறுவனாக இருந்த போது கற்றுக் கொண்டது. அப்போது நான் அதி பயங்கர தாழ்வு மனப்பான்மையால் பீடிக்கப்பட்டிருந்தேன். அதை மாற்றிக் கொள்ள நான் எடுத்த முயற்சியில் நானே புரிந்து கொண்டது, முதலில் நாம் நம் சிந்திக்கும் வழியை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதுதான். அத்துடன் அறிவே சக்தி என்பதையும் புரிந்து கொண்டேன். இது மேனாட்டு தத்துவவாதி பேக்கனின் அறிவுரை. எதைப் பற்றிய அறிவும் உங்களுக்கு பலத்தைக் கொடுக்கும். 'அறிவு' என்பது வெறும் செய்திகள் மட்டும் அல்ல. கடவுளின் கருணையும் அடங்கியது. உதாரணமாக, கடவுளின் அருள்கொடையாக நமக்குக் கிடைக்கும் செய்தியே பேகன் குறிப்பிடும் அறிவாகும். அத்துடன் செய்திகள் அல்லது விவரங்களையும் நாம் அறிவுடன் சேர்த்துக் கொள்ளலாம்.

நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கும்போதுதான் 'அறிவே சக்தி' என்பதை தெரிந்து கொண்டேன். அது உண்மை என்பதையும் உணர்ந்து கொண்டேன். அறிவு நமக்கு சக்தியைக் கொடுக்கிறது என்பதே உண்மை. இளமைப் பருவத்தில் சிலர் எவ்வளவு அறிவாளிகளாக இருந்தனர் என்பதைக்கொண்டுதான் நிறையபேர் அவர்களை எடைபோடுகிறார்கள். நம்மில் பலரும் நம்மை அப்படித்தான் பார்க்கிறோம். நீங்கள் கெட்டிக்காரரோ இல்லையோ, உங்களிடம் அறிவு இருப்பது வரை நீங்கள் நல்ல பலனை அடைவீர்கள். சில விஷயங்களை நீங்கள் இயற்கையாகவே புரிந்து கொண்டீர்களோ அல்லது படித்து அறிந்து கொண்டீர்களோ, முடிவு என்னமோ ஒன்று தான்.

முடிவுகளை வைத்துப் பார்க்கும்போது நான் இந்த இரண்டு பேருக்கும் இடையே எந்த வித்தியாசத்தையும் காண்பதில்லை.

அறிவே சக்தி என்பதை நான் இன்னும் அழுத்தமாகக் கூறவேண்டியதில்லை. ஒருவன் அதிக புத்திசாலி இல்லாமல் இருந்தும், ஒரு விஷயத்தை இரண்டு மூன்று தடவை படித்து அந்த விஷயத்தில் நிபுணனைவிட நன்கு உணர்ந்து கொண்டான் என்றால், அவன் அந்த நிபுணனைவிட அதிகம் சாதிக்க முடியும். 'அறிவே சக்தி' என்பதன் பொருள் இதுதான். இதன் முழு உண்மையையும் எனது சொந்த அனுபவங்கள் வழியே நான் அறிந்துகொண்டேன்.

நிறைய புத்தகங்கள் படிப்பதன் மூலம் தொடங்கினேன்

டோக்கியோ பல்கலைக் கழகத்தில் நான் படித்துக்கொண்டிருந்தபோது என்னைச் சுற்றியிருந்தவர்களை விட நான் தாழ்வு மனப்பான்மை கொண்டிருந்தேன். பட்டிக்காட்டுப் பையன் என்பதால் மற்ற எல்லா மாணவர்களும் பிறவி மேதைகள் என்று எண்ணியிருந்தேன். அறிவே சக்தி என்ற மந்திரத்தின் வலிமையை உணர்ந்த பின் அறிவு இருந்தால் மற்ற மாணவர்களின் தரத்தை எய்துவது அத்தனை சிரமம் ஒன்றுமல்ல, அவர்களையும் மிஞ்சிவிடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில் நான் புத்திசாலியா என்று சந்தேகப்பட்டுக் கொண்டிருப்பதை விட்டு விட்டு, அறிவு தேடலைத் தொடர்ந்தேன்.

நிறைய புத்தகங்களைப் படிக்கத் தொடங்கினேன். புத்திசாலிகள் என்று சொல்லிக் கொள்பவர்களைவிட அதிகம் புத்தகங்களை படிக்க வேண்டுமென்று நிச்சயித்தேன். எனது அறிவு மேம்பட மேம்பட நிலைமை மாறியது. ஒரு விவாதத்தில் அறிவு இல்லாதவன் அறிவாளியைத் தோற்கடிக்க முடியாது. இயல்பாகவே அறிவுள்ளவன், சொந்த விஷயங்களில் கூட தன் கருத்தைக் கூறும்போது திறமையாக விவாதிக்க முடியும். ஆனால் அவனும் நிறைய படித்து நிரம்ப அறிவுள்ள ஒருவனை மிஞ்ச முடியாது.

நீங்கள் நிறைய படித்து, மற்றவர்களைவிட இரண்டு மூன்று மடங்கு அதிக அறிவு பெற்று இருந்தால், நீங்கள் பெரிய மேதை என்று கருதியிருப்பவரைவிட அதிகம் சாதிக்க முடியும். இது

எவ்வளவு தூரம் உண்மை என்பதையும், நல்ல ஒழுங்கும் முயற்சியும் இருந்தால் இதை சாதிக்க முடியும் என்பதையும் கண்டு வியப்படைவீர்கள்.

முக்கிய விஷயங்களில் நல்ல விவரம் இருந்தால் அறிவாளி ஆகிவிடலரம் என்று நம்மில் சிலர் தவறாக நினைக்கிறார்கள். உண்மையில் அறிவுதான் நமக்கு சக்தி அளிக்கிறது.

4.5

காலமே பணம், பணமே காலம்

ஒவ்வொருவருக்கும் ஒரு நாளில் ஒரே அளவு நேரமே உள்ளது

நான் கண்டுபிடித்த ஆழ்ந்த பொருள் கொண்ட இன்னொரு உண்மை, பெஞ்சமின் பிராங்ளின் தமது பூவர் ரிச்சர்ட்ஸ் அல்மனாக் என்ற புத்தகத்தில் குறிப்பிடும் 'காலமே பணம்' என்பதாகும்.

நமக்கெல்லாம் ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரமே தரப்பட்டுள்ளது. ஒரு வாழ்நாளில் சுமார் இருபதாயிரம் நாட்கள். எவ்வளவு பெரிய ஆளாக, எப்படிப்பட்டவராக இருந்தாலும் இதை மாற்றிவிட முடியாது. வாழ்நாளைப் பொறுத்த அளவில் எல்லோரும் சமம்தான். வெற்றி பெறுகிறோமோ இல்லையோ, ஒரு நாளைக்கு 24 மணி நேரம்தான் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. இதை நாம் நமது வெற்றிக்கோ தோல்விக்கோ பயன்படுத்திக் கொள்ளலாம். வெற்றி பெற்றவருக்கு ஒரு நாளைக்கு நூறு மணி நேரமும் மற்றவர்களுக்கு இருபத்து நான்கு மணி நேரமும் தரப்படவில்லை.

சமம் என்பது திறமையில் அல்ல, நேரத்தில் மட்டும்தான். பெரிய அளவில் சாதிக்கிறோமோ இல்லையோ, நமது வாழ்நாள் எண்பது அல்லது தொண்ணூறு வருடங்கள்தான்.

அந்த நாட்களை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதுதான் நமது சாதனை.

இளமைப் பருவத்திலேயே இதை உங்கள் வாழ்க்கையோடு இணைத்துக் கொள்வது மிகவும் எளிது, இது வியாபாரிகளுக்கும் பொருந்தும். இந்த இருபத்து நான்கு மணி நேரத்தை சிலர் பெரிய அதிகாரிகள் ஆகவும், சிலர் வெறும் அலுவலக

ஊழியர்கள் ஆகவும் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

நாம் நமது நேரத்தை எப்படி செலவிடவேண்டும் என்று கடவுள் வானத்திலிருந்து கட்டளை இடுவதில்லை. நேரத்தை வீணாக்காதே, கடினமாக உழை, நன்றாகப் படி என்று கடவுள் கூறுவதில்லை. அவர் நமக்கு ஒரு நாளைக்கு 24 மணி நேரத்தைத் தந்திருக்கறார், அவ்வளவுதான். கூட்டவும் இல்லை, குறைக்கவும் இல்லை. இதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதில்தான் நம் பொறுப்பு இருக்கிறது.

முடிவாக, ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு மணித் துளியையும் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்வதுதான் வாழ்க்கை. அப்படிச் செய்கையில் நாம் வெற்றி பெற்றவர்களாகி விடுகிறோம்.

வெற்றி அடைய விடாமுயற்சி வேண்டும்

வெற்றியை அடைவதற்கான மற்றொரு முக்கியமான வழி விடாமுயற்சி. அசாதாரண திறமைகள் பல இருந்த போதிலும், விடாமுயற்சி இன்மையால் வெற்றிக்கோட்டை தவறவிட்டவர்கள் உண்டு. சூதாட்டத்தில் வேண்டுமானால் இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் பெரும் பணத்தை சம்பாதிக்கமுடியும். ஆனால் சூதாட்ட விடுதிகள், குதிரை ரேஸ், பைக் பந்தயம், லாட்டரிச் சீட்டு போன்றவற்றில் தொடர்ச்சியாக பணம் ஈட்டுவதென்பது இயலாத காரியம்.

தோல்வியடைந்தவர்கள் பலரிடமும் விடா முயற்சி பற்றாக் குறையாக இருப்பதை கவனித்திருக்கிறேன். வாய்ப்புகளால் ஆசிர்வதிக்கப்பட்ட புத்திசாலிகளில் பலரும், தமது வாழ்க்கையில் பெரும் சாதனைகள் எதுவும் நிகழ்த்தாமல் வெகு சாதாராண வாழ்க்கை வாழ்வதை நாம் பார்த்திருக்கிறோம். இதற்குக் காரணம் காலத்துடன் போட்டி போடும் பொறுமையும் தீவிரமான விடாமுயற்சியும் இல்லாமல் இருப்பதுதான்.

புத்திசாலிகலில் பெரும்பாலானோர் வெகு சீக்கிரத்திலேயே எதையும் கைவிட்டுவிடுகிறார்கள். இதற்குக் காரணம் அவர்களால் வெகு விரைவாக ஒரு முடிவுக்கு வந்து விடுவதுதான். தங்கள் புத்திசாலித்தனத்தை சிறந்த ஒரு முடிவெடுப்பதற்கு பயன்படுத்தாத அவர்களைப் பார்த்து எனக்கு பரிதாபம்தான் தோன்றுகிறது. மட்டுமல்ல அவர்கள் பெரும்பாலும் உப்பு சப்பற்ற முடிவுகளையே எடுக்கிறார்கள். வைரத்தைத் தேடியலைந்த

அந்த மனிதர்களைப் போலவே நாம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு தாவிக்கொண்டேயிருக்கும் போது, வெற்றியும் நம்மை விட்டு விலகி ஓடுகிறது. நம் காலுக்கு கீழிருக்கும் வைரப் படிவங்களை பொறுமையுடன் தோண்டுவதை விட்டு விட்டு, வேறு வேறு இடங்களில் அவசர அவசரமாகத் தோண்டுவதன் மூலம் வைரத்தைக் கண்டு பிடித்துவிடலாம் என்று நாம் தப்புக் கணக்கு போடுகிறோம்.

புத்திசாலித்தனம் மிகுந்த நம்மில் சிலர் தங்கள் வேலையில் அதிருப்தியடைந்து, பல்வேறு வேலைகளுக்கு தாவிக் கொண்டிருப்பதை நாளும் நாம் பார்த்து வருகிறோம். அவர்கள் தாம் இருக்கும் வேலையிலேயே இன்னும் சற்று நாள் தொடர்ந்தால், அந்தத் துறையில் நிபுணத்துவம் பெற்றவர் களாகி விடுவார்கள். நம்மில் பலரும் வெற்றி வந்து நம் வாசலைத் தட்டும்போது, அதைப் பார்க்காமல் விட்டுவிடுகிறோம். இதற்குக் காராணம் பொறுமையுடன் கூடிய விடாமுயற்சி நம்மிடம் இல்லாமல் இருப்பதுதான். சில நேரங்களில் நமது இயலாமைக்கு நாம் நம்மைச் சுற்றி இருப்பவர்களை குற்றம் சாட்டுகிறோம். அவர்கள் மீது கோபம் கொள்கிறோம். இது நாம் எத்தனைதான் திறமைசாலியாக இருந்தாலும் நம்மை வெற்றியிடமிருந்து விலகிப்போக வைத்துவிடுகிறது.

எனவே நாம் நமது மனதை, நமது கட்டுப்பாட்டுக்குள் வைக்கும் திறன் பெற்றவர்களாக இருக்க வேண்டும். இதை சாதிப்பது சிரமமாகத் தோன்றினால், வாழ்க்கையின் மிக முக்கியமான மதிப்பீடுகளில் ஒன்றை நாம் இழக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே “காலமே பணம்” என்னும் அடிப்படை உண்மையை நீங்கள் அனைவருமே தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். என்னுடைய இளமைக் காலத்தில் நான் சாதித்த சின்னஞ்சிறு வெற்றிகளின் அடிப்படை இதுவே.

பணம் நேரத்தை மிச்சம் பிடிக்கும்

கல்லூரியில் படிக்கும்போது ‘பணமே காலம்’ என்று படித்திருந்தேன். இது ‘காலமே பணம்’ என்பதிலிருந்து மாறியது. இதன் பொருள், பணத்தால் உங்களுக்கு நேரத்தை வாங்க முடியும் என்பதுதான். காலத்தை எப்படிப் பயன்படுத்துவது என்பதில் பணம் முக்கிய பங்கு வகிக்கிறது. அத்துடன்

வெற்றியையும் துரிதப்படுத்துகிறது.

ஒரு முதலாளிக்கு இது மிகவும் முக்கியமானது. முதலாளித்துவம் என்பது பணத்தில் கவனம் வைப்பதுதான். நிறைய பேர் ஆயிரம் டாலர்களை வெவ்வேறு விஷயங்களில் தனித்தனியாக செலவிடும்போது ஆயிரம் டாலர் என்பது அதன் முக்கியத்தை இழந்து விடுகிறது. ஆனால் அதை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஒரு பெருந் தொகையாக, பத்து மில்லியன் அல்லது நூறு மில்லியன் என்று ஆக்கினால் அதை வைத்துக்கொண்டு என்னவெல்லாம் சாதிக்கலாம் என்று எண்ணிப் பாருங்கள். ஒரு பொதுக் காரியத்துக்காக பொருளை சேர்ப்பது மிகப் பெரிய காரியத்தை சாதிக்க முடியும். மதிப்பு மிக்க பொருட்கள் புதிதாக செய்ய முடியும். சுருக்கமாக இதுதான் முதலாளித்துவம் என்று கூறலாம்.

கம்யூனிஸ தத்துவத்தை நான் விமர்சிப்பதன் காரணம் கம்யூனிஸ பொதுவுடமை என்பது எல்லோருக்கும் சமமாகச் சொத்தை பகிர்ந்தளிப்பது. உதாரணமாக ஜப்பானின் குடியரசு கட்சி பூகம்பத்தில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ஒரே மாதிரி பணத்தைப் பங்கிட்டுக் கொடுத்தது. அவர்களின் திட்டம் என்ன என்பதைப் புரிந்து கொள்வது சிரமமல்ல. ஒரு சோஷலிச அரசு அவ்விதம்தான் செய்யும். ஆனால் இவ்வாறு பணத்தைப் பகிர்ந்தளிப்பது அந்தப் பணத்தின் மதிப்பை அதிகரிப்பதில்லை. இதற்குப் பதில் அந்த பணங்களை எல்லாம் ஒன்றிணைத்து ஒரு பெரும் தொகையாக நல்லதொரு காரியத்துக்குப் பயன்படுத்தினால் மிகப் பெரிதாக ஏதாவது ஒன்றை சாதித்திருக்கலாம். குடியரசு மற்றும் முதலாளித்துவ நாடுகள் முன்னேறுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

தனி நபர்களுக்கும் இது பொருந்தும். வாழ்க்கையில் பெரும் வெற்றி அடையாதவர்களும் கம்யூனிஸ தத்துவத்தைக் கடைபிடிப்பவர்களுமே இதன் ஆழ்ந்த உண்மையை உணராதவர்கள். நிறையபேர் இந்த பொறியில் விழுந்து விடுகிறார்கள் என்பது ஒரு துரதிர்ஷ்டமே. உதாரணமாக, உங்களிடம் பணம் நிறைய இருந்தால் நிறைய புத்தகங்கள் வாங்கலாம். இன்னும் அதிகம் பணம் இருந்தால் ஒரு பெரிய வீட்டை வாங்கி நிறைய புத்தகங்களை சேமிக்க முடியும். பணம் இருந்தால் பயணதின்போது விரைவாக செல்லலாம். ஒரு காரில் அல்லது புல்லட் ரயிலில் அல்லது விமானத்தில் பயணிக்கலாம்.

எனது மாணவ பருவத்தில் நான் சிபா துறைமுகத்திலிருந்து

எனது வீட்டுக்கு படகில் பயணித்தேன். செலவு மிகக் குறைவு. ஒரு புல்லட் ரயிலின் டிக்கட்டில் அரை அல்லது கால் பங்குதான். சிபாவிலிருந்து என் வீடு இருக்கும் டோகுஷிமாவுக்கு படகில் செல்ல ஒரு நாள் பிடிக்கும். அந்த நேரத்தை நான் படிப்பதில் செலவிடுவேன். வெகு நாட்களுக்குப் பிறகே புல்லட் ரயிலில் பயணம் செய்யத் தொடங்கினேன். கல்லூரி நாட்களில் நான் விமானத்தில் பயணம் சென்றதே இல்லை. மாணவர்களுக்கு டிக்கெட் சலுகை உண்டு. எனவே சில மாணவர்கள் விமானத்தில் செல்வார்கள். ஆனால் நான் சென்றதில்லை. நேரத்தை சேமிப்பதில் பணம் பெருமளவில் பங்கு வகிக்கிறது என்பது அந்த சிறு பிராயத்திலேயே நான் பெற்ற, என் ஞானத் தேடலின் ஒரு சிறு அம்சம்.

4.6

சிரமமான பிரச்சனைகளை சமாளிக்க அதன் சிறு பிரிவுகளை பயன்படுத்துங்கள்

எந்த பிரமாண்டமான கரடியும் மலையைவிட பெரிதல்ல

நாம் இளைஞர்களாக இருந்தபோது பிரச்சனைகள் உண்மையில் இருப்பதைவிட மிகப் பெரிதாக காட்சியளித்தன. நமது சிரமங்களும் பிரச்சனைகளும் ஏறமுடியாத மலைகளாகத் தோன்றின. நிறைய இளைஞர்கள் முயற்சி யைக் கைவிட்டுவிட்டார்கள்.

இது போன்ற ஒரு நிலையை நீங்கள் சந்தித்தால் இந்த பழமொழியை நினைத்துக் கொள்ளுங்கள். எந்த பிரமாண்டமான கரடியும் மலையைவிடப் பெரிதல்ல. இது சிறு பிரச்சனைகளைக் கண்டு காரணமின்றி அஞ்சுபவர்களுக்காக ஏற்பட்டது. அவர்கள் சிறு பிரச்னைகளைக் கண்டு அஞ்சி ஓடுபவர்கள்.

பெரிய பிரச்சனைகளை நாம் துண்டு துண்டாக்கிக் கொள்ளலாம். அப்போது அவற்றை சுலபமாக சமாளிக்க முடியும். சின்னச் சின்ன பிரச்சனைகளை முதலில் கவனித்து விட்டால் நமக்கு புதிய பாதை தென்படும். ஓர் உதாரணம். ஒரு பாலத்தில் அதிகபட்சமாக ஐந்து டன் பாரம்தான் கொண்டு செல்லலாம். ஒரு நாளில் அதில் நூற்றுக்கணக்கான டன் பொருட்கள் செல்கின்றன. ஒரு சமயம் ஐந்து டன் மட்டுமே தாங்கக்கூடிய அந்த பாலம் மிகப் பெரும் பாரங்களை ஒரு நாளில் தாங்குகிறது.

வாழ்க்கையும் இப்படித்தான். நூற்றுக்கணக்கான எடை கொண்ட பிரச்சனைகளை ஒரே சமயத்தில் எடுத்துக் கொண்டால் அது நம்மை நசுக்கி விடும். ஆனால் அவற்றை சின்ன சின்ன சுமைகளாகக் கொண்டு சென்றால் பிரச்சனைகளை சமாளித்து விடலாம்.

கைவிட்டு விடாதவர்களே
வெற்றிக் கனியைப் பறிப்பர்

எல்லாப் பிரச்னகளைனயும் ஒரே சமயத்தில் கையாளுவது இயலாத காரியம். ஒரு கட்டத்தில் நாம் திகைத்துப்போய் எல்லாவற்றையும் கைவிட்டு விடுவோம். அதற்குப் பதிலாக அவற்றை சிறுசிறு பகுதிகளாக்கி, ஒரு நாளைக்கு ஒன்றாகக் கவனித்தால் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி மிக சிரமமான பிரச்னையையும் சமாளித்து விடலாம்.

தேர்வுக்குப் படிக்க வேண்டிய பாடங்களில் அளவைக் கண்டு பிரமித்துக் போய்விடுவோம். ஆனால் இந்த வழியைக் கடைபிடித்து ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட அளவில் படித்தால் விரைவாக படித்து முடித்து விடலாம். மற்றவர்கள் ஒரு வருடத்தில் கற்பதை மூன்று அல்லது ஐந்து வருடத்தில் கற்கலாம். நாட்கள் நீண்டு விட்டதே என்று கவலைப்பட வேண்டாம். காரியத்தை சாதித்து விட்டோமே. அதுதான் பெரிது. இடையில் கைவிடாதவர்கள் வெற்றி பெற்றுவிடுகிறார்கள்.

நீங்கள் புத்திசாலியாக இருக்கலாம். ஆனால் இடையில் கைவிட்டுவிட்டால் வெற்றி பெற முடியாது. நீங்கள் சிறந்த அறிவாளியாக இல்லாமலிருக்கலாம். ஆனால் இந்த பிரித்துப் பயன்படுத்தும் பழக்கம் உங்களை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும். நான் கூறியுள்ள அறிவுரைகளும் உதாரணங்களும் உங்களுக்கு மிக பயனுள்ளவையாக அமையும் என்று நம்புகிறேன்.

5

பெருக்குங்கள் உங்கள் துணிச்சலை, நூறு மடங்குக்கும் அதிகமாக

5.1

உங்கள் உள் அழைப்பை அடையாளம் காணுங்கள்

துணிவு: இளமையின் உற்சாகத் துளிகளில் ஒன்று

இந்த அத்தியாயத்தில், நீங்கள் ஒவ்வொருவரும் அதீதமான துணிச்சலுடன் உங்களை நீங்களே எப்படி சக்தியூட்டிக் கொள்ள முடியும் என்பதைப் பற்றி சில கருத்துக்களை உங்களிடம் பகிர்ந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். துணிச்சலை ஒன்று திரட்டுவது மிகப்பெரிய சவால் என்பதை, 1986-இல் ஹேப்பி சயின்ஸ் அமைப்பை நிறுவும் போதே நான் புரிந்துகொண்டேன். அன்று மட்டும் இப்படிப்பட்ட ஒரு புதிய சமய நிறுவனத்தை துவக்கும் துணிச்சல் என்னிடம் இல்லாமலிருந்தால், இப்படி ஒரு அமைப்பு உருவாகியே இருக்காது. எனவே துணிச்சலே ஒன்றை முடிவு செய்யும் முதற்காரணி.

மெத்தப் படித்தவர்களின், குறைந்து வரும் துணிச்சல் பற்றி, என்னுடைய பிரேவ்[10] என்னும் புத்தகத்தில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த புத்தகம், சில வருடங்களுக்கு முன்பு வரை மாணவர்களாக இருந்தவர்களின் கேள்விகளுக்கு நான் அளித்த விடைகளின் தொகுப்பாகும். தங்களுக்கு

சாதக மாகத் தோன்றும் வழிகளை (இந்தச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, எனக்கு அதிகம் சிக்கலைத் தராத) நாடிச் செல்லும் இந்த அறிவு ஜீவி மாணவர்கள் கூட்டத்தில் நானும் ஒருவனாக இருந்திருக்கிறேன். ஒரு அங்கீகாரத்துக்காக நமது விருப்பங்களைப் புறந்தள்ளிவிட்டு, வேறொரு மதிப்பு மிகுந்த இலக்கை அடைவதற்காக நமது பேரார்வத்தையும், மன உறுதியையும் பயன்படுத்த முடிவு செய்வது எத்தனை கஷ்டமான விஷயம் என்பதை நான் என்னுடைய அனுபவத்தின் மூலம் உணர்ந்திருக்கிறேன்.

எப்படியானாலும், துணிச்சல் இளமைப் பருவத்தின் உற்சாகத்துளிகளில் ஒன்று என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. நமக்கு வயது ஏற ஏற, நமது குடும்பம், நிறுவனம், சமூக அந்தஸ்து, கௌரவம், சொத்துக்கள் போன்ற நம்மால் தவிர்க்க முடியாத விஷயங்கள் ஒரு சுமையாய் நம்மை அழுத்துகின்றன. ஆனால் டீன் பருவத்தின் இறுதியிலும், இருபதுகளின் துவக்கத்திலும் இருக்கும் இளைஞர் கூட்டத்துக்கு இந்த சுமைகளின் சுமை வெகு குறைவுதான். இந்த பருவத்தில் அவர்களின் தூய இதயம், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையால் நிரம்பி வழிகிறது.

உங்கள் நோக்கத்தை நிறைவேற்றும் முடிவுகளை எடுப்பதே துணிச்சலின் முதல் கட்டம்

கடந்த இருபது வருடங்களுக்கு முன்னால் ஹேப்பி சயின்ஸ் துவக்கப்பட்டதிலிருந்து, இன்றைய அதன் மகா வளர்ச்சி வரைக்குமான அடிப்படைக் காரணம் உறுதி மிக்க சுவடுகள்தான். வாழ்க்கை என்பது ஒரு தொடர் போராட்டம். துணிச்சலுடன் எழுந்து, நடக்க ஆரம்பிப்பது வரையில் நம்மால் எதையுமே நிறைவேற்ற முடியாது. அது எப்படிப்பட்ட இலக்காக இருந்தாலும் சரி. துவக்கத்தில் எதிர்ப்புகள் எதிரிடுவது சகஜம்தான்.

இப்போது ஹேப்பி சயின்ஸ் அமைப்பில் ஏராளமான தொண்டர்கள். ஆனால் துவக்கத்தில், நான் ஆன்மிக விழிப்புணர்வு அடைந்தபோது, எனக்கு ஆதரவளிக்க எவருமே இல்லை. என்னுடைய குடும்பம் கூட என்னை நம்ப சிரமப்பட்டது. சொல்லப்போனால் என்னையே நான் சந்தேகப்பட்டேன். வழக்கத்துக்கு மாறான இந்த அழைப்புதான் என்னுடைய வாழ்க்கையின் நோக்கம் என்பது புரியாமல், என் மனம் அலைபாய்ந்தது. என்னுடைய இருபதுகள் முழுமையும் இதை ஏற்றுக்கொள்வதற்கான நான் வலியுடன் போராடினேன்.

டோக்கியோ பல்கலைக்கழகத்தில் சட்டக்கல்வி முடித்துவிட்டு, அப்போதுதான் ஒரு வணிக நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்திருந்தேன். தொடர்ந்து நியூயார்க் அலுவலகத்துக்கு தனிச்சிறப்பு மிகுந்த ஒரு பணியானாக நான் இட மாற்றம் செய்யப்பட்டேன். உண்மைதான், பதிற்றாண்டுகளில் ஒருவருக்கு கிடைக்கும் அபூர்வ வாய்ப்பு அது. இந்த கால கட்டத்தில்தான்,

எந்தவிதமான சமயச் சார்பும் இல்லாத என்னுடைய வாழ்க்கையில், விண்ணகத்தின் மேன்மை பொருந்திய தூய ஆவிகளின் வருகை நிகழ்ந்தது; அவை தமது செய்தியுடன் தொடர்ந்து என்னை அணுக ஆரம்பித்தன. இறுதியாக ஒரு நாள் அவை என்னிடம் கூறின:“எங்கள் வார்த்தைகளில் நம்பிக்கை கொள். எழுந்து நில். உனது நோக்கத்தைத் துவக்கு, தன்னந்தனியனாக.” என்னுடைய இடத்தில் நீங்கள் இருந்திருந்தால், நீங்கள் அதை நம்பியிருப்பீர்களா? ஒரு வளமான எதிர்காலத்துக்கு உறுதியளிக்கும் வேலையை உதறிவிட்டு, உங்களையே மையமிட்ட ஒரு புதிய தளத்துக்குள் காலடி எடுத்து வைக்க நீங்கள் முன் வந்திருப்பீர்களா?

எனது முப்பதாவது வயதில், இருந்த வேலையையும் உதறிவிட்டு, எந்தவித வருவாய் வாய்ப்பும் இல்லாத என்னுடைய அழைப்புகளை நோக்கி நான் பயணப்பட ஆரம்பித்தேன்; ஏனென்றால், அந்த அழைப்புகளே என்னுடைய வாழ்க்கை என்பதை நான் புரிந்துகொண்டேன். எத்தனை பேர் என்னை நம்புகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவேயில்லை. இதைத்தான் நான் என்னுடைய பி பிரேவ் புத்தகத்தில் எழுதினேன்: உங்கள் குறிக்கோளை, உலகுக்கான உங்கள் கடமையை நிறைவேற்ற நினைக்கும் அந்த கணத்திலேயே, துணிச்சலும் உடன் சேர்ந்தே உருவாகிவிடுகிறது என்று. உங்கள் உள் அழைப்பைக் கண்டடையுங்கள். அதுதான் உங்கள் வாழ்க்கையின் குறிக் கோள் என்று உறுதியாக உங்களுக்குத் தோன்றினால், அந்த அழைப்பைத் தொடர்வது என்னும் மிகத்துணிச்சலான முதல் முடிவை எடுப்பதில் எந்தவித தயக்கமும் வேண்டாம்.

ஒளிமிகுந்த இளம் வாலிபம்

இந்த உலகம் பல்வேறு குணங்கள் கொண்டவர்களால் நிறைந்தது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் ஒருவிதம். வேறுபட்ட குணங்கள்- பண்பு நலன்கள், வலிமை- பலவீனம், விருப்பம்-விருப்பமின்மை என்று ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாதை. ஆனாலும் பேருணர்ச்சி மிக்க ஒரு குரல் உங்கள் ஆழ் மனதிலிருந்து மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டே இருந்தால், புரிந்து கொள்ளுங்கள். அதுதான் உங்கள் வாழ்வின் குறிக்கோள் பற்றிய உள் அழைப்பு என்று.

குறிக்கோளை நோக்கிய உங்கள் வாழ்க்கைப் பயணத்தில், என்றாவது ஒரு நாள் மலரும் பூக்களுக்கான விதைகள் நெடுங்காலங்களுக்கு முன்பே தூவப்பட்டுவிட்டன, உங்கள் மனதில். உள் அழைப்பை கண்டறியும் நமது தேடல், இருபதில் துவங்கி, வயதுக்கு வரும் பருவத்தின் துவக்கம் வரை தொடர்கிறது. நமது ஒளியூட்டத்தின் ஒரு கட்டமாக, நமது பிறவி நோக்கம், வாழ்க்கையில் நாம் எதை சாதிக்கப் போகிறோம், வாழ்க்கையை நாம் எவ்வாறு நிறைவு செய்யப்போகிறோம் போன்றவற்றை கண்டுபிடிப்பது, வாழ்க்கையின் இக்காலகட்ட இலக்குகளில் ஒன்றாகும். இக்கேள்விகளை, நாம் ஒவ்வொருவரும் நமக்குள்ளேயே கேட்டுக்கொண்டு, அதற்கான விடையைத் தேடுவது அவசியமாகும்.

ஆனால் இவை அனைத்துக்கும் மேலாக, உண்மையிலேயே நீங்கள் யார் என்பதைப் பற்றி நீங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். உங்களுடைய திறன்கள், உங்கள் இயல்பு, உங்கள் பண்பு நலன்கள், கடந்த இருபது வருட உங்கள் வாழ்க்கை, அந்த வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்த விதம் போன்றவற்றில் நிச்சயமாக இது பிரதிபலித்து நிற்கும். உங்களுடைய குறிக்கோள் மற்றும் உள் அழைப்பை கண்டுபிடிக்க இந்த ஆழ் சிந்தனை உங்களுக்கு உதவும்.

ஒளியூட்டம் பெறுவது மனித குலத்தின் அடிப்படைத் தேவை, மனிதர்கள் எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும். நம்மில் பலரும் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறோம். சமயத் தலைவர்கள் மட்டுமே ஒளியூட்டம் பெற முடியும் என்று. ஆனால் இது உண்மையல்ல. தனித்துவம் நிறைந்த நமது வாழ்க்கைப் பயணத்தில் நம் ஒவ்வொருவருக்குமே இது அவசியம் தேவை; மட்டுமல்ல, நமக்கும் இது வாய்க்கப் பெறும். இங்கே ஒரு கேள்வி பிறக்கிறது. ஒளியூட்டம் பெற்றவர் என்றால் யார்? விழிப்புணர்வு அடைந்தவர்கள் அனைவருமே ஒளியூட்டம் பெற்றவர்கள்தான்.

எனவே உங்கள் அனைவரிடமும் ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்கிறேன்: “விழிப்புணர்வு கொள்ளுங்கள்! விழிப்புணர்வு பெற்ற மனிதனாக உரு மாறுங்கள்!” செதிள்கள் உங்கள் கண்களை மூடியிருந்தால், அவற்றைத் துடைத்தெறிந்து விட்டு, உங்கள் உண்மையான கண்களால் இந்த உலகைப் பாருங்கள். சமூகச் சட்டங்களும், அடுத்தவர் கருத்துக்களும் பனிமூட்டமாய் உங்கள் பார்வையை மறைக்க

அனுமதிக்காதீர்கள். உங்கள் சுய பார்வையால், வாழ்க்கையில், உங்களுக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கண்டுபிடிக்க முயலுங்கள். இந்த சுய கண்டடைதல்தான் ஒரு மனிதனை விழிப்புணர்வுடையவனாக்குகிறது. இதுவே இளமையின் வசந்தத்தில் நிற்கும் ஒருவனுக்கு கிடைக்கும் விலை மதிப்பில்லா ஒளியூட்டம். அகண்ட பேரொளியைக் காணும் நமது பயணத்தின் முதல் கட்டம் இது.

10 உறுப்பினர்களின் உள் சுற்றுக்காக பி பிரேவ் என்பதை ஹேப்பி சயின்ஸ் வெளியிட்டு வருகிறது.

5.2

சவால்களை சந்தியுங்கள். தோல்விக்கு பயப்படாதீர்கள்

தோல்விகளும், பின்னடைவும் இல்லாத வாழ்க்கையை ஒருபோதும் விரும்பாதீர்கள்

நமது வாழ்க்கைப் பயணத்தில் எதிர்பாராத பாதைகளையும், பல தரப்பட்ட சாலைகளையும் நாம் சந்தித்தாக வேண்டும். இந்தச் சாலைகளில் பயணிக்கும்போது, பின்னடைவும் தோல்வியும் இல்லாத ஒரு வாழ்க்கையை ஒருபோதும் நாம் தேடக்கூடாது. முழு வெற்றி நிறைந்த, தவறுகள் இல்லாத, பின்னடைவுகள் இல்லாத, போராட்டங்கள் இல்லாத, பகைமை இல்லாத ஒரு வாழ்க்கையை ஒருபோதும்- ஒரு வினாடி நேரம் கூட நாம் கற்பனை செய்து பார்க்கக் கூடாது. உங்கள் இளமையை ஆராதியுங்கள்; அதே வேளையில், தங்கள் வாழ்க்கை முழுவதுமே தோல்விகளைத் தவிர்த்து வாழப் பழகிய முதியவர்களைப் போல ஆகிவிடாதீர்கள். நீங்கள் ஒரு இளைஞராக இருந்தால் சவால்களை சந்திக்கப் பழகுங்கள். தினந்தோறும் சிக்கல் மிகுந்த புதிய சவால்களை கண்டடையுங்கள். அவற்றை வெற்றி கொள்ள உங்களால் என்ன செய்யமுடியும் என்று சிந்தியுங்கள். அது இந்த சமூகத்தின் சட்டதிட்டங்களுக்கு எதிராக இருந்தாலும், தொடர்ந்து முயலுங்கள். கைவிடா முயற்சியே இங்கு முக்கியம்.

தோல்விகளைக் கண்டு பயப்படாதீர்கள். துணிச்சல் மிக்க செயல்களுக்கு எதிரான மிகப்பெரிய தடைக்கல், தோல்வி பயம்தான். எனவே, உண்மையிலேயே நாம் பயப்பட வேண்டியது, பயத்தைப் பற்றிய பயத்துக்கு மட்டும்தான். பயம், பாதுகாப்பற்ற உணர்வு போன்றவை உங்கள் மனதுக் குள் நுழைந்துவிடாமல் எச்சரிக்கையாக இருங்கள்; முழு வலிமையுடன் அவற்றுடன் போராடுங்கள். பெரும்பாலான நமது கவலைகள், நமது அனுபவக்குறைவு மற்றும் நமக்கு முன்னால் என்ன

காத்திருக்கிறது போன்றவற்றைப் பற்றிய நமது அறியாமையின் வெளிப்பாடுகள்தான்.

நமது பயத்தை வெற்றி கொள்வது எப்படி?

நமது பயத்தை வெல்லும் ஒரே சிறந்த வழி, நாம் எதைக் கண்டு பயப்படுகிறோமோ, அதை நேரடியாக சந்திக்க நம்மை தயார்படுத்திக்கொள்வதுதான். நாம் அவற்றுடன் போராடத் துணிந்துவிட்ட அடுத்த கணமே, பயங்கள் நம்மை விட்டு ஓடி மறைந்து விடுகின்றன. அந்த போராட்டத்தின் முடிவு வெற்றியோ அல்லது தோல்வியோ எதுவாக இருந்தாலும், பயத்தை நீங்கள் எதிர்கொள்ளத் தயாராகும் அந்த கணத்திலேயே பயத்தின் அடிப்படை இயல்புகள் மாயமாய் மறைந்து போகின்றன; பிறகு அங்கு விலைமதிப்பில்லா அனுபவங்கள் மட்டுமே எஞ்சி நிற்கிறது.

இந்த அனுபவங்களில் முதன்மையானது, நமது பயத்தை நாம் வெற்றி கொள்வோம் என்பதுதான். இதிலிருந்து நாம் அறுவடை செய்யும் இரண்டாவது முக்கிய அம்சம்: நம்மிடம் இருந்த கடைசிச் சொட்டு மெய்யறிவையும், வலிமை மற்றும் போராட்ட உணர்வுகளையும் விலையாகக் கொடுத்த போதிலும், ஒரு பிரமாண்ட சவாலை தோல்வியுடன் எதிர்கொண்ட சிதைந்த உணர்வு. நமது சவாலில் தோல்வியைத் தழுவினாலும், இந்த அனுபவங்கள் ஒரு போதுமே நமக்கு எதிராகச் செயல்படுவதில்லை. நமது பிற்கால வாழ்க்கையில் நாம் சந்திக்கவிருக்கும் பல்வேறு போராட்டங்களின் வழியாக இவை நம்மைத் தொடர்ந்து வழி நடத்தும். விவரிக்கமுடியாத உணர்வுகளால் நிரம்பிய தேறுதலுக்கு அப்பாற்பட்ட கீறல்கள், துயரம் மிகுந்த உணர்ச்சிப் பிழிவுகள், நமது அறியாமை மீதான சுய பச்சாதாபம் ஆகியவை, நமது இளமைப் பருவத்தில் நாம் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் சந்தித்த சிதைந்த அனுபவங்களின் பிழிவுகளே.

இந்த சிதைந்த உணர்வுகளே, நம்மை முன்னோக்கிச் செலுத்தும் வளர்ச்சிக்கான பெருந் தாகம். கணக்கில் அடங்கா தோல்விகள் மூலம் இந்த உணர்வுகளை வெற்றி கொள்ளும்போது, வளர் இளம் பருவத்தை நோக்கி நாம் மெதுவாக முதிர்ச்சியடைய ஆரம்பிக்கிறோம். உங்கள் இருபதுகளில் நீங்கள் செய்த தவறுகளை பிற்பாடு ஒரு நாள் நினைத்துப் பார்க்கும்போது,

அன்று நீங்கள் செய்த தவறுகள் அனைத்தும் மிகச் சிறிதாகவே தோன்றும்; நீங்கள் அவற்றை விலைமதிப்பில்லா வாழ்க்கைப் பாடங்களை உங்களுக்குக் கற்றுத்தந்த அர்த்தமுள்ள அனுபங்களாகவே உணர்வீர்கள். அப்போதுதான் உங்களுக்குப் புரியும் நீங்கள் முதிர்ச்சியடைந்து விட்டீர்கள் என்று. அந்த நிலையில்தான், மிகச் சரியான பாதையில் மக்கள் கூட்டத்தை தலைமை தாங்கி அழைத்துச் செல்ல நீங்கள் தகுதி பெற்றவர்கள் ஆவீர்கள். இதக்காக, வாழ்க்கையில் உங்களால் முடிந்த அளவுக்கு நீங்கள் பல்வேறு சவால்களை எதிர்கொண்டாக வேண்டும்.

5.3

திட்டமிடுங்கள் ஒரு புரொஃபஷனல் ஆக மாறுவதற்கு

நீங்கள் ஒரு புரொஃபஷனல் ஆகவேண்டுமா. வாரி வழங்குங்கள் உங்களிடம் இருப்பதை, தினந்தோறும்

ஹேப்பி சயின்ஸ் அமைப்பைத் தொடங்கியதிலிருந்து உள்முக சவால்கள் மட்டுமல்லாது, தினந்தோறும் வெவ்வேறு வகையான புத்தம் புது சவால்களும், போராட்டங்களும் என்னைத் தொடர்ந்து வருகின்றன. உதாரணமாக, 1986, நவம்பர் 23 ஆம் தேதி, வெறும் தொண்ணூறு பேர் அடங்கிய ஒரு கூட்டத்தில் என்னுடைய முதல் சொற்பொழிவு நிகழ்ந்தது. அடுத்தது 1987, மார்ச் எட்டாம் தேதி, உஷிகோம் பொது அரங்கில் 400 பேர் நிரம்பிய ஒரு கூட்டத்தில் ‘தி பிரின்சிபல் ஆஃப் ஹேப்பினஸ்’ என்னும் தலைப்பில் நான் உரையாற்றினேன். தொடர்ந்து அந்த வருடத்திலேயே, மே 31 ஆம் தேதி, சியோதா பொது அரங்கில் ‘தி பிரின்சிபிள் ஆஃப் லவ்’ என்னும் தலைப்பில் ஒரு பொதுவுரை வழங்கினேன். இந்த கூட்டத்திற்கு வந்திருந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் மேல். அதன்பிறகு எனது பேச்சைக் கேட்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போனது. ஒரு வருடத்துக்குப்பின், 1988 இல், இரண்டாயிரம் பேர் அமரக்கூடிய ஹிலீயா பொது அரங்கில் நான் உரை நிகழ்த்தினேன். 1989 இல் ரொகோகு சுமோ அரங்கில் நான் நிகழ்த்திய அந்த உரையைக்கேட்க 8,000 பேர் குழுமியிருந்தார்கள். அடுத்த வருடம், 1990 இல் சிபா மாகாணத்தில் உள்ள மகுஹாரி மெஸ்ஸே சர்வதேச கன்வென்ஷன் அரங்கில் பல்வேறு உரைகள் வழங்கினேன். இந்த உரைகளை கேட்க வந்திருந்தவர்களின் எண்ணிக்கை பன்னிரெண்டாயிராத்திலிருந்து பதினெட்டாயிரம் வரை. 1991 இல் டோக்கியோ டோம் அரங்கில் எனது சொற்பொழிவை[11] கேட்க வந்திருந்தவர்கள் சுமார் ஐம்பதாயிரம் பேர். அதன்பின்

டோக்கியோ டோமில் நான் வழங்கிய சொற்பொழிவுகள் நாடெங்கும் ஒளிபரப்பப்பட்டன.

1991 இல் டோக்கியோ டோமில் நான் உரையாற்றும் போது, நான் வெறும் முப்பதுகளின் துவக்கத்தில்தான் இருந்தேன். கால ஓட்டத்தில், நிறுவிய ஐந்து வருடங்களுக்குள்ளாகவே, ஹேப்பி சயின்ஸ் ஒரு மிகப்பெரிய ஆலமரமாக விரிந்து படர்ந்தது. இந்த சாதனை எப்படி நிகழ்ந்தது என்பதற்கான விடை, வெகு எளிமையானாது. எனது ஒவ்வொரு உரையிலும், நான் என்னிடமிருந்த அனைத்தையும் வாரி வழங்கினேன். அக்கறை மிகுந்த இந்த தொடர் சொற்பொழிவுகளே, இந்த புரொஃபஷனலின் இன்றைய உயரம்.

விரிந்து பரந்த பல்வேறு துறைகளிலிருந்து நீங்கள் உங்களுக்கான பணிப் பாதையைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் எனக்குத் தெரியும், உங்களுக்கான சரியான பணியை எவ்வாறு தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றி உங்களுக்குள் ஏராளமான வினாக்கள் மோதிக்கொண்டிருக்கின்றன என்று. நான் எவ்வாறு வாழப்போகிறேன், எனக்கு ஏற்ற வெற்றிகரமான பணி எது?, எனது வேலையை மிகத் திறமையாகச் செய்வது எப்படி? என்ற உங்கள் இதயத்தின் குரல் எனக்கும் கேட்கிறது.

இந்த கேள்விகள் அனைத்துக்குமான விடை ஒன்றே ஒன்றுதான்: நீங்கள் அடைந்ததையெல்லாம் திருப்பிக் கொடுத்துவிடுங்கள், ஒவ்வொரு நாளும். உங்களிடம் இருக்கும் சிறந்தவற்றையெல்லாம் நீங்கள் வழங்கிக் கொண்டேயிருந்தால் நீங்கள் ஒரு புரொஃபஷனல் ஆவது உறுதி. ஒவ்வொரு நாளும் நீங்கள் எடுத்த முயற்சியின் மொத்த கூட்டுத் தொகை, இலக்கை நோக்கி உங்களை வழி நடத்தும். நீங்கள் எப்படிப்பட்ட வேலையைத் தெரிவு செய்திருந்தாலும் சரி.

நீங்கள் பெற்றதையெல்லாம் திருப்பி வழங்குவது என்றால் என்ன? இது ஜப்பானிய வாள் சண்டைப் பள்ளியில் எடுக்கும் உடற்பயிற்சி அல்ல. இது நிஜ வாளுடன் எதிரியுடன் மோது வது. இங்கே காயம் உறுதி. இந்த உலகின் நிஜப் போராட்டங்களில் வெற்றி பெற்றவர்கள் அனைவருமே நிச்சயம் ஒருநாள், ஒரு புரொஃபஷனலாக மாறுவது உறுதி.

புரொஃபஷனல்கள் இடையூறுகளை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்வதோடு அதை வெற்றியும் கொள்கிறார்கள்

உலகம் பெரும் பின்னடைவைச் சந்தித்து கொண்டிருக்கும் கால கட்டம். 2009 இல் சிலர் சொன்னார்கள், நாம் கடந்த நூறு வருடத்தின் மிக மோசமான நிதிச்சிக்கலில் இருக்கிறோம் என்று. வேறு சிலரோ, நாம் மீண்டுமொரு மாபெரும் பின்னடைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்றார்கள். ஆனால் எனக்கு இதிலெல்லாம் உடன்பாடில்லை. இவையெல்லாமே மக்களின் இரக்கத்தை சம்பாதிக்கவும், அரசின் உதவித்தொயைப் பெறவுமே சொல்லப்படுகின்றன.

நீங்கள் ஒரு உண்மையான புரொஃபஷனல் தொழில் முனைவராக இருக்கும்பட்சத்தில், நிச்சயமாக நீங்கள் போராடித்தான் ஆக வேண்டும். நீங்கள் ஒரு உண்மையான தொழிலதிபராக இருந்தால் இந்தத் தடைகளையெல்லாம் தீரத்துடன் எதிர்த்து போராடவேன்டும். நீங்கள் ஒரு புரொஃபஷனல் வணிகராக இருந்தால், எதிர்வரும் சிக்கல் எத்தனை பெரிதாக இருந்தாலும் அதை உங்கள் முழுத்திறனையும் பயன்படுத்தி எதிர்த்துப் போராடவேண்டும். இந்த உலகிலுள்ள அனைத்து தொழிலகளுமே நஷ்டத்தை சந்திப்பதில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். ஒரு தொழில் பின்னடைவை சந்திக்கிறதென்றால், அதற்கு பொறுப்பற்ற, பலவீனமான நிர்வாகமே காரணம். நீங்கள் ஒரு தலைமை நிர்வாக அதிகாரியாக இருக்கும் பட்சத்தில், அந்தத் தொழிலைக் காப்பாற்றும் பொறுப்பு உங்களைச் சேர்ந்தது. நீங்கள் அன்றுதான் வேலைக்குச் சேர்ந்த ஒரு புதிய பணியாளராக இருந்தாலும், எதிர்வரும் இடையூறுகளை இன்முகத்தோடு ஏற்றுக்கொள்வதோடு, உங்கள் நிறுவனம் சிக்கலில் இருந்து மீண்டெழ உங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும். இடர்களை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், அவற்றை வெற்றி கொள்ளவும் முயல வேண்டும்.

பொருளாதாரத்தின் அடிப்படையே அதன் நிலையற்ற தன்மைதான். காலம் எப்போதுமே நமக்கு சாதகமாகத்தான் இருக்கும். அல்லது நமது தொழில் என்னென்றைக்கும் வளர்ந்து கொண்டேதான் இருக்கும் என்பது போன்ற அதீத கற்பனைக்குள் ஒரு போதும் சிக்கிவிடக்கூடாது. பொரு ளாதாரச் சரிவு என்பது எப்போதுமே நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. மட்டுமல்ல, அதை வெகு எளிதாக யூகித்து விடவும்

முடியும். சிறு சரிவுகள் மூன்றிலிருந்து பத்து வருடங்களுக்கு ஒரு முறை நிகழ்கின்றன. மாபெரும் பின்னடைவு பல பதிற்றாண்டுகளுக்கு ஒரு முறைதான் நிகழும். எனவே, ஒரு புரொஃபஷனல் என்னும் நிலையில், ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் பிரச்சனைகளை வெற்றிகரமாகக் கடந்து செல்ல நாம் தயாராக இருக்கவேண்டும். இதுவே புரொஃபஷனல் ஆவதற்கான ஒரே வழி.

மாபெரும் பொறுப்புகளை ஏற்க உறுதி கொள்ளுங்கள்

ஒரு உண்மையான புரொஃபஷனல் சுமை மிகுந்த பொறுப்புகள் பலவற்றை ஏற்றுக்கொள்வார். நீங்கள் வகிக்கும் பொறுப்புகளின் சுமையே, நீங்கள் எப்படிப்பட்ட புரொஃபஷனல் என்பதைக் காட்டிவிடும். உங்கள் பொறுப்புகளின் வீச்சுக்கு தகுந்தபடிதான் உங்கள் வளர்ச்சியும் அமையும். சுமை மிகுந்த பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்காக நாளுக்கு நாள், வருடத்துக்கு வருடம் நாம் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டேயிருக்க வேண்டும்.

ஒரு மனிதன் ஏற்றுக்கொள்ளும் பொறுப்பின் அளவுதான் அந்த மனிதனின் உயரத்தின் அளவுகோல். புதிய விஷயங்களுடன் தொடர்ந்து போராடிக்கொண்டிருப்பவர்களே, மிகப்பெரும் பொறுப்புகளை சுமக்க முயற்சிக்கிறார்கள். இங்கே மிக முக்கியமானது, ஒவ்வொரு நாளும் நாம் எதிர் கொள்ளும் புதுப்புது சவால்களை நாம் எப்படி எதிர்கொள்கிறோம், பிறர் தடுத்த போதும் எப்படி நமக்குச் சரியானதாகத் தோன்றுவதைச் செய்கிறோம் என்பதுதான்.

நம்மிடம் இருப்பதை தினந்தோறும் வழங்கிக்கொண்டிருப்பதே நம்மை ஒரு புரொஃபஷனலாக மாற்றுகிறது. இதன் மூலம் மிகப்பெரிய பொறுப்புகளை ஏற்றுக்கொள்ளும் வலிமை நம்மை வந்தடைகிறது. இது, அபாயங்களை துணிந்து சந்திக்கும் மனோபாவத்தைப் பொறுத்தது. அபாயங்களை புறக்கணிப்பவர்கள் பெரிய வெற்றிகள் எதையும் சாதிப்பதில்லை. மட்டுமல்ல அவர்கள் பிறரால் மதிக்கப்படுவதுமில்லை. எனவே இடர் மிகுந்த, அபாயகராமான விஷயங்களில் உங்கள் மனதைச் செலுத்துங்கள். விரைவிலேயே நீங்கள் ஒரு மகா மனிதராக உருவாகிக் கொண்டிருப்பதை நீங்களே உணர்வீர்கள்.

11 ரியோ ஒகாவாஅவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு

5.4

உங்கள் துணிச்சலை நூறு மடங்கு பெருக்கிக் கொள்ளுங்கள்

தீர்க்கதரிசனம் படைத்தவராய் இருங்கள் அது நிகழ்வதற்கான வழிகளைப் பாருங்கள்

இதிலிருந்து மீளவே முடியாது என்பது போன்ற நிகழ்வுகள் பலவற்றை நாம் நமது வாழ்க்கையில் சந்திக்க நேரிடும். அதிலும் குறிப்பாக நமது இளமைப்பருவத்தில். நானும் இதுபோன்ற நிகழ்வுகள் பலவற்றை சந்தித்தவன்தான். இடர்மிகுந்த சூழலுக்குள் அகப்பட்டிருப்பதாக புரிந்ததும், உங்களால் ஏன் அந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற முடியவில்லை என்பதற்கான காரணங்களை அடுக்கி, அடுத்தவர்களிம் அனுதாபத்தைப் பெற முயற்சிக்காதீர்கள். சில விஷயங்கள் முதலில் மீளவே முடியாத சிக்கலாகத்தான் தோன்றும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், சற்றே அதிலிருந்து விலகி நின்று, அதன் முழுப் பரிமாணத்தையும் அலசிப் பாருங்கள்; அதற்கான தீர்வை கண்டுபிடியுங்கள். அந்த பிரச்சனையில் இருந்து விடுபடும் வழிகளைக்கண்டுபிடித்ததும், சிக்கலை உடைத்துக்கொண்டு அதிலிருந்து வெளியேறுங்கள்.

இதுதான் பாசிட்டிவ் ஆக இருப்பதன் உண்மையான பொருள். எப்போதுமே விஷயங்களை ஆக்கபூர்வமாக பார்க்கப் பழகுங்கள். சிக்கலைத் தீர்க்கும் பாதைகளைத் தேடுங்கள்.

அதிலிருந்து விடுபடும் வழிகளைக் கண்டுபிடியுங்கள்; அந்த இடரிலிருந்து மீளும் ஒரு புதிய பாதையை உருவாக்குங்கள். இதுவரை நாம் நினைத்தே பார்த்திராத ஒரு புதிய தீர்வை-ஒரு புதிய கருத்தை உருவாக்குங்கள். நம்மால் அதை ஏன் செய்யமுடியவில்லை என்பதற்கான காரணங்கள் உங்கள் கடைசி தேர்வாகவே இருக்கட்டும். இதற்குப் பதிலாக விஷயங்கள் எப்படி நிகழவேண்டும் என்பதைப் பற்றி சிந்தித்து

பாருங்கள். அதிலும் குறிப்பாக நீங்கள் இளைஞராக இருக்கும் பட்சத்தில்.

ஒரு புதிய திட்டத்தைத் துவக்கும்போதெல்லாம், எதிர்ப்புகள் கச்சை கட்டி நிற்பது வாடிக்கை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது படு சிரமம். ஏனென்றால், இதுபோன்ற ஒரு திட்டத்தை நாம் இதற்கு முன்னால் செய்து பார்த்ததே இல்லை என்று பலரும் என்னை எச்சரிப்பார்கள். அடுத்தவர் எதை எதிர்க்கிறார்களோ அதைச் செய்து பார்ப்பது என்பதை நான் ஒரு கொள்கையாகவே கடைபிடிக்கிறேன். ஏனென்றால் அவைதான் வெற்றிவாய்ப்பு மிகுந்த மிகச் சிறந்த கருத்துக்கள். ஒரு குறிப்பிட்ட திட்டம் தோல்வியில்தான் முடியும் என்று பலரும் நம்பும்போது, வெகு சிலரே அதைச் செய்து பார்க்க முன்வருகிறார்கள். அதனால்தான், பிறர் முடியவே முடியாது, மிகச் சிக்கலானது, மிகச் சவாலானது என்று தூக்கி பரணமேல் போட்டுவிட்ட விஷயங்கள் மீது நான் அதீத ஆர்வம் காட்டுகிறேன்.

சமயமும் அரசியலும் கட்டாயம் தேவை, மக்களின் மகிழ்ச்சிக்கு

அயல்நாடுகளிலும், ஜப்பானின் பல்வேறு இடங்களிலும் மேலும் பல கிளைகளைத் துவக்க ஹேப்பி சயின்ஸ் திட்டமிட்டு வருகிறது. 2010 இல் டோச்சிகி மாகாணத்தில் ஒரு துவக்க மற்றும் உயர்நிலைப் பள்ளி அடங்கிய ஹேப்பி சயின்ஸ் அகாடமியைத் துவக்கினோம்.[12] 2016 இல் ஹேப்பி சயின்ஸ் பல்கலைக்கழகம் ஒன்றைத் துவங்க திட்டமிட்டுள்ளோம்.

ஏற்கனவே, 2009 இல் ஹேப்பி சயின்ஸ் ரியலைசேஷன் கட்சியை உருவாக்கியிருந்தேன். இருபது வருடங்களுக்கு முன்னால் ஹேப்பி சயின்ஸ் அமைப்பை உருவாக்கும்போதே, அரசியல் கட்சி ஒன்றை துவங்க வேண்டும் என்பது என்னுடைய விருப்பங்களில் ஒன்றாக இருந்தது. ஆன்மீகத் தளத்தில் இயங்கும் சமயங்கள், ஆன்மாக்கள் தமது பேரானந்த இலக்கை எட்ட வழிகாட்டுகிறது என்பது உண்மைதான். ஆனால் மகிழ்ச்சிக்கு இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. நமது ஆன்மாவுக்கான பேரானந்த பாதையைக் கண்டடையும் முயற்சி, இளைப்பாறும் இடத்தைக் கண்டுபிடித்தல், அமைதியான மனநிலையை அடைதல் போன்றவை மகிழ்ச்சியின் ஒரு பக்கம்.

இந்த உலகின் அன்றாட வாழ்க்கைச் சிக்கலில் நாம் சந்திக்கும் சிக்கல்கள் மற்றும் போராட்டங்கள் போன்றவற்றில் இருந்து நாம் விடுபட, நம்மை நோக்கி நீட்டப்படும் உதவிக்கரங்கள் நமக்கு தரும் ஆனந்தம், இந்த மகிழ்ச்சியின் மற்றொரு பக்கம். சமயம், அரசு என்னும் இந்த இரண்டுக்குமே மகிழ்ச்சியின் இந்த இரண்டாவது தளத்தை உருவாக்கும் பொறுப்பு இருக்கிறது.

அரசாங்கம் பலவீனமாகும்போது, சமயம் களத்தில் இறங்க வேண்டும். என்றாலும் சமயத்துக்கும் ஒரு எல்லை உண்டு. புதிய சட்டங்கள் இயற்றவோ, புதிய திட்டங்களை உருவாக்கி அவற்றை செயல்முறைபடுத்தவோ அதனால் இயலாது. துரதிர்ஷ்டவசமாக, தமது அன்றாட வாழ்க்கையில் அடுத்தவர் உதவியை எதிர்நோக்கியிருக்கும் சாதாரண மக்களின் கண்ணீரை முழுமையாகத் துடைக்க சமயத்தால் இயலாது.

காலங்காலமாக, சமயத்துகென மூன்று முக்கிய நோக்கங்கள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன: வறுமையிலும், நோயிலும் நலிந்து உழல்பவர்களை கரையேற்றுவது, மோதல்களை முடிவுக்கு கொண்டுவருவது. ஆனால் இந்த மூன்றையும் முழுமையாக சமாளிக்க அரசியல் வலிமையும் கட்டாயம் தேவை. அரசியல்வாதிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், சட்டவல்லுனர்கள் போன்றோருக்கு வறுமையைக் குறைத்தல், நோயுற்றவர்களுக்கு உதவுதல், மோதல்களை ஒரு முடிவுக்கு கொண்டுவருதல் ஆகிய பொறுப்புகளும் உண்டு. எனவே சமயத்தையும் அரசியலையும் ஒன்றிலிருந்து ஒன்றை முழுமையாக பிரித்து அகற்றுவது என்பது இயலாத காரியம். இவை இரண்டுமே பிரச்சனைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகுகின்றன. ஆனால் இரண்டின் பொது நோக்கமும் ஒன்றுதான்; மக்களை மகிழ்ச்சி அடைய வைப்பது. எனவேதான், அவையிரண்டும் தமது வலிமையை ஒன்றிணைக்க முயல வேண்டுமே தவிர, இரு வேறு திசைகளிலாக முரண்பட்டு நிற்கக்கூடாது. ஒரு சிறந்த உலகை உருவாக்க இவை இரண்டும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டியது மிக அவசியம்.

சமயத்தலைவர்களையும், அரசியலாளர்களையும் மதித்தால் நாடு வளம் பெறும்

இரண்டாம் உலகப்போர் முடிந்து ஆறு பதிற்றாண்டுகளில் ஜப்பான் இன்று ஒரு வளம் மிகுந்த நாடாக உருமாறியுள்ளது.

என்றாலும் சில முக்கியமான விஷயங்களைப்பற்றி இன்னமும் நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. மதிப்பிற்குரிய சமயத்தையும், சமயத்தலைவர்களையும் மதிக்கத் தவறும் ஒரு நாட்டின் செல்வ வளம் அதிக காலத்துக்கு நீடிக்காது. சமயத் தலைவர்கள் கடவுளின்/புத்தரின் சன்னிதியில் தம் மனதை ஒப்படைத்து, மனித குலத்தை பேரானந்த நிலைக்கு இட்டு செல்ல வழிகாட்டுகிறார்கள். துரதிர்ஷ்டவசமாக, இரண்டாம் உலகப் போருக்குப் ஜப்பானில் சமயத்தலைவர்கள் பலரும் இகழ்ச்சிக்கு ஆளாகின்றார்கள்; மதிப்பிழந்து போய்விட்டார்கள். இது தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இந்த நிலை தொடர்ந்தால் ஜப்பானின் செல்வ வளம் நீர்க்குமிழி போல் உடைந்து சிதறுவதை தவிர்க்க முடியாது. சரியான பாதையைத் தவற விட்டுவிட்டு, சாதாரண உலகியல் இன்பங்களை நாடிச் சென்றால் நம்மால் ஒரு போதுமே வளத்தை ஈட்ட முடியாது. சமயத்தலைவர்களுக்கு மரியாதை செலுத்தத் தவறும் ஒரு நாடு என்றென்றும் செழித்துப் படரமுடியாது. அதைப்போலவே, தனது அரசியலாளர்களை மதிக்காத ஒரு நாடும் செழிப்பை காண்பதில்லை. ஜப்பானிய ஊடகங்கள் நமது அரசியல் தலைவர்களை இழிவுபடுத்தி, கேலிசெய்யும் விமர்சனக்கட்டுரைகளாலும், செய்திகளாலுமே நிரம்பி வழிகின்றன. இப்படிச் செய்வது அவர்களின் உரிமை என்று ஆகிவிட்டது. சொல்லப்போனால் நமது அரசியல் தலைவர்கள் ஒரு நகைச்சுவை பொம்மையாகி விட்டார்கள். கீழ்த்தரமான, பொறாமை கொண்ட, தங்கள் சுய நலத்தையே பெரிதாக நினைக்கும் அரசியல்வாதிகளை நமது தலைவர்களாக தேர்ந்தெடுப்பது உண்மையிலேயே திகைப்பூட்டக் கூடியதுதான். அது என்னையும் மிக ஆழமாக பதறச் செய்கிறது. ஆனால் அதே வேளையில் உயர்ந்த இலட்சியத்துடன் நாட்டை வழிநடத்தும் அரசியல் தலைவர்கள் உண்மையிலேயே நமது மரியாதைக்கு உகந்தவர்கள். எனவேதான் சொல்கிறேன் தங்கள் அரசியல்வாதிகளை மதிக்காத மக்கள் நிறைந்த நாடு ஒரு நாடே அல்ல.

நமது மதிப்புக்கும், மரியாதைக்கும் உரியவர்களையே தலைவர்களாக தேர்ந்தெடுக்கும் காலம் கனிந்துவிட்டது என்று நம்புகிறேன். நல்லதையே செய்யும் ஒரு அரசையும், அரசியல் அமைப்பையும் உருவாக்க நாம் அனைவரும் ஒன்றினைந்து முயற்சிக்க வேண்டும். 2009 இல் ஜப்பானின் லிபரல் டெமாக்ரடிக் கட்சியிலிருந்து, ஜப்பான் டெமாக்ரடிக்கட்சி வரையிலும்

பல்வேறு தலைமை மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த இரண்டுமே ஜப்பானின் மிகப்பெரிய அரசியல் கட்சிகள் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இந்த புதிய நிர்வாகமும் நமது மரியாதைக்கு ஏற்ற விதத்திலான அரசியல் செயல்பாடுகளைச் செய்வதாக எனக்குத் தோன்றவில்லை.

நம் இலக்கை குறித்த விழிப்புணர்வு, நமது துணிச்சலை நூறு மடங்காகப் பெருக்கும்

சமயத்தையும், அரசியலையும் இழிவுபடுத்தி, அவற்றை அலட்சியம் செய்யும் ஒரு மனோநிலையை ஒரு போதுமே உருவாக்கிக் கொள்ளாதீர்கள். மட்டுமல்ல, இதுபோன்ற கீழ்த்தரமான எண்ணங்களை வெளிப்படுத்தியும் விடாதீர்கள். இந்த உலகம் மேலும் பல உயரங்களை அடைவதற்காக, தமது வாழ்க்கையை மனம் உவந்து அர்ப்பணித்திருக்கும் சமயத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் ஏராளமானோர் இருக்கிறார்கள், இங்கு. இவர்கள் அனைவருமே தத்தமது தளங்களில் மரியாதை பெற்ற உண்மையான புரொஃபஷனல்கள்.

இன்றைய இளம் தலைமுறையின் முடிவுகள், அதிரடிச் செயல்பாடுகள் ஆகியவற்றை நினைத்து நான் பெருமிதப்படுகிறேன். நமது வீரம், கொள்கை முடிவுகள், செயல் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகும் செழிப்பு மிக்க வளத்தையே, நமது இன்றைய உலகம் மதிப்பு மிக்கதாகக் கருதுகிறது. இந்த ஆக்ககூறுகளின் அடிப்படையிலேயே நமது கனவுக்கான எதிர்காலத்தை நம்மால் உருவாக்க முடியும்.

ஹேப்பி சயின்ஸின் முக்கிய நோக்கங்களில் ஒன்று இந்த உலகுக்கு சக்தியூட்டுதல். இந்த ஆக்கச் செயலுக்கு ஹேப்பினஸ் ரியலைசேஷன் கட்சியின் அரசியல் செயல்பாடு ஒரு முக்கிய கருவியாக பயன்படுகிறது. இந்தப் பெரு முயற்சியில் எமது அரசியல் கட்சியின் பணிகள் பெரிதும் தேவை என்றே நான் கருதுகிறேன். வெகுவிரைவிலேயே, எங்கள் கட்சி அயல்நாடுகளிலும் கிளை பரப்புவதோடு, இந்த உலகெங்கும் ஒரு அசாதாரணமான அரசியல் அலையை நிச்சயமாக உருவாக்கும் என்று நான் நம்புகிறேன். இன்றைய இளைஞர்கள் துணிவு படைத்தவர்களாக விளங்க வேண்டும். அவர்கள் அர்ப்பணிப்பு தாகம் மிகுந்த ஒரு சமய இயக்கத்துடன் உணர்ச்சிப் பெருக்குடன் கைகோக்க வேண்டும். அரசியலை

மேம்படுத்த இந்த இயக்கத்தில் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்; எங்கள் குறிக்கோளை நிஜமாக்க உதவிக்கரம் நீட்ட வேண்டும்.

உங்கள் உடல் வலிமையை உங்களால் நூறு மடங்கு அதிகரிக்க முடியாது. உங்கள் புத்திசாலித்தனத்தையும் நூறு மடங்கு அதிகரிப்பது சிரமம்தான். உங்கள் ஆயுளை நூறு மடங்காக அதிகரிப்பது சாத்தியமே இல்லை. ஆனால் ஒன்றை நான் உறுதியாகச் சொல்ல முடியும்; உங்கள் துணிச்சலை, அது இப்போது இருப்பதை விடவும் நூறு மடங்கு அதிகமான வலிமையுடன் திகழச் செய்ய முடியும். நமது உண்மையான குறிக்கோளை நோக்கி நாம் விழிப்புணர்வு பெறும்போது, நம்முடைய துணிச்சல் வியப்பூட்டும் அளவுக்கு அதிகரிக்கிறது.

நம்மை நிலைகுலையச் செய்யும் இடர்களையும், சிரமங்களையும் பல நூறு மடங்கு வலிமையுடன் நாம் எதிர்த்துப் போராடவேண்டும். அப்போது உங்களுக்கான பாதை நிச்சயமாகத் திறக்கும். அடுத்தவர்களின் முதுகுக்குப் பின்னால் பேசும், எரிச்சலூட்டும் கோழையாக ஒரு போதும் மாறிவிடாதீர்கள். துணிச்சலுடன் இருங்கள். இந்த உலகில் உங்களுக்கான பொறுப்பை ஆர்வத்துடன் ஏற்றுக் கொள்ளுங்கள். இதுவே உங்கள் அனைவருக்கும் நான் வழங்கும் செய்தி.

12 கன்சாய் ஹேப்பி சயின்ஸ் அகாதமி ஷிகா மாகாணத்தில் 2013 இல் துவங்கப்பட்டது

பின்னுரை

எந்த ஒரு செயலுக்குமே முதல் அடி எடுத்து வைப்பது தான் மிகக் முக்கியமானது. அடுத்த கட்டம் எடுத்து வைத்த அடியைத் தொடர்ந்து முன்னோக்கிச் செல்வது. இந்த பயணத்தில் படைப்பாற்றலும், சுயதிறனும் மிக அவசியமானவை. "பெரிதாகவே சிந்தியுங்கள்" என்னும் சொல், வாழ்கையின் இக்கட்டான பல்வேறு தருணங்களிலிருந்து என்னை மீட்டெடுத்திருக்கிறது. அமெரிக்காவில் நடைபெற்ற 'பூட் கேம்ப்' இல் தான் முதன் முதலாக நான் இந்த சொல்லை பயன்படுத்த ஆரம்பித்தேன். இது எனது இளமைப்பருவத்துக்கு உயிர்பூட்டிய மிக முக்கிய காரணி.

'நேராக சிந்தியுங்கள்', 'துணிச்சலுடன் செயலாற்றுங்கள்' என்னும் இந்த இரண்டு சொற்றொடர்களையும், நான் 'பெரிதாகவே சிந்தியுங்கள்' என்னும் வெற்றி மந்திரத்துடன் இணைத்துப் பார்க்கவே விரும்புகிறேன். எனது இந்த வெற்றிக்கோட்பாடுகளை, உலகெங்கிலுமுள்ள பெருபாலான இளைஞர்கள் படித்து பயன்பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

ரியோ ஒகாவா
நிறுவனர் மற்றும் சி இ ஒ
ஹேப்பி சயின்ஸ் குழுமம்
பிப்ரவரி ***14, 2012***

ஆசிரியர் குறிப்பு

மாஸ்டர் ரியோ ஒகாவோ, 1981 ஆம் ஆண்டிலிருந்து சொர்க்கத்திலிருந்து தனது ஆன்மீகச் செய்திகளைப் பெறத் தொடங்கினார். உணர்ச்சி மிகுந்த செய்திகளுடன் அவர் முன்னால் தோன்றிய தூய ஆவிகள், கடவுளின் சொற்களை இந்த உலகத்துக்கு எடுத்து வழங்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுமாறு அவரிடம் வேண்டிக்கொண்டன. அந்த வருடத்திலேயே மாஸ்டர் ஒகாவாவின் ஆழ்மனது விழிப்படைந்தது; கடவுளின் பேருண்மை என்னும் மகத்தான சக்தியின் உதவியால் இந்த உலகத்துக்கு உயிர்ப்பூட்டும் ஒரு ஆன்மிகத் தலைவராக அவர் வெளிப்பட வேண்டியதன் அவாசியத்தை அவருக்கு தெளிவுப்படுத்தியது. புனித ஆத்மாக்களுடனான அவரது உரையாடலும், ஆழங் காண முடியாத ஆன்மீக அனுபவங்களும், அவரது போதனைகளின் மையக்கருவை உருவாக்க மாஸ்டர் ஒகாவாவுக்கு பேருதவி புரிந்தன. அவரது இந்த உரையாடல், கடவுள் எப்படி நமது ஆன்மாக்களையும், இந்த பூமி உட்பட பிற உலகங்களையும், இந்த பிரபஞ்சத்தின் அடிப்படை அம்சமான நீதிக்கோட்பாடுகளையும் உருவாக்கினார் என்பது பற்றிய அவரது புரிதலை மேலும் ஆழப்படுத்தியது. கடவுளின் வடிவங்களையும், நோக்கங்களையும் பற்றிய அவரது சிந்தனை தெளிவடைந்தது.

மாஸ்டர் ஒகாவா, 1986 இல், கடவுளின் பேருண்மையை பகிர்ந்து கொள்ளவும், சமயம் மற்றும் கலாச்சார மோதல்களிலிருந்து மனித குலத்தை விடுவிக்கவும், இந்த பூமியின் அமைதி யுகத்துக்கு கட்டியம் கூறவும் ஹேப்பி சயின்ஸ் என்னும் சமயம் சாரா சர்வதேச சமயத்தை நிறுவினார்.

எளிமையான, தனித்துவம் மிக்க சர்வதேசியமும், ஒருமைப்பாடும் மிகுந்த அவரது ஆன்மீக போதனைகள் உலகெங்கிலும், நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இலட்சக்கணக்கான வாசகர்களையும், சீடர்களையும் உருவாக்கியுள்ளது. 1600 புத்தகங்களுக்கும் மேல் எழுதியுள்ள ஒகாவா, 2,200 இக்கும் மேற்பட்ட சொற்பொழிவுகளும் நிகழ்த்தியுள்ளார். கடவுளின் பேருண்மையை உலகெங்கும் பகிர்ந்து கொள்ளும் அவரது பயணம் தொடர்கிறது.

ஹேப்பி சயின்ஸ்

இனம், சமயம், கலாச்சாரம் ஆகிய எல்லைகளைக் கடப்பதன் மூலம் மனித குலத்தை மகிழ்ச்சிக்கடலில் ஆழ்த்தும் ஹேப்பி சயின்ஸ் என்னும் ஆன்மீக இயக்கம், 1986 இல் மாஸ்டர் ஒகாவா அவர்களால் நிறுவப்பட்டது. அமைதியும், ஒத்துணர்வும் ஒன்று கலந்த ஒரு முன்மாதிரி உலகத்தை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கங்களில் முதன்மையானது. ஜப்பானில் துவங்கப்பட்ட ஹேப்பி சயின்ஸ் இன்று உலகமெங்கும் விரிந்து பரந்துள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம், மாஸ்டர் ஒகாவா அவர்களின் ஒளிமிகுந்த மெய்யறிவுச் சொற்களின் பாதையை அடியொற்றி வாழும் சீடர்களின் மகத்தான ஆதரவுதான்.

இப்போது உலகெங்கிலுமாக சுமார் ஒரு கோடிக்கும் அதிகமானோர் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். இதன் நம்பிக்கை மையங்கள் நியூயார்க், லாஸ் ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ, டோக்கியோ, லண்டன், சிட்னி, சாவோ பௌலோ, ஹாங்காங் போன்ற உலகின் பல்வேறு முக்கிய நகரங்களில் அமைந்துள்ளன. ஹேப்பி சயின்ஸ் மையங்களில் உரையாற்றும் மாஸ்டர் ஒகாவா, உலகெங்கும் பல்வேறு பொதுச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தி வருகிறார்., உள்ளூர் சமூகங்களுக்கு உதவும் விதத்தில் ஹேப்பி சயின்ஸ் பல வகையான நிகழ்ச்சிகளையும், சேவைகளையும் வழங்கி வருகிறது. இளைஞர்களுக்கான பள்ளிப்படிப்புக்கு முந்தைய, பள்ளிப்படிப்புக்கு பிந்தைய திட்டங்கள், முதியவர் மற்றும் மாற்றுத் திறனாளி சேவை போன்றவை அவற்றில் ஒரு சில. ஹேப்பி சயின்ஸ் உறுப்பினர்களின் சமூக மற்றும் அறக்கடளைச் செயல்பாடுகள் குறிப்பிடத் தகுந்தவை. சீனா, நியூசிலாந்து, துருக்கி ஆகிய நாடுகளில் நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கும்; தாய்லாந்து வெள்ளப் பெருக்கில் அவதியுற்றவர்களுக்கும் பல்வேறு நிவாரண உதவிகளை வழங்கியது அவற்றின் மனித நேய உதவிகளில் ஒரு சில. மட்டுமல்ல, உறுப்பினர்கள் இலங்கையில் பல்வேறு பள்ளிக் கூடங்களையும் கட்டிக் கொடுத்துள்ளனர்.

நிகழ்ச்சிகளும் திட்டங்களும்

ஹேப்பி சயின்ஸ் நம்பிக்கை மையங்கள் வாடிக்கையாக பல்வேறு நிகழ்ச்சிகளையும், திட்டங்களையும், கருத்தரங்குகளையும் நடத்தி வருகின்றன. எங்களுடைய தியான வகுப்புகள், வீடியோ பேச்சுகள், படிப்பு மையங்கள், கருத்தரங்குகள், புத்தக நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் பங்கு பெறுங்கள். கீழ்க்காணும் திட்டங்கள் உங்களுக்கு உதவும்.

- வாழ்க்கையின் அர்த்தமும், நோக்கமும் பற்றிய உங்கள் புரிதலை மேலும் விரிவுபடுத்த.
- நிபந்தனையற்ற அன்பு செலுத்துவது எப்படி என்பதைக் கற்றுக்கொள்வதன் மூலம் உங்கள் உறவை மேம்படுத்த.
- மனநெருக்கடி மிகுந்த நாட்களிலும் உங்கள் மனதை எப்படி அமைதியாக வைப்பது என்பதை கற்றுக் கொள்ளலாம். ஆழ் சிந்தனை, தியானம் ஆகியவற்றின் மூலம இது சாத்தியமாகிறது.
- வாழ்கையின் சவால்களை எப்படிக் கடப்பது என்பதைத் தெரிந்து கொள்ள.

சர்வதேச கருத்தரங்குகள்

ஒவ்வொரு வருடமும், ஜப்பானில் எமது நம்பிக்கை மையங்களில் நடைபெறும் சர்வதேச கருத்தரங்குகளில் பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த நட்பு மனங்கள் கலந்து கொள்கின்றன. வருடத்துக்கு வருடம் புதுப்புது நிகழ்ச்சிகள்; விதவிதமான தலைப்புகள். உறவுகளை மேம்படுத்துதல், பேரின்பத்துக்கான எட்டு வழிகள், உங்களேயே நேசியுங்கள்...போன்றவை அவற்றுள் ஒரு சில.

ஹேப்பி சயின்ஸ் மாத இதழ்

ஹேப்பி சயின்ஸ் மாத இதழில், அண்மையில் நிகழ்ந்த மாஸ்டர் ஒகாவாவின் பேச்சுக்களை படிக்கலாம். உறுப்பினர்களின் வாழ்க்கையை மாற்றிய அதிசய அனுபவங்கள், உலகெங்கிலுமுள்ள ஹேப்பி சயின்ஸ் குடும்ப உறுப்பினர்களைப் பற்றிய செய்திகள், ஹேப்பி சயின்ஸ் திரைப்படங்களைப் பற்றிய ஆழமான தகவல்கள், புத்தக மதிப்புரை... என்று ஏராளமான விஷயங்கள். ஹேப்பி சயின்ஸ் மாத இதழ் ஆங்கிலம், போர்த்துகீஸ், சீனம் உட்பட பல்வேறு உலக மொழிகளில் வெளியாகிறது. விண்ணப்பத்தின் மூலம் பழைய இதழ்களைப் பெறலாம். சந்தாதரர் ஆவதற்கு உங்கள் அருகாமைலுள்ள ஹேப்பி சயின்ஸ் மையத்தை தொடர்பு கொள்ளுங்கள்.

தகவல் தொடர்பு விபரங்கள்

ஹேப்பி சயின்ஸ் ஒரு உலகளாவிய நிறுவனம். இதன் "நம்பிக்கை மையங்கள்" உலகெங்கும் கிளைபரப்பியுள்ளன. அந்த மையங்களைப் பற்றிய விரிவான பட்டியலுக்கு அணுகுங்கள்:

World wide Directory at

www.happy-science.org/en/contact-us

ஹேப்பி சயின்ஸ் அமைப்பின் சில கிளைகள் வருமாறு:

சர்வதேசத் தலைமையகம்

டோக்கியோ
1-6-7Togoshi, Shinagawa, Tokyo 142-0041, Japan
Tel: 81-3-6384-5770 Fax:81-3-6384-5776
Email: tokyo@happy-science.org
Website:www.happy-science.org

இந்தியா

தில்லி
Email: newdelhi@happy-science.org
Mobile: +91/9873836008

மும்பை
Email:Mumbai@happy-science.org
Mobile: +91/9022417171

அவுரங்காபாத்
Email:Aurangabad@happy-science.org
Mobile: +91/8956101911

தமிழ்நாடு
Email:tamilnadu@happy-science.org

Mobile: +91/9655558786

கொல்கத்தா
Kolkata@happy-science.org
Mobile: +91/8100163194

புத்தகயா
Email: Mail:bodhgaya@happy-science.org

இலங்கை

கொழும்பு
149,"Freight House", Union Place, Colombo 2
"Tel:94-112-300464 or 94-71-1544536
Email: srilanka@happy-science.org

ஹேப்பி சயின்ஸ் நேபாளம்

Sitapaila-15 Kimdol, Word No.15
Kathmandu Nepal
Email:nepal@happy-science.org

ஹேப்பி சயின்ஸ் பல்கலைக்கழகம்

ஹேப்பி சயின்ஸ் பல்கலைகழகம், 2015 ஏப்ரலில் துவங்கப்பட இருக்கும் ஒரு தனியார் பல்கலைக்கழகமாகும். இது ஹேப்பி சயின்ஸ் குழும நிறுவனரும், அதன் தலைமை நிர்வாக அதிகாரியுமான மாஸ்டர் ரியோ ஓகாவா அவர்களின் சிந்தனையில் உருவானது. “மகிழ்ச்சியை நாடுதல்”, “புதிய நாகரிகத்தின் உருவாக்கம்” ஆகிய வழிகாட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் தனித்துவம் மிக்க ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்க வேண்டும் என்ற ஓகாவா அவர்களின் விருப்பமே இந்த நவீன பல்கலைக்கழகம்.

மனித மகிழ்ச்சியின் அடி ஆழங்களை, சமய நம்பிக்கைகளின் அடிப்படையில் தரிசிக்க, மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பதும்; உலக மேம்பாட்டிற்கான அடிப்படை அறிவையும், திறனையும் மாணவர்களிடம் உருவாக்குவதுமே இப்பல்கலைக்கழகத்தின் முக்கிய நோக்கம். ஹேப்பி சயின்ஸ் பல்கலைக்கழகத்தில் அமையவிருக்கும் மூன்று கல்விப் புலங்கள் வருமாறு:[13]

மனித மகிழ்ச்சிப் புலம்
(மனித மகிழ்ச்சித் துறை)

இப் புல மாணவர்களுக்கு மனித இனத்தின் ஒரு உன்னத நிலையைத் தேடிக் கண்டடைந்து, அதன் மூலம் மகிழ்ச்சி நிறைந்த ஒரு சமூகத்தை இனம் காண உதவும் பல்துறை சார்ந்த அணுகுமுறையுடன் கூடிய கட்டுப்பாடற்ற கலைக் கல்வி வழங்கப்படுகிறது.

வெற்றிதரும் நிர்வாகப் புலம்
(வெற்றிதரும் நிர்வாகத்துறை)

பல்கலைக்கழகத்தின் அடிப்படை கொள்கைகளின் அடிப்படையில், பலவகைப்பட்ட தொழில் நிறுவனங்களில் வெற்றிகரமான நிர்வாகத்தை வளர்தெடுப்பதே இப்புலத்தின்

நோக்கம். இந்த சமூகத்துக்கு நல்ல பண்புகளையும், செல்வ வளத்தையும் தர இயலும்; நிர்வாகம் மற்றும் அதன் பணியாளர் ஆகியோர் மட்டுமல்லாது, இந்த ஒட்டு மொத்த சமூகத்தின் வளர்ச்சிக்கும் மகிழ்ச்சிக்கும் தங்கள் பங்களிப்பை நல்கும் திறன் மிக்க மனிதர்களை உருவாக்குவதே இதன் முக்கிய நோக்கம்.

எதிர்காலத் தொழில் நிறுவனப் புலம்
(தொழிற்சாலை தொழில் நுட்பத்துறை

நாகரிக சமுதாயம் எதிர்கொள்ளும் சிக்கல்களுக்கு தொழில் நுட்ப ரீதியில் தீர்வுகளைக் கண்டடையும் பொறியாளர்களை உருவாக்குவதே இதன் நோக்கம். எதிர்கால தொழிற்சாலை உருவாக்கத்தில் இப்புல மாணவர்களின் பங்களிப்பு கணிசமாக இருக்கும்.

திட்டமிடப்பட்டுள்ள மாணவர் சேர்க்கை

- மனித மகிழ்ச்சிப் புலம் (மனித மகிழ்ச்சித்துறை): 75 மாணவர்கள்
- வெற்றிதரும் நிர்வாகப் புலம் (வெற்றிதரும் நிர்வாகத்துறை): 95 மாணவர்கள்
- எதிர்கால தொழில் நிறுவனப் புலம் (தொழிற்சாலை தொழில் நுட்பத்துறை): 90 மாணவர்கள்
- நான்காம் வருடத்தின்போது மொத்தம் 1,040 மாணவர்களைச் சேர்க்கும் திறன்.

அமைவிடம் திட்டப்பகுதி:

4427-1 Hitotsumatsu Aza Nakase Hei, Chosei - mura,Chosei-gun, Chiba Prefecture, Japan
கஸயசஸா இச்சினோமியா நிலையத்திலிருந்து 15 நிமிட கார் பயணம். அல்லது ஜேஒர் சோட்டாபோ சாலை வழியாக யாட்சுமி நிலையத்துக்கு.

முக்கிய வசதிகள்

கல்லூரி வளாகம், மாணவர் விடுதிகள், உடற் பயிற்சிக் கூடம்/ வகுப்பறை, உணவகம், விளையாட்டு மைதானம் போன்ற பல வசதிகள். மாணவர் விடுதியில் 480 மாணவர்கள் வரை தங்கலாம்

(இது மொத்த மாணவர் சேர்க்கையில் பாதிக்கும் மேல்). கல்லூரி வளாகத்தின் மேற்கூரை, பேரிடர் காலங்களில் சுமார் 3000 பேர் வரை பாதுகாப்பாக வெளியேற்றும் பகுதியாக மாற்றும் வசதி கொண்டது.

மேலும் தகவல்களுக்கு

ஹேப்பி சயின்ஸ் பல்கலைக்கழக கட்டுமான அலுவலகம்,
ஹேப்பி சயின்ஸ் அகாடமி
Utopia Katsudo Suishin-kan 8th floor, 2-10-8 Akasaka, Mintao-ku, Tokyo 107-0052, JAPAN
தொலைபேசி: 81-3-6441-0783
இணையதளம்: http://university.happy-science.jp/eng/

[13] கல்விப்புலங்களின் பெயர்கள் அதில் இடம்பெறும் படிப்புகளின் தன்மை ஆகியவை மாற்றத்திற்குட்டபட்டவை. அரசு அங்கீகாரத்துக்கான விண்ணப்பம் கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கபட்டுள்ளது.

ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டி

ஹேப்பி சயின்ஸ் குழுமத்தின் ஒரு பகுதியாக, 2009 மே மாதம் மாஸ்டர் ரியோ ஒகாவா அவர்களால் துவங்கப்பட்டதுதான் 'ஹேப்பினஸ் ரியலைசேஷன் பார்ட்டிக் (Happiness Realization Pary - HRP). இதன் முக்கிய நோக்கம் வட கொரியா மற்றும் சீனாவின் இராணுவ அச்சுறுத்தல் போன்ற தற்காலச் சிக்கல்கள் முதல், நீண்ட காலமாகத் தொடரும் பொருளாதார பின்னடைவு வரையிலான விஷயங்களில் ஜப்பானுக்கு நிலைத்த தீர்வுக்கான பரிந்துரைகளை வழங்குவது.

ஜப்பானிய அரசில் அதிரடி சீர்திருத்த நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், ஜப்பானில் அமைதியும், வளமும் நிரம்பச் செய்ய HRP திட்டமிட்டுள்ளது. இவற்றை நிறைவேற்ற HRP இரண்டு முக்கிய திட்டங்களை முன் வைக்கிறது:

1. தேசிய பாதுகாப்பு மற்றும் ஆசிய பிராந்திய சமநிலைக்கு அடிப்படைக் காரணியான ஜப்பான்-அமெரிக்க கூட்டுறவை வலுப்படுத்துதல்.

2. அதிரடி வரி குறைப்பு, எளிய நாணயப் பரிமாற்ற முறைகள், புதிய பிரமாண்ட தொழிற்சாலைகள் ஆகியவற்றின் மூலம் ஜப்பானிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

சர்வதேச அமைதிக்கு பங்களிக்கும் விதமாக, பலவகைப்பட்ட மதிப்பீடுகளும், நம்பிக்கைகளும் ஒன்றுக்குள் ஒன்றாக பின்னிப் பிணைந்து வாழும் ஒரு 'முன்மாதிரி சமய நாடாகக் ஜப்பான் தன்னை உருமாற்றிக் கொள்ள HRP வேண்டுகோள் விடுக்கிறது.

மேலும் விபரங்களுக்கு: www.hr-party.jp/en.

ஐஆர்ஹெச்

ஹேப்பி சயின்ஸ் அமைப்பின் வெளியீட்டுப் பிரிவான ஐஆர்ஹெச் பிரஸ் கம்பெனி லிமிடெட், டோக்கியோவில் 1987 இல் நிறுவப்பட்டது. இது சமயம், ஆன்மிகம், பருவ இதழ்கள் போன்றவற்றை வெளியிட்டு வருவதோடு, ஒலிபரப்பு மற்றும் திரைப்பட தயாரிப்பு நிறுவனமாகவும் செயல்பட்டுவருகிறது.

மேலும் விபரங்களுக்கு: OkawaBooks.com

ஜெய்கோ

ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ் 1946- இல் நிறுவப்பட்டது. உலகை உருமாற்றும் திறன் பெற்ற படைப்பாளர்களான ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தா, ஓஷோ, தலாய் லாமா, ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், ராபின் சர்மா, தீபக் சோப்ரா, ஜாக் கேன் ஃபீல்டு, ஏக்நாத் ஈஸ்வரன், தேவதத் பட்நாயக், குஷ்வந்த் சிங், ஜான் மாக்ஸ் வெல், பிரயான் டிரேஸி மற்றும் ஸ்டீபன் ஹாக்கின்ஸ் ஆகியோரின் வெற்றிப் படைப்புகள் பலவற்றை ஜெய்கோ வெளியிட்டு வருகிறது.

மறைந்த திரு. ஜமான் ஷா அவர்கள் ஒரு நூல் வினியோகக் கம்பெனியாகத்தான் ஜெய்கோவை துவங்கினார். நாட்டின் சுதந்திரம் வெகு தொலைவில் இல்லை என்பதை உணர்ந்த திரு. ஷா அவர்கள், தனது நிறுவனத்துக்கு ‘ஜெய்கோ’ என்று பொருத்தமாகப் பெயரிட்டார் (‘ஜெய்’ என்றால் ஹிந்தியில் ‘வெற்றி’ என்று பொருள்). வளர்ந்து வரும் ஒரு நாட்டில், நியாயமான விலை கொண்ட நூல்களின் தேவையைப் புரிந்துகொண்ட திரு. ஷா, வெகு விரைவிலேயே ஜெய்கோ பதிப்பகத்தை துவங்கினார். இந்தியாவில் மலிவு விலை புத்தகங்களை ஆங்கிலத்தில் முதன் முதலில் வெளியிட்ட நிறுவனம் ஜெய்கோதான்.

ஜெய்கோவின் புதினமில்லா நூல்களின் பட்டியல் சுய முன்னேற்றம், சமயம் மற்றும் தத்துவம், மனம்/ உடல்/ஆன்மா, வாணிபம் என்று பல்வேறு தலைப்புகளிலாக விரிந்துள்ளது. அதே வேளையில் மனதைக் கவரும் சுற்றுலா, நடப்பு நிகழ்வுகள், வாழ்க்கை வரலாறு மற்றும் நவீன அறிவியல் பற்றிய புத்தகங்களையும் நாங்கள் வெளியிட்டு வருகிறோம். நவீன புதினங்களை நோக்கிய எங்கள் மீள் பார்வையின் வெளிப்பாடுதான் செயல் திறன் மிகுந்த இளம் இந்திய மற்றும் உலகப் படைப்பாளர்களின் புதிய புத்தக வரிசை.

ஜெய்கோவின் உயர் கல்விப் பிரிவு, வணிக மேலாண்மை மற்றும் பொறியியல் மாணவர்களுக்கு உதவும் வகையில் எளிமையான நூல்களை வெளியிட்டு பரவலான கவனம் பெற்று வருகிறது; இந்த நூல்கள் நாடெங்கிலும் பரவலான வரவேற்பு பெற்று வருகின்றன.

தனது சொந்த படைப்புகளை வெளியிட்டு, வினியோகித்து வருவதோடு, பல்வேறு இந்திய மற்றும் சர்வதேச வெளியீட்டாளர்களின் புத்தகங்களையும் ஜெய்கோ வினியோகித்து வருகிறது. அந்த வகையில் ஒரு தேசிய வினியோகஸ்தராகவும் ஜெய்கோ தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. ஜெய்கோவின் தலைமையகம் மும்பையில் உள்ளது. இத்துடன் அகமதாபாத், பெங்களூரு, போபால், புவனேஷ்வர், சென்னை, தில்லி, ஹைதிராபாத், கொல்கத்தா மற்றும் லக்னோவிலும் ஜெய்கோவின் கிளைகளும், விற்பனை அலுவலகங்களும் செயல்பட்டு வருகின்றன.

Since 1946

நம்மில் பலருக்கும் இந்த உலகமே சிக்கல் நிறைந்ததாகத் தோன்றுகிறது. தாழ்வு மனப்பான்மையால் நாம் நாளும் சிதிலமடைந்து வருகிறோம். மற்றொரு புறம், அதீத நம்பிக்கையால் நமது வாழ்நாளின் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நம்மை நாமே துயரக்கடலில் ஆழ்த்திக் கொள்கிறோம்.

இந்த தாழ்வு மனப்பான்மை, அதீத நம்பிக்கை என்னும் இரண்டு உணர்வுகளுக்கும் இடையிலாக நமது உள் மனம் அங்குமிங்குமாக ஊசலாடிக்கொண்டிருக்கிறது. ஆனால் ‘பெரிதாகவே சிந்தியுங்கள்!’ என்னும் இந்த இருசொல் மந்திரம், வெற்றிகரமான எதிர்காலத்தை நோக்கி நம்மை பயணப்பட வைக்கிறது.

‘பெரிதாகவே சிந்தியுங்கள்!’ என்பது ‘நேர்மறையாய் சிந்தித்தல்’ மற்றும் ‘அபார துணிச்சல்’ ஆகியவற்றின் கூட்டிணைவுதானே தவிர வேறொன்றுமில்லை.

மிகப் பெரிய கனவுகளும், உச்சபட்ச செயல் திறனும், எந்த நிலையிலும் வாழ்க்கையை நமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் துணிச்சலும் உங்கள் எதிர்காலக் கனவுகளை வழிநடத்தும் உந்து சக்தியாகத் திகழட்டும்.

முதல் அடி எடுத்து வைப்பதுதான் அதி முக்கியம். அதன் பிறகு உங்கள் சுய திறன் மற்றும் புத்திசாலித்தனம் காட்டும் பாதையில் இயல்பாக நடைபயின்றால் போதும். உங்கள் கனவுகள் மெய்ப்பட இந்த புத்தகம் உங்களுக்குப் பெரிதும் உதவும்.

ரியோ ஒகாவா ஒரு ஆன்மிகத் தலைவர். தற்கால தொலைநோக்கு சிந்தனையாளர். ‘மகிழ்ச்சி அறிவியல்’ (Happy science) அமைப்பின் நிறுவனர். உண்மை, மகிழ்ச்சி ஆகியவற்றுக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர்.

ஜப்பானில் 1956 இல் பிறந்த ருயுஹோ, டோக்கியோவில் சட்டக் கல்வியும், பின்பு நியூயார்க்கில் சர்வதேச பொருளியலும் படித்தார். 1986 இல் ஒரு மிகப்பெரிய ஜப்பானிய வர்த்தக நிறுவனத்தில் தனது தொழில் பயிற்சியைத் துவக்கினார்; தொடர்ந்து ‘மகிழ்ச்சி அறிவியல்’ அமைப்பையும் நிறுவினார்.

1987 இல் ஐஆர்ஹெச் பிரஸ் கம்பெனி லிமிடெட் என்னும் நிறுவனத்தை உருவாக்கினார். அன்றிலிருந்து இன்று வரை சுமார் 2,000க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார். இவரது சில பிரபல நூல்கள்: தி லாஸ் ஆஃப் தி சன், தி கோல்டன் லாஸ் மற்றும் தி லாஸ் ஆஃப் எட்டர்னிட்டி.

Elevate Your Life. Transform Your World.

JAICO BOOKS

www.jaicobooks.com Self-Help